ஸ்ரீராமாநுஜன் 106.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சி. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 9	ஹேவிளம்பிஸு ஐப்பசிமீ 1957ஸு அக்டோபர்மீ	மலர் 10

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம்—106

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர் * அவைதன்னொடும்வந்
திருப்பிடம் மாயனிராமாநுசன்மனத்து, இன்றவன்வந்
திருப்பிடம் * என்றனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

அன்பர்களுக்கு அறிவிப்பு.

ஆசார்யஹ்ருதயம் மூலம்மட்டும் தமிழ் லிபியில் பதிப்பு வெகுகாலமாகவே துர்லபமாயிருக்கின்றபடியால் அது வெளிவரவேணுமென்று பலர் கோரினதற்கிணங்க இவ்விதழில் ஆசார்யஹ்ருதய மூலம் சுத்தப்பதிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. அத்துடன், ஆசார்யஹ்ருதயபாட பரிஷ்காரம் என்கிற நமது நூலும் 'இப்போது அரிது' என்னுங்காரணத்தினாலேயே மறுபதிப்புச் செய்யப்பட்டு இதில் வெளிவருகின்றது. இப் பரிஷ்காரநூல் பலவாண்டுகட்குமுன் எழுதப்பட்டதாயினும் இப்போது அபூர்வமாகப் பலவிஷயங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் "ஆழ்வார் திகைப்பு" என்று மகுடம் புனைந்த வியாஸம் அபூர்வமான பல விஷயங்களைக் கொண்டுள்ளதனால் பூர்வாசார்ய திவ்யஸூக்தி ரஸிகர்களால் ஆழ்ந்த அநுபவத்துடன் ஆராயத்தக்கது.

சென்ற தைமாதத்தில் திருப்பாவை விசேஷார்த்தமலர் ஒன்று வெளியிடப்பட்டிருப்பது அன்பர்களுக்கு நினைவிருக்கும். அதில் முன் பதினைந்து பாசுரங்களுக்கே விசேஷார்த்தவுரை வெளிவந்துள்ளது. பின் பதினைந்து பாசுரங்களுக்கு உரை நாளை மார்கழிமாதப்பிறப்புக்கு முன்னமே வெளிவந்து மகிழ்விக்கும்.

இருள்தருமாஞாலம் இருள் மூடிற்று அந்தோ!

ஸ்ரீபெரும்பூதூரில் எழுந்தருளியிருந்த சதுச்சாஸ்த்ர வித்வத் ஸார்வபௌம ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்ய

ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி

யென்னும் ஜ்ஞான ஸூர்யன் அஸ்தமித்த சோகம் இவ்வுலகுக்கு விரைவில் மறக்க வொண்ணாதது.

ஸ்ரீ ஸ்வாமிகள் நேற்று புரட்டாசிமீ 23உ க்ருஷ்ணபக்ஷ ப்ரதமை புதன் கிழமை பகல் 3 மணிக்கு ஸ்ரீபெரும்பூதூரில் திருநாட்டுக் கெழுந்தருளின செய்தியைக் கேட்டவர்கள் யாவரும் திகைத்து நிற்பதன்றி வேறொன்றும் செய்யகில்லார். வித்வத் சப்தார்த்தம் ஸ்ரீஸ்வாமியோடு முற்றுப்புள்ளியிடப் பெற்றதென்றால் மிகையாகாது. ஸ்ரீஸ்வாமி எழுபத்தைந்து திருநக்ஷத்ரங்கள் மணவாளமாமுனிகளைப்போல இந்த விபூதியை அலங்கரித்திருந்தது நம்முடைய பாக்ய விசேஷமென்றுகொண்டு உகந்திருக்க ப்ராப்தம். ஸ்ரீஸ்வாமியின் திருக்குமாரர்கள் மூவரும் ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரப்ரவீணர்களாய்த் திகழ்வது குறிப்பிடத்தக்கது. "த்ரிநாகே நிஹிதம் தேஜ: ஸமித்தேவ ஹுதாஸந:" என்றகணக்கிலே த்ரேதாக்நிகள்போன்ற இம்மூவரும் இனி க்ரமேண அதிகப்ரகாசமடையவேணுமென்று ஆசாஸிக்கிறோம்.

ஸ்ரீராமாநுஜனுக்குச் சந்தா செலுத்தியவர்கள்.

97. ஸ்ரீமான். K. S. ராமநாதஞ் செட்டியார், களம்பூர்.
98. ,, S. R. ராமஸ்வாமி ஐயங்கார், மதுரை.
99. ,, R. சடகோப ரெட்டியார், ஆலப்புழை.
100. ,, A. N. பரசுராமையர், எழும்பூர்.
101. ,, S. A. சிங்காரம் பிள்ளை, மண்ணடி.
102. ,, T. ஆராவமுதய்யங்கார், அட்வகேட், G. T.
103. ,, ஆசால். சேஷாசாரியர், அட்வகேட், திருவல்லிக்கேணி.
104. ,, கூரம். வீ. நரஸிம்ஹாசாரியர், அம்ருதூர்.
105. ,, D. R. ராமலிங்க ரெட்டியார், கடுகப்பட்டு.
106. ,, V. A. ஐயங்கார், Fort Bombay.
107. ஸ்ரீமதி G. ஸரோஜினீ, நாச்சியாபுரம்.
108. ஸ்ரீமான். A. கோபாலையங்கார், மிராசுதாரர், ஆமூர்.
109. ,, T. S. ராகவாசாரியர், மயிலை.
110. ,, K. கோவிந்தசாமிப்பிள்ளை, நாராயணமங்கலம்.
111. ,, N. வீரராகவுலு நாயுடு, ஸப்-ரிஜிஸ்ட்ரார், காஞ்சீபுரம்.
112. ,, K. M. ராமாநுஜம், Periyar Project.
113. ,, விரக்தி. ஸ்ரீநிவாஸாசாரியர், முஸரவாக்கம்.

ஸ்ரீ:

பிள்ளையுலகாசிரியர் திருத்தம்பியாரான

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

அருளிச்செய்த

ஆசார்ய ஹ்ருதயமும்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

ஆசார்ய ஹ்ருதய பாடபரிஷ்காரமும்.

ஸ்ரீராமாநுஜன் வெளியீடு,

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

சென்னை ரத்னம் பிரஸ் அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

1957

விலை 1—0—0

ஸ்ரீ

ஆசார்யஹ்ருதய சூர்ணிகைகளின்

அகராதிக் குறிப்பு

[லக்கம் - சூர்ணிகைகளின் வரிசை லக்கம்]

அங்கீகரிக்க அவகாசம்	186	இந்த உட்பொருள்	38
அங்கு நம்பிசரணென்று	192	இந்த வுதிரத்தரிப்பு	13
அச்சேத்ய மென்னுமது	132	இப்பிறப்பே சிலநாளில்	103
அஜ்ஞர் ப்ரமிக்கிற	86	இயற்பா மூன்றும்	50
அடிதொழுதெழென்ற	213	இராளெணில் நசவர்க	125
அடியோம் தொடர்ந்து	120	இருத்துமெண்டானாய்	202
அணையவூரப்புனைய	87	இருந்தமையென்றது	231
அதவா வேதவேத்ய	70	இருள் துயக்குமயக்கு	98
அதாவது மயர்வற	97	இவர்கள் தேடிநிற்க	124
அதில் ஸம்ஸ்க்ருதம்	40	இவற்றால் வரும்	116
அதில் ஸித்ததர்மவிதி	193	இவற்றாலே ஸாதாரணம்	30
அது ஐவரை வெல்வித்து	191	இவற்றில் ப்ராவண்யம்	187
அதுக்கு மூலம் யான்	93	இவற்றுக்குக் காரணம்	6
அதுக்கு மூலம் "விதயச்ச"	66	இவற்றுக்கு மந்த்ர	208
அதுக்கு ஹேது	94	இவற்றுக்கு மூலம்	8
அது தத்வோபதேசம்	190	இவற்றுக்கு விதிராகங்கள்	27
அதுதானும் ஆஸ்திக்ய	15	இவற்றுக்கெல்லை	4
அத்யயநஜ்ஞாநாநு	37	இவன் நடுவே	112
அத்ரி ஜமதக்நி	92	இவை கிட்டமும் வேட்டு	11
அநந்தக்லேச	5	இவை ஜ்ஞாநதர்சன	233
அந்தணர் மறையோர்	34	இவை ஸ்வரூபத்தை	20
அபிலாஷா சிந்தநாநு	136	இறுகலிறப்புக்கும்	143
அருள் முடிய	29	இன்பு மன்பும் முற்படுவது	222
அவகாஹித்தரை	176	உண்ணாது கிடந்தோர்	123
அவர்களுக்குக் காயோடே	60	உதாத்தாதி பதக்ரம	69
அவன் முனிந்தார்க்கு	197	உபயப்ரதாநப்ரணவ	161
அவித்யாநிவர்த்தக	234	உயிர் மாய்தல்	200
அழுநீர் துளும்ப	61	உறக்கம் தலைக்கொண்ட	49
அழும் தொழும்	127	உருமையோடே	229
அறியாதார்க்கு	196	ஊரார் நாட்டார்	142
அளிப்பானடியேன்	209	ஐந்தினோடொன்பதோடு	215
அன்றிக்கேஸ்வரூபகுண	54	எண்டிசையுமகல்	227
ஆசறுதூவியென்னும்	154	எண்ணிலாக் குணங்கள்	225
ஆதித்யராமதிவாகர	83	எண்ணிலும் வரும்	109
ஆப்திக்கு இவர்	67	எவ்வுலகத்தெவ்வெவையும்	39
ஆவரென்று தானே	223	எழுவதோருரு	130
ஆற்றில் துறையில்	80	எற்றைக்குமென்றது	129
இடகிலேன் நோன்பறிவி	102	என்பெறுதியென்ன	152
இதின் ஔபாதிகத்வம்	89	என்னதுன்னதாவியிலே	201
இது உபயமுமன்றிக்கே	101	என்னையும் யாவர்க்கும்	224

ஏதந்நிமித்தம் முன்னமே	10
ஒரு தலையில் க்ராமகுலாதி	35
ஒன்று கூடின்தாய்	12
கடிதகடகவிகடநா	168
கண்வலைப்படாதே	153
கதிர்ஞானமூர்த்திக்கு	199
கமலக்கண்ணனென்று	230
கருவுள் வேறலாமை	57
கர்மக்ருபாபீஜம்	9
கர்மகைங்கர்யங்கள்	26
கலை வளர அஹம்	147
கல்பாதியில் தோற்றிற்று	55
களைகணற்றுரை	164
காருணிகனை	1
கீழைமேலை வடக்கிலவை	141
குழலில் நெஞ்சும்	128
கைம் முதலிழந்தார்	169
கோஸலகோகுல	105
குருசிஷ்ய க்ரந்த	64
கோவ்ருத்திக்கு	96
க்யாதிலாபபூஜா	205
க்ருஷ்ணக்ருஷ்ணத்வைபா	77
சதுர்விதமான	16
சந்தோகனென்று	52
சரண்ய முகுந்தத்வம்	181
சரதுசனம் நண்ணு	214
சாஸ்த்ரிகள் தெப்பக்	19
சிறு சீரார்சுளகு	144
சுரிகுழல் அஞ்சன	228
சூழ்ச்சி அகற்றினீரெ	138
செந்திறத்த தமிழ்	41
செய்த நன்றி	108
சென்று சேர்வார்க்கு	170
சேர்ப்பாரைப் பக்ஷி	150
சேஷத்வபஹிர்ப்பூத	88
சேஷத்வ போக்த்ருத்வ	21
சொல்லப்பட்ட வென்ற	46
சோராத மூவா	220
ச்ரமணீ விதுர	95
ச்ரம மனம் சூழும்	173
ஜநகதசரதவஸுதேவ	82
ஜந்மாந்தரஸஹஸ்ர	99
ஜாத்யாச்ரமதீக்ஷைகளில்	31
ஜ்ஞாநசதுர்த்திகளின்	22
ஜ்ஞாநத்தில் தம்பேச்சு	118
தமருகந்த அடியோமு	158
தமிழ் மாமுனிதிக்கு	91
தம்பிழையும் சிறந்த	156
தர்மவீர்ய ஜ்ஞானத்தாலே	58
தாய்க்கும் மகனுக்கும்	204
தாயாரேதலர்	139
தேவத்வமும் நிந்தையான	81
தேவிமார் பணியாநேர்	226
தேறும் கலங்கியென்று	119
தோல்புரையே போமதுக்கு	18
தோழிமாரன்னையர்	135
த்யாஜ்ய தேஹவ்யாமோஹம்	185
த்யாஜ்யோபாதேயங்கள்	3
த்வயார்த்தம் தீர்க்க	210
நண்ணுதார் மெய்யிலூன்	203
நலமருளினன்	114
நால்வேதங்கண்ட	47
நாலயலார் அயற்சேரி	140
நரலில் ஒன்று ப்ரவர்த்தகம்	24
நிலாமுற்றம் ப்ரஜ்ஞா	146
நீர்பால் நெய்யமுதாய்	188
பகலோலக்கமிருந்து	157
பகவத் பக்தபரங்கள்	217
பகவன் ஞானவிதி	194
பட்டத்துக்குரியவானையும்	106
பட்டம் சூடகமாவன	148
படைத்தான் கலியென்ற	48
பந்துகழல் பாவை	149
பரத்வ காரணத்வ	218
பரபரனாய் நின்ற	219
பரமஸத்வத்தோடே	56
பலஸாதந தேவதாந்தர	62
பாட்டுக்கு க்ரியையும்	216
பாரத கீதைகளின்	68
பாஷ்யகாரர் இதுகொண்டு	65
பிரிந்த துன்பக்கடல்	180
பிரியில் இலேனுக்கு	126
புணர்தொறுமென்ன	115
புண்ணியம் பாவம்	117
புரவியேழொருகாலுடைய	53
பூண்டநாள் சீர்	155
பெருக்காறு பலதலைத்து	131
பெரும்பாழில் க்ஷேத்ர	104

பெரும் புறக்கடலும்	74
பெற்றும் பேறிழந்தும்	78
பேச்சுப் பார்க்கில் கள்ள	76
போக்ய பாகத்வரை	177
போகத்தில் தட்டுமாறும்	178
ப்ரவண சித்தம்	171
ப்ரஹ்ம நிஷ்டரும்	206
ம்ருத்கடம் போலன்றே	73
ம்லேச்சனும் பக்தனால்	85
மண்டினாரும் மற்றை	28
மண்ணாடின ஸஹ்ய	71
மண்ணோர் விண்ணோர் வைப்பில்	160
மதியாலிசைந்தோம்	110
மயில் பிறைவில் லம்பு	137
மனம் செய் எல்லையில்	189
மஹாத்மாக்கள் விரஹம்	179
மஹாமதிகள் அச்சம்	174
மாதவன் மலை	111
மார்க்கபந்து சைத்யம்	182
மாலை கங்குல் காலை	145
மாவுருவில் கள்ளவேடம்	90
மீன நவநீதங்கள்	79
முடிந்த அவாவென்றது	232
முந்நீர் வாழ்ந்தார்	107
முனிவரையிடுக்கியும்	17
முழுதுமாய் எங்கணும்	221
முற்பாடர்க்கு க்ரியா	25
முளைத்தெழுந்த	23
மூன்றில் சுருக்கிய	211
மெய்ந்நின்று மங்கவொட்டு	207
மெலிவிலும் சேமம்	165
மேகம் பருகின	72
மோக்ஷதாநத்தில்	184
ரஹஸ்யத்துக்கு	212
ராமாயணம் நாராயண	63
ருக்கு ஸாமத்தாலே	51
ருசிவிவசர்க்கு	163
வடமொழி மறை	42
வத்ஸலையான மாதா	14
வம்சபூமிகளை யுத்தரிக்க	84
வரவாறில்லை வெறிதே	113
வன்பெருவானக	159
வித்யை தாயாகப் பெற்று	121
விப்ரர்க்கு கோத்ரசரண	36
விவேக பலம்	2
விவேக முகராய்	151
விளம்ப விரோதம்	167
வீட்டின்ப வின்பப்பாக்களில்	75
வேதசதுஷ்டயாங்க	43
வேதநூல் இருந்தமிழ்நூல்	45
வேத வித்துக்களும்	33
வேதவேத்ய வைதிகோப	195
வைஷ்ணவவாமநத்தில்	162
வ்யவஸாயஜ்ஞர்	166
ஸகல வித்யாதிக வேதம்	44
ஸகி வெறி விலக்கி	134
ஸத்வாஸத்வ நிதாநம்	7
ஸம்பந்தோபாய பலங்களில்	133
ஸைந்ய புத்ரசிஷ்ய	183
ஸாதநஸாத்யங்களில்	32
ஸாதநஸாத்யஸ்த	198
ஸாதரரைப் பரிசழிக்கும்	172
ஸாத்யஹ்ருதிஸ்தனாயும்	175
ஸ்வாத்யாய யோகங்களை	59
ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர்	100

ஆசார்யஹ்ருதய சூர்ணிகை

அகராதிக் குறிப்பு

முற்றிற்று.

ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ள முக்கிய விஷயங்களின் ஸங்க்ரஹம் வருமாறு :—

ஸாராஸார விவேகம் பண்ணுகைக்கு எம்பெருமான் சாஸ்த்ரங்களை யருள்செய்தது.

அந்த சாஸ்த்ரங்களினுல் தத்வஜ்ஞானம் பிறப்பதன் அருமையை நோக்கி ஸகல சாஸ்த்ர தாத்பர்யமான திருமந்த்ரத்தை வெளியிட்டருளினது.

சாஸ்த்ரங்களினுடையவும் அவற்றின் தாத்பர்யமான திருமந்த்ரத்தினுடையவும் விஷய பேதம் முதலியன.

அவையிரண்டிலும் ஊற்றமுடைய அதிகாரிகளின்ப்ரகாரங்களுரைத்தல்

அந்த வியாஜத்தாலே ப்ரஸ்துதமான திருவாய்மொழியின் வைபவம்.

அதுக்கு வக்தாக்களான ஆழ்வார்களின் பிரபாவம்.

அந்த ப்ரபாவத்துக்கு மூலமான பகவந்நிர்ஹேதுக கடாக்ஷம்.

அந்த கடாக்ஷமடியாக இவர்க்குண்டான ஜ்ஞாந பக்திகள்.

அந்த ஜ்ஞாநபக்தி தசைகளில் இவர் பேசும் பேச்சுக்கள்.

அந்த பக்தி தசையில் பகவத்ப்ரேமயுக்த ரெல்லாரோடும் இவர்க்குண்டான ஸாம்யம்.

அந்த பக்தி தசையில் பேசும் அந்யாபதேசங்களுக்கு ஸ்வாபதேசங்கள்.

அந்த பக்திக்கு இலக்கான திவ்ய தேசங்களில் நிற்கிற எம்பெருமானது குண விசேஷங்கள்.

அந்த குணங்கள் மலிந்த எம்பெருமானை யநுபவித்து அவ்வநுபவம் உள்ளடங்காமே புறவெள்ளமிட்டு திவ்ய ப்ரபந்தங்கள் அவதரித்தமை.

பொருளொற்றுமையினுல் கீதைக்கும் திருவாய்மொழிக்குமுள்ள ஸாம்யம்.

கீதையிற் காட்டிலும் திருவாய்மொழிக்கு உண்டான ஏற்றம்.

இதில் ஆழ்வா ருபதேசிக்கிற விஷயபேதம்.

அவ்வோவிஷயங்கள்தோறு முபதேசிக்கிற அர்த்தவிசேஷங்கள் கூறல்.

அந்த வ்யாஜத்தாலே உபதேசத்திற்கு இலக்கான சிஷ்யனது லக்ஷணங் கூறுதல்.

அந்த லக்ஷணமில்லாதார்க்கும் இவர் உபதேசிக்கைக்கு ஹேதுக்களும், உபதேசம் பலித்தமையும்.

உபதேசிக்கிற இத்திவ்ய ப்ரபந்தங்கள் ரஹஸ்யத்ரயார்த்த மென்பது.

அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்த பஞ்சகமும் இப்பிரபந்தங்களிலே ஸங்க்ரஹ விவரணரூபேண சொல்லப்படுகின்றமை.

ப்ரபந்தாரம்பங்களில் செய்ய வேண்டிய மங்களாசரணங்கள் இப்ப்ரபந்தாதியிலுண்டானமை.

ஸாதுபரித்ராணுதிகளாலே ஜகத்ரக்ஷணார்த்தமான ஸர்வேச்வராவதாரம் போலே இப்ப்ரபந்தாவதார மென்பது.

இதில் பத்துப்பத்தாலும் பிரதிபாதிக்கப்பட்ட ஈச்வரனுடைய பரத்வாதி குணங்கள்.

அக்குணக்கடலானவன் இப்பத்துப்பத்தாலும் ஆழ்வார்க்கு தத்வஜ்ஞாநம் முதலாக ப்ராப்திபர்யந்தமாகப் பிறப்பித்த தசா விசேஷங்கள்.

பத்துத்தோறும் இவர் தாம் பிறர்க்கு உபதேசித்த ப்ரகாரங்கள்.

இவர்க்கு முதலிலேயே ஆர்த்தி பிறந்திருக்கச் செய்தே ஈச்வரன் இவரை இங்கு வைக்கைக்கு ப்ரதாந அப்ரதாந ஹேதுக்கள்.

இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற தசா விசேஷங்கள் தோன்றுமிடங்கள்.

திருவாய்மொழியாயிரத்தின் ஒன்றான தாற்பரியத்தைக் கூறிமுடித்தல்.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரமித்யாதி—ப்ரணதோஸ்மி நித்யம்.

ஆசார்யஸ்வாந்தவக்தாரம் அபிராமவராபிதம்;
ஸ்ரீக்ருஷ்ணதநயம் வந்தே ஜகத்குருவராநுஜம்.

த்ராவிடாம்நாயஹ்ருதயம் குருபர்வக்ரமாகதம்
ரம்யஜாமாத்ருதேவேந தர்சிதம் க்ருஷ்ணஸூநுநா.

பணவாளரவணைப் பள்ளிபயில்பவர்க் கெவ்வுயிரும்
குணபோகமென்று குருகைக்கதிபனுரைத்ததுய்ய
உணர்பாவினுட் பொருளொன்று மறியாவுலகறிய
மணவாளன் மாறன்மனமுரைத்தான் வண்டுமூடும்பைவந்தே.

மாதவத்தோன் மாறன்மனம் கூறும் மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோரான பெற்றார்—நீதியினால்
ஆங்கவர்தாள் சேர்பெற்றாராபிமணவாளமுனி
பூங்கமலத்தாள்கள் நெஞ்சே போற்று.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
திருவடிகளே சரணம்.

ஸ்ரீரஸ்து

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

அருளிச்செய்த

ஆசார்ய ஹ்ருதயம்.

(முதல் ப்ரகரணம்)

1. காருணிகனான ஸர்வேச்வரன் அறிவிலாமனிசர் உணர்வென்னும் சுடர்விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தா வேத விளக்கைக்கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினாலருள் செய்தான்.

2. விவேகபலம் வீடுபற்று.

3. த்யாஜ்யோபாதேயங்கள் ஸுகதுக்கங்கள்.

4. இவற்றுக்கெல்லை இன்புதுன்பளி பன்மாமாயத்தழுந்துகையும், களிப்பும் கவர்வுமற்றுப் பேரின்பத்தின்புறுகையும்.

5. அநந்தக்லேச நிரதிசயாநந்த ஹேது—மறந்தேன் அறியகிலாதே உணர்விலேன் ஏணிலேன் அயர்த்தென்றும், உய்யும்வகை நின்றவொன்றை நன்கறிந்தனன் உணர்வினுள்ளே ஆம்பரிசென்றும் சொல்லுகிற ஜ்ஞாதவ்ய பஞ்சகஜ்ஞாநாஜ்ஞாநங்கள்.

6. இவற்றுக்குக் காரணம் இரண்டிலொன்றினில் ஒன்றுகைகள்.

7. ஸத்வாஸத்வநிதாநம் இருள்தரும் அமலங்களாகவென்னும் ஜன்ம ஜாயமாநகாலகடாக்ஷங்கள்.

8. இவற்றுக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்.

9. கர்மக்ருபாபீஜம் பொய்ந்நின்ற அருள்புரிந்த வென்கிற அவித்யா ஸௌஹார்தங்கள்.

10. ஏதந்நிமித்தம் முன்னமே முதல்முன்னமேயான அசிதயநாநாதி ஸம்பந்தங்கள்.

11. இவை கிட்டமும் வேட்டுவேளானும் போலே ஒண்பொருள் பொருளல்லாத(வை) என்னாதே நானிலாத யானுமுளனாவனென்கிற ஸாம்யம்பெறத் தின்றாதி அந்தமும் வாழ்வுமாகிற ஹாநிஸத்தைகளை யுண்டாக்கும்.

12. ஒன்று கூடினதாய் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழவடியே னென்னுமதொன்றுமே ஒழிக்க வொழியாதது.

13. இந்தவுதிரத்தரிப்பு த்ரைகுண்ய விஷயமானவற்றுக்குப்ரகாசகம்.

14. வத்ஸலையானமாதா பிள்ளை பேகணியாமல் மண்தின்ன விட்டு ப்ரத்யௌஷதமிடுமாபோலே எவ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமானவிவனும் ருசிக்கீடாகப் பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே.

15. அதுதானும் ஆஸ்திக்யவிவேக அந்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களை யுண்டாக்கினவழி.

16. சதுர்விதமான தேஹவர்ணாச்ரமாதிகார பல மோக்ஷ ஸாதந கதி யுகநர்மவ்யூஹ ரூபக்ரியாதிகளை அறிவிக்கிற பாட்டுப் பரப்புக்கு—பெரிய தீவினில் ஒன்பதாம் கூறும் மானிடப் பிறவியும் ஆக்கை நிலையும் ஈரிரண்டிலொன்றும் இளமையு மிசைவு முண்டாய். புகுவரேலு மென்கிறதுக்குள்ளே விக்நமற நின்றவா நில்லாப் ப்ரமாதியைக் கொண்டு அறக்கற்கை அரிதென்றிறே வேதஸாரோபநிஷத் ஸாரதராநுவாக ஸாரதம காயத்ரியில் முதலோதுகிற பொருள்முடிவான சுருக்கைத் தெய்வவண்டாய் அன்னமாய் அமுதம் கொண்டவன் சாகைகளிலும் ஓதம்போல்கிளர் நால்வேதக் கடலிலும் தேனும் பாலு மமுதுமாக வெடுத்துப் பெருவிசும்பருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.

17. முனிவரை யிடுக்கியும் முந்நீர் வண்ணனையும் வெளியிட்ட சாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.

18. தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும்; மனமுடையீரென்கிற ச்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்னும்படி ஸர்வருமதிகாரிகள்.

19. சாஸ்த்ரிகள் தெப்பக்கையரைப்போலே இரண்டையு மிடுக்கிப் பிறவிக்கடலை நீந்த ஸாரஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப் போலே இருகையும் விட்டுக் கரைகுறுகும் காலமெண்ணுவர்கள்.

20. இவை ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந் துணரவும் உணர்வைப் பெறவூர மிகவுணரவுமுண்டாம்.

21. சேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்.

22. ஜ்ஞாந சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்கு உதயம்.

23. முளைத்தெழுந்த ஸூர்யதுல்யயாதாத்ம்யசரமம் விதியில் காணும் ப்ரதமமத்யமதசைகளைப் பகல்விளக்கும் மின்மினியுமாக்கும்.

24. நாலில் ஒன்று ப்ரவர்த்தகம், ஒன்று நிவர்த்தகம்.

25. முற்பாடர்க்கு க்ரியாங்கமானவை யிரண்டும் செயல் தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வநிர்பந்தமறுக்கும்.

26. கர்மகைங்கர்யங்கள் ஸத்யாஸத்ய நித்யாநித்ய வர்ண தாஸ்யாநு குணங்கள்.

27. இவற்றுக்கு விதிராகங்கள் ப்ரேரகங்கள்.

28. மண்டினூரும் மற்றையாருமாச்ரயம்.

29. அருள்முடிய நிறுத்தி அடைய நின்றதும் நல்லதோரருள்தன்னாலே நன்று மெளியனுகிறதும் விஷயம்.

30. இவற்ருலே ஸாதாரண மஸாதாரண மென்னும்.

31. ஜாத்யாச்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள்போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.

32. ஸாதநஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸ வ்ருத்திகளென்று துறைவேறிடுவித்தது.

33. வேதவித்துக்களும் மிக்க வேதியரும் சந்தஸாம் மாதாவாலும் அதுக்கும் தாயாய் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்குமது இருவர்க்கும் ச்ரேஷ்ட ஜந்மம்.

34. அந்தணர் மறையோரென்றும் அடியார் தொண்டரென்றும் இவர்களுக்கு நிரூபகம்.

35. ஒருதலையில் க்ராமகுலாதிவ்யபதேசம் குலந்தருமென்னும் மாசில் குடிப் பழியென்று பதியாகக் கோயிலில் வாழுமென்பர்கள்.

36. விப்ரர்க்கு கோத்ர சரண ஸூத்ர கூடஸ்தர் பராசர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்ந ஜநகூடஸ்தர் பராங்குசபரகால யதிவராதிகள்.

37. அத்யயநஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்ய மாகிறப்போலே சந்தங்களாயிரமுமறியக் கற்று வல்லாராஞல் வைஷ்ணவத்வ ஸித்தி.

38. இந்த உட்பொருள் கற்றுணர்ந்து மேலைத்தலைமறையோராகாதாரை அயல்சதுப்பேதிமாரென்று உத்பத்தி நிரூபிக்கும்.

39. எவ்வுலகத் தெவ்வெவையும் என்கையாலே வேதம் பஹுவிதம்.

40. அதில், ஸம்ஸ்க்ருதம் த்ராவிடமென்கிற பிரிவு ருகாதி பேதம் போலே.

41. செந்திறத்ததமிழென்கையாலே ஆகஸ்த்யமுமநாதி.

42. வடமொழிமறையென்றது தென்மொழிமறையை நினைத்திறே.

43. வேதசதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினுலும்போலே இந்நாலுக்கும் இருந்தமிழ்நூல் புலவர் பனுவலாறும், மற்றையெண்மர் நன்மாலைகளும்.

44. ஸகலவித்யாதிகவேதம்போலே இதுவும் திவ்யப்ரபந்தப்ரதாநம்.

45. வேதநூல் இருந்தமிழ்நூல் ஆஜ்ஞை ஆணை வசையிலேதமில் சுருதி செவிக்கினிய ஓதுகின்றதுண்மை பொய்யில்பாடல் பண்டை நிற்கும் முந்தையழிவில்லா வென்னும் லக்ஷணங்களாக்கும்.

46. சொல்லப்பட்ட வென்றவிதில் கர்த்ருத்வம் ஸ்ம்ருதி அத்தை ஸ்வயம்பூ படைத்தானென்றது போலே.

47. நால்வேதம்கண்ட புராணரிஷி மந்த்ரதர்சிகளைப் போலே இவரையும் ரிஷிமுனி கவியென்னும்.

48. படைத்தான்கவி யென்றபோதே இதுவும் யதாபூர்வ கல்பநமாமே.

49. உறக்கம் தலைக்கொண்டபின்னை மறைநான்குமுணர்ந்த தங்களப்பனோடே ஓதின சந்தச்சதுமுகன் சலங்கலந்த வெண்புரிநூல் மானுரி திரிந்துண்ணும் காமனுடல் இருக்கிலங்கு ஜ்யேஷ்டபுத்ராதிகளுக்கு மறைபயந்தாப்போலே ஆதுமில் காலத் தெந்தையான வாய்முதலப்பன் பிரமகுருவாய் இராப்பகல் முன்சொல்ல, கற்றனமே யென்றவிவரும் நாவினுல் நன்மையாலென்று ஓதவல்ல பிராக்களைக் கன்மின்களென்று சொல் பயிற்ற, வேதம் ஓதுவாரோத்தாகையாலே ஆதர்வணுதிகள் போலே இதுவும் பேர்பெற்றது.

50. இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே ; பண்ணார் பாடல் பண்புரையிசைகொள் வேதம் போலே.

51. ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம்புமா போலே சொல்லார்தொடையல் இசைகூட்ட அமர்சுவையாயிரமாயிற்று.

52. சந்தோகனென்று, ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து யாழ்பயில் கானஸ்வரூபியைப் பாலையாகியென்று விசேஷிக்கையாலே வேதகீதச்சாமி நானென்ற ஸாமம் தோன்ற உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாருடி சரமகதி முடிவாகத் தொண்டர்க்கமுதென்ன தேவாக்நமாக்கி மஹாகோஷ நல்வேதவொலிபோலே மஹாத்யயநமென்னப் பாடுகையாலே இத்தைச்சாந்தோக்ய ஸமமென்பர்கள்.

53. புரவியே ழொருகாலுடைய தேரிலே திருச்சக்கர மொத்துக் காலசக்கரச் செங்கோல் நடாவி ஜ்யோதிச்சக்ர வொளிசுருக்கி அக்நீஷோமீய தேஜோம்ருதத்துக்கு ஊற்றும், மந்தேஹர்க்குச் செந்தீயும் முக்திமார்க்கத் தலைவாசலும் கண்ணாவான் கண்ணில் பிறந்த கண்மணியும் த்ரயீமயமுமான மண்டலத்திலே தண்டாமரை சுமக்கத் தோள்வளையும் குழையும் திருச்செய்யமுடியும் ஆரமும் படையும் திகழும் பொன்மேனியுத்

செஞ்சுடர்த் தாமரைக் கண்ணுமாய் அணிநிறமூர்த்தி ஈதென் னும்படி இரண்டையும் தன்னிறமாக்குகிற செய்யாளான வித்யை யோடே அருக்கன் மேவின ஸதாத்யேய தேஜஸ்ஸின் ஸாமரஸ்யோத்காந நாமமுள்ளுறையான ஆத்யந்தங்களாலே ஓராயிரமா மவற்றிலே ஒன்றை ஆயிரமுகத்தினலருளின தீர்த்தம் போலே தீர்த்தங்களாயிரமுமாக விஸ்தரிக்கிறுரென்று வேதகுருபதேசம்.

54. அன்றிக்கே ஸ்வரூபகுண விபூதிசேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ர புராணேதிஹாஸங்கள் போலே நீலபா ரூபேர்க்கி தெரியச்சொன்ன வேதோபப்ரும்ஹணமென்பர்கள்.

55. கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸும், மோஹசாஸ்த்ரப்ரவர்த்தகன் பிணச்சுடலை வெந்தாரக்குமாறு மணிந்து ஏறேறிச் சுழன்ருடுமாலமமர் பிச்சுத் தெளிந்து தான் வணங்குமா றுரைக்கக் கேட்ட ஸஜாதீயர் ப்ரஸாதமும் ஆர்ஷ மூலம்.

56. பரமஸத்வத்தோடே உள்ளியுரைக்கும் நிறைஞானத்தயனும் சிவனும் திருமாலருள் கொண்டு இவர் பாடினர்.

57. கருவுள் வேறலாமை அரனயனெனச் செய்யுமவை போலே மூவுருவா முதல்வன் துப்பரவாலே பரம கவிகளால் பாடுவியாது நேர்படச் சொல்லும் நீர்மையிலாவென்னைத் தனக்கி என்னு முதல் வந்து புகுந்து தப்புதலறத் தன்னை வைகுந்தனைத் தன் சொல்லால் தானே துதித்து மலக்கு நாவியல் மொய்ய சொல்லால் சொல்லவல்லேனென்று நானும் சொல்லி நாடும் கையெடுக்கும்படி என் சொல்லால் யான் சொன்ன இன்கவி யென்பித்தானென்ருரிறே.

58. தர்மவீர்யஜ்ஞானத்தாலே தெளிந்து ஹ்ருஷ்டராய் மேலே மேலே தொடுப்பாரைப் போலன்றே அருளின பக்தியாலே உள்கலங்கிச் சோகித்து மூவாறுமாஸம் மோஹித்து வருந்தி யேங்கித் தாழ்ந்த சொற்களாலே நூற்கிறவிவர்.

59. ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றும் தெளிந்தும் கண்ட மைமைப் பாலே ஓதியுணர்ந்தவர் இன்னு மாசாபாசபத்தர்; அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே நேரே கார்செறிந்த நீருடி கட்கரிய அரும் பொருளைக் கண்டபோதே யாமுருமை யென்னும் படி இவர்க்கு வன்பாசங்கள் நீங்கிற்று.

60. அவர்களுக்குக் காயேரடென்னுமிவையே தாரகாதிகள்; இவர்க்கு எல்லாம் கண்ணனிறே.

61. அழுநீர் துளும்பக் கடலும் மலையும் விசும்பும் துழாய் திருமா லென்று எங்கே காண்கேனென்னுமிவரலமாப்பு அவர்களுக்குப் புத்ரவியோகத்திலே.

62. பலஸாதநதேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோன்றும்.

63. ராமாயணம் நாராயணகதை யென்று தொடங்கி கங்காகாங்கேயஸம்பவாத்யஸத்கீர்த்தநம்பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணுமல் திருமாலவன் கவியென்ற வாயோலைப் படியே மாற்றங்களாய்ந்துகொண்டு உரிய சொல்வாய்த்தவிது வேதாதிகளில் பௌருஷமாநவ கீதாவைஷ்ணவங்கள் போலே அருளிச்செயலில் ஸாரம்.

64. குருசிஷ்யக்ரந்த விரோதங்களைப் பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொல் செந்தமிழ் இன்கவி பரவியழைக்கு மென்று அந்யோந்யம் கொண்டாடிப் பேசிற்றே பேசுமேககண்டரில் என்னில் மிகுவென்னுமிவ ருரைகொளின்மொழிகொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்க வேண்டுகையாலே வலங்கொண்ட விதுக்குச் சேராதவை மநு விபரீதங்கள் போலே.

65. பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்க விடுவர்.

66. அதுக்கு மூலம்—“ விதயச்ச ” என்கிற பரமாசார்ய வசநம்.

67. ஆப்திக்குஇவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்த னென்கிற விவை வ்யாஸ மநு ப்ரஹ்மவாதிகளை வேதம் சொல்லுமா போலே.

68. பாரதகீதைகளின் வேதோபநிஷத்த்வம் போலே இதுவும் வ்யாக்க்யையாலும் வேதரஹஸ்யமாம்.

69. உதாத்தாதிபதக்ரம ஜடாவாக்ய பஞ்சாதி பாத வ்ருத்தப்ரச்ந காண்டாஷ்டகாத்யாயாம்ச பர்வாத்யலங்காரங்கள் போலே எழுத்தசை சீர்ப்பந்தமடி தொடை நிரைநிரையோசை தளையினம் யாப்புப் பாத்துறை பண் இசை தாளம் பத்து நூறாயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு.

70. அதவா வேதவேத்யந்யாயத்தாலே பரத்வபர முதுவேதம் வ்யூஹவ்யாப்த்யவதரணங்களில் ஓதின நீதி கேட்டமநு படு கதைகளாய் ஆகமூர்த்தியில் பண்ணிய தமிழானவர்றே வேதத்தை த்ராவிடமாகச் செய்தா ரென்னும்.

71. மண்ணுடினஸஹ்யஜலம் தோதவத்திச் சங்கணி துறையிலே துகில் வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்ஸ்தத்தைக் காட்டுமா போலே அல்பச்ருதர் கலக்கின ச்ருதி நன்ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளையறிவித்தது.

72. மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே நூற்கடல் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே.

73. ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்.

74. பெரும்புறக் கடலும் ச்ருதிஸாகரமும் அலைத்து ஆழ்ந்து ஓடு மிடங்களில் அயோக்யர்க்குச் சமைத்த மடுவும் சாய்கரகமும் மாநமேயசரமம்.

75. வீட்டின்ப வின்பப்பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபணஸமம் இன்பமாரியி லாராய்ச்சி.

76. பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்நூல்களும் க்ராஹ்யங்கள்; பிறவி பார்க்கில் அஞ்சா மோத்தும் அறு மூன்றும் கழிப்பனும்.

77. க்ருஷ்ணக்ருஷ்ணத்வைபாய நோத்பத்திகள் போலன்றே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வ ஜந்மம்.

78. பெற்றும் பேறிழந்தும் கன்னிகையானவளும் எல்லாம் பெற்றாளா யும் தத்துக் கொண்டாள் என்பர்நின்றாரென்னு மவளும் நெடுங்காலமும் நங்கைமீரென்னு மிவருக்கு நேரன்றே.

79. மீநநவநீதங்கள் கந்திக்குமிடமும் வெறிகொள் துழாய் கமழுமிடமும் தன்னிலொக்குமோ?

80. ஆற்றில் துறையில் ஊரிலுள்ள வைஷம்யம் வா சாமகோசரம்.

81. தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்மஜந்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டைநாளில் பிறவி உண்ணுட்டுத் தேசிறே.

82. ஜநக தசரத வஸுதேவ குலங்களுக்கு மூத்த பெண்ணும் நடுவில் பிள்ளையும் கடைக் குட்டியும் போலே இவரும் பிறந்து புகழு மாக்கமு மாக்கி அஞ்சிறையு மறுத்தார்.

83. ஆதித்ய ராமதிவாகராச்யுதபாநுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாத போதில் கமலமலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே.

84. வம்ச பூமிகளை யுத்தரிக்கக் கீழ்க் குலம் புக்க வராஹ கோபால ரைப் போலே இவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழ விழிந்தார்.

85. ம்லேச்சனும் பக்தனுனல் சதுர்வேதிக ளநுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு பாவந தீர்த்தப்ரஸாதனுமென்கிற திருமுகப் படியும், விச்வாமித்ர விஷ்ணுசித்த துலஸீப்ருத்யரோடே உள்கலந்து தொழுகுல மானவன் நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய்த் தம் பிக்கு முன்பிறந்து வேலும் வில்லும்கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும் படி ஏககுல மானமையும், தூது மொழிந்து நடந்து வந்தவர் களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும், ஒருபிறவியிலே இரு பிறவியானுரிருவர்க்கு தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும், ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்

தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ர க்ருத்யமும், புஷ்பத்யாக போக மண்டபங்களில் பணிப்பூவு மால வட்டமும் வீணையும் கையுமான அந்தரங்கரை முடிமன்னவனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்தக்ரமமும், யாகாநுயாகோத்தர வீதிகளில் காயாந்நஸ்தலசுத்திபண்ணின வ்ருத்தாசாரமும் அறிவார்க்கிறே ஜந்மோத்கர் ஷாபகர்ஷங் கள் தெரிவது.

86. அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரமவித்யாவ்ருத்தங்களை கர்தபஜன்மம் ச்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹூதி சவவிதவாலங்கார மென்று கழிப்பர்கள். ... ...

இரண்டாம் ப்ரகரணம்

87. அணையவூரப்புனைய அடியும் பொடியும்படப் பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப் பெறுகிற திர்யக்ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்.

88. சேஷத்வ பஹிர்ப்பூத ஜ்ஞாநாநந்தமயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை ஆதரியார்களே.

89. இதின் ஔபாதிகத்வம் ஒரு ராஜா தன்னை மறைமுனிவனுக்கின வன் நீசனுக்குவித்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்கமேற்றினபோதே தெரியும்.

90. மாவுருவில் கள்ளவேடம், திருந்து வேதமலமான மாணிடம் பாடல், ஸர்வவர்ண சூத்ரத்வம், காடுவாழ் சாதியில் கடல்வண்ணன் வேடம், தென்னுரையில் ஹரிகீர்த்தி, ச்வபசரில் பத்திபாசனமு மறிவார் ஆராரமரரென்னவேற, அறியாதார் சாதியந்தணர் களேலும் தகரவிழுவர்.

91. தமிழ் மாமுனிதிக்கு சரண்யமென்றவர்களாலே க்வசித்க்வசித் தென்று இவராவிர்ப்பாவம் கலியும் கெடும்போலே ஸூசிதம்.

92. அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸுநந்த ஸூநுவானவனுடைய யுகவர்ண க்ரமாவதாரமோ? வ்யாஸாதிவதாவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரே? முன்னம் நோற்ற அனந் தன்மேல் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்.

93. அதுக்குமூலம்—யான் நீ என்று மறுதலைத்து வானத்து மண் மிசை மாறும் நிகருமின்றி நிலையிடம் தெரியாதே தெய்வத்தின மொருவகைக்கொப்பாக இனத்தலைவன் அந்தாமத்தன்பு செய்யச் சேர்ந்தமைக் கடையாளமுளவாக உகந்துகந்து திமிர் கொண்டாலொத்து நாட்டியல்வொழிந்து சடரையோட்டி மதா வலிப்தர்க்கு அங்குசமிட்டு நடாவிய கூற்றமாய்த் தீயன மருங்கு

வாராமல் கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றிப் பட்டெழுபோதறி யாதிருந்த ப்ரபாவம்.

94. அதுக்குஹேது—ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்றளிமகிழ்ந்து முற்றுமாய்நின்று நூலுரைத்து யோகு புணர்ந்து கண்காணவந்து ஆள்பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடுசெய்ய இணைக்குப் பார்வைதேடிக் கழலலர் ஞானமுருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப் படிந்து துளங்குகிறவர்மேலே படப் பக்கநோக்கறப் பண்ணின விசேஷகடாக்ஷம்.

95. ச்ரமணீ விதுர ரிஷிபத்நிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு சாபமிழிந்தென்னப் பண்ணுமிறே.

96. கோவ்ருத்திக்கு நெரிஞ்சியைப் புல்லாக்கினவன் ஜகத்திதார்த்தமாக எனக்கே நல்லவருள்களென்னும்படி ஸர்வஸௌஹார்த ப்ரஸாதத்தை ஒருமடை செய்து இவரைத் தன்னாக்க லோகமாகத் தம்மைப்போல ஆக்கும்படியானார்.

97. அதாவது மயர்வறமதிநலமருளுகை.

98. இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிற அநுதய ஸம்சய விபர்யய விஸ்ம்ருதிகளற்று மலர்மிசை யெழுகிற ஞானத்தைக் காதலன்பு வேட்கை அவா வென்னும் ஸங்க காமாநுராக ஸ்நேஹாத்யவஸ்தா நாமங்களோடே பரமபக்திதசை யாக்குகை.

99. ஜந்மாந்தர ஸஹஸ்ர நல் தவங்களாலே க்யாதகுலங்களிலே பிறந்து எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்க் குளித்து ஓதி உரு வெண்ணு மந்தி ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு ஊன் வாடப் பொருப்பிடைத் தாம் வருந்தித் துன்ப வினைகளை விடுத்து விவேக சமாதிகள் வளர எட்டுநீக்கி எட்டுமிட்டு எட்டினாய பேதப் பூவில் சாந்தொடு தேவகார்யம் செய்து உள்ளம் தூயராய் வாரிப் புன்புலவகத்தினுள் இளைப்பினையடைவே விளக்கினைக்கண்டு யோகநீதி நண்ணி அறம் திகழுமறையோர் மனந்தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெரும் சுடரைக் கண்கள் சிவந்திற்படியே மனவுட்கொண்டு நிரந்தரம் மறவாமை தொடக்கறுஸ்ம்ருதியாய் கனவில் மிக்க தர்சநஸமமாய் ஆகத்துப் புல்கு மத்யர்த்தப்ரியமாய் வைகும் சிறப்புவிட்டுக் குற்றேவலெண்ணாத அநந்ய ப்ரயோஜநமாய் வேதநோபாஸந ஸேவாத்யாநாதிகளென்று சொல்லுமது ஸாத்யஸாதநபக்தியாக சாஸ்த்ர ஸித்தம்.

100. ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர் இத்தை ஸாத்யமாக இரக்க ப்ராப்திக்கு முன்னே ஸித்திக்கும்.

101. இது உபயமுமன்றிக்கே அறியாக்காலத்தே ஒக்கப் பிறந்து தழுவிநின்று கட்டமே நோயாயுலர்த்தி வீழ்ந்தலப்பாய் த்யாகஸ்வீகார நிஷ்டா ஹாநிகளாக்கி ஸத்தாபோக வ்ருத்தி யுபகரணமாவதொன்று.

102. இடகிலேன் நோன்பறிவிலேன் கிற்பன் கீழ்நாள்களென்கையாலே ஸாதநத்ரய பூர்வாப்யாஸஜமல்ல.

103. இப்பிறப்பே சிலநாளிலென்றபோதே இரண்டும் கழியும்.

104. பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன்பெரும்செய், கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறிப் பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கிப் படிந்துண்ணும் போகத்தே தூராதே பொறுக்கொணாப் போகத்துக்குக் காவல் செய்து குமைத்துத் திரித்து வீழ்த்தி வலித்தெற்றி அருவியறுத்துக் கடனாயின இறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே தன்பால் மனம்வைப்பிப்பதாகத் தேய்ந்தற மன்னி ஒள்வாளுருவி வினைத்தூற்றை வேரறுவித்துத் தீக்கொளீஇக் கவ்வை யெருவிட்டு அமுதவாறு தலைப்பற்றி ஈரியாய்க் கசிந்ததிலே ஈரநெல்வித்தி எழுநாற்றுக்களையையும் வேர் முதல் மாய்த்துப் பட்டிச்சேவதக்கி மீது கொள்ளாமல் குறிக்கொள்வித்துக் கடல்புரைய விளைந்து தலைவணக்கினவாறே நாளுநாள் கோட்குறையாக நின்றாரறியாமல் குந்தம் கொண்டு ஆராமையுண்டு காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்துத் தண்டாலடித்துப் பதரறுத்துப் போர்த்ததோல் விடுத்து ஸூக்ஷ்ம வொட்டும் நீரிலே கழுவி வேறோர் கலத்திட்டுப் பைந்தொடி மடந்தையரைக் கொண்டு ஷட்குண ரஸாந்நமாக்கி வானோர்க்கு ஆராவமுதானவாறே முற்றுமுண்ண முன்னம் பாரித்து உழுவதோர் நாஞ்சில்கொண்டு பெருகமுயலும் பத்தியுழவன் க்ருஷிபலமிறே.

105. கோஸல கோகுல சராசரம் செய்யுங்குணமொன்றின்றியே அற்புதமென்னக் கண்டோம்.

106. பட்டத்துக்குரிய வானையு மரசும் செய்யுமவை ஆராயாது.

107. முந்நீர் வாழ்ந்தார் சூட்டும் கோவையாழி யென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும்.

108. செய்தநன்றி தேடிக் காணாதே கெடுத்தாய் தந்தா யென்ற அத்வேஷாபிமுக்க்யங்களும் ஸத்கர்மத்தாலல்ல.

109. எண்ணிலும் வரும் கண்ணனைக்கு எண்டானுமில்லை.

110. மதியால் இசைந்தோமென்னும் அநுமதீச்சைகள் இருத்துவமென்னாத வென்னை இசைவித்த என்னிசைவினது.

111. மாதவன் மலை நீர் நிழலென்று ஏறிடுமது—வ்யாவ்ருத்த்யுக்தி அந்யார்த்தம் அபுத்திபூர்வம் அவிஹிதம் பலவிஸத்ருசம் பலாந்தரஹேது.

112. இவன் நடுவே அடியானென்ன ஒலைப்படாப்ரமாணம் பக்ஷபாதி ஸாக்ஷி வன்களவிலநுபவமாக இந்திரஜாலங்கள் காட்டிக் கொள்ளக் காப்பாரற்று விதி சூழ்ந்தது.

113. வரவாறில்லை வெறிதே என்றறுதி யிட்டபின் வாழ் முதலென்கிற ஸூக்ருத மொழியைக் கற்பிக்கலாவதில்லை.

114. நலமருளினன் என்கொலென்று ஆமூலசூடம் அருளால் மன்னு மிவர்க்கு அன்புக்கடியானதுவே அடிசேருகைக்கும் ஸாதநம்.

115. புணர்தொறு மென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாந பக்திகளை வளர்த்தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸிபோஜநப் புறப்பூச்சும் போலே ஆற்ற நல்ல மாபோகச் சிரமமாக.

116. இவற்றால் வரும் ஸம்ச்லேஷ விச்லேஷங்களாகிறன—எளியனாய் நிற்குமரியனாய் எய்தானென்கிற தர்சந ஸமமான மாநஸாநுஸந்தாநமும் திண்கொள்ளப் பெறாத மநச்சைதில்யமும்.

117. புண்ணியம் பாவம் புணர்ச்சிபிரிவை அவைசரித்தவர்க்கு ப்ரிய ஹிதபரன் தான் துளக்கற வெங்கும் தழைக்க நடத்தும்.

118. ஜ்ஞாநத்தில் தம்பேச்சு; ப்ரேமத்தில் பெண்பேச்சு.

119. தேறும் கலங்கியென்று தேறியும் தேறாதும் ஸ்வரூபம் குலையாது.

120. அடியோம் தொடர்ந்து குற்றேவல் அடிச்சியோ மடிக்கீழ் குற்றேவலாகை அவஸ்த்தாந்தரம்.

121. வித்யை தாயாகப் பெற்றுப் பாலுமமுதுமான திருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்சமாகிய தந்தை மற்றொருவர்க்குப் பேச்சுப்படாமல் விச்வபதி லோகபர்த்தா வென்னும் மணவாளரை நாலிரண்டிழைகொண்டு முப்பிரியான ப்ரஹ்ம ஸூத்ர பந்தத்தோடே வரிப்பிக்க, பரம்புருடன் கைக்கொண்ட பின் சதுர்த்தியுள்புக்கு இடையீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து ஜந்மபூமியை விட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன் சென்றுகுடைந்து நீராடி வியன்துழாய் அஞ்சனத்தின் நீறு நானப் பொடி பீதகவாடை பல்கலன்கொண்டு நோக்கியர் அலங்கரித்துப் பல்லாண்டிசைத்துக் கவரிசெய்ய நிறைகுடவிளக்கமேந்தி இளமங்கைய ரெதிர்கொள்ள வைகுந்தம் புக்கிருந்து வாய்மடுத்துப் பெரும்களிச்சியாக வானவர் போகமுண்டு கோப்புடைய கோட்டுக்கால் கட்டில் மிதித்து ஆரோஹித்து பரதாக்ரூர மாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகுமார்பிலே குருமாமணி யாயணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று.

122. இன்பு மன்பும் முற்படுவது கொழுந்து விடுவதாகிறது கடிமாமலர்ப் பாவையோடுள்ள ஸாம்ய ஷட்கத்தாலே.

123. உண்ணாது கிடந்தோர் மாயையினா லென்னும் வீறுடைய முடிக்குரியாரோடு இத்திரு மண்ணோரன்னவொண்ணுதல் பின்னை கொல் என்கிற வொப்பு, தென்பால் நெடுமாடம் கடும் சிலை அம்பெரியூட்டி நீறெழவெரித்த பெருந்தோற்றத் தாருயிர் காகுத்தன் ஆதியங் காலம் மண்புரை பொன்மாதின் துகளாடி எருதேழ்தழீஇச் சறையினா ரென்னு மவற்றிலே தோன்றும்.

124. இவர்கள் தேடிநிற்கப் பொய்கை முதுமணல் முல்லைப் பந்தல் முற்றம் மச்சொடு மாளிகை அவ்வவ்விடம் புக்கு வாரிச் சிதைத்துப் பறித்துக் கிழித்துக் கோயின்மை குறும்பு செய்து அல்லல் விளைத்துக் கவருமுகக்கு நல்லவர் முழுசி ஆவரென்னும் தேன் மொழியாலே கோகுலத்தை மறப்பிக்கும் நகரஸ்த்ரீகள், நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறு பல்லாயிர மெண்ணிறந்தார் பாவம்—கடல் ஞாலம் மின்னிடை மல்லிகை வேய்மரு பேய் முலை முனிந்து மற்பொரு விறல் கஞ்சனை மங்கநூற்ற வாயும் தீர்ப்பாரென்னு மவற்றிலே தோன்றும்.

125. இராமனெனில்* நசவாகக் குழைத்தவன் பின் தொடரவிருந்த வன்சிறையிலும் விதிதன் புண்ணவனென்று ஜீவிதாதிகளால் குறைவின்றி மாயும் வகை விஷசஸ்த்ரங்கள் தேடி வில்வலவா ஹாவென்று இரக்கமெழாக் கொடுமைகள் சங்கித்து என்னையும் ஜீவந்தீமென்று ஆள்விட்டுச் சுடரையடைந்து அகலகில்லா முற்றுவமை பெருமகளோடே.

126. பிரியில் இலேனுக்கு இளங்கோவும் அக்குளத்தில் மீனிறே.

127. அழும்தொழும் ஸ்நேஹபாஷ்பாஞ்சலியோடே ருசிரஸாநுக்களில் கூவிக்கொள்ளும் பிரியாவடிமைக்கு சரணே சரணென்று வாளும் வில்லும்கொண்டு பந்துவும் பிதாவுமவரே யென்கையும், அன்னை யென் செய்யிலென் ராஜ்யமும் யானேயென்று பெரும் செல்வமுமிச்சியாமல் வேண்டிச் சென்று திருவடியே சுமந்து விரைந்து வருமளவும் கண்ண நீர் பங்கமாக நிலம்துழாவிக் குடிக்கிடந்த கையறவும், கோதிலடிமை உறுமோவென் பித்த புலன்கொள் நித்ய சத்ரு விசிந்தநமுமான ப்ராதாக்கள். அப்பொழுதைக்கப்பொழுது போனையென்னும் மாதா பிதாக்கள், செந்தீத் தண் காற்று இளநாகம் முதலான பகையறச் சிந்தை செய்து எங்கு முளனென்னும் பள்ளிப்பிள்ளை, முற்ற விட்டு மற்றிலே னென்னும் தர்மாத்மா, வாளி பொழிந்த நிர்க்குண விச்வாத்மா உள்ளேயுறைய வீரசரிதம் ஊனைக்கற்பார் பாவம் மற்றிலே னென்னும் ராமதாஸன், பல்வகையும் கண்டு வெண்சங்கேந்தின ரூபபரனான ச்வேதன் முதலானார் படிகளும் காணலாம்,

128. குழலில் நெஞ்சும் அருகலில் சுவையுமான விவர் அவர்களை வல்லர்.

129. எற்றைக்குமென்றது தோன்றப் பிறந்து ஒப்பித்து வீசிக் காப்பிட்டுக் காட்டுக்கு முற்பட்டு தர்மம் சொல்லிக் கேட்டு ஸிஷ்யா தாஸீ பக்ஷைகளாய் பாடிவருடி இன்று வந்தென்பாரையும், சென்றுரூரும் நிவாஸதாஸ பேதம் கொள்வாரையும், தாமவராக பாவிப்பர்.

130. எழுவதோருரு அழிக்க, செய்கிற வழுவிலாவடிமைக்குப் பாஞ்சாலி படுத்துமதும் கௌஸல்யாநுவ்ருத்தியு மொப்பாக்குகை பரிசு.

131. பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமா போலே நெக்கொசிந்து கரைந்தலைந்திடிந்து உடையப் பெருகுமிகுகாதல் கடலிடம் கொண்ட கடலை பஹுமுகமாக அவகாஹிக்கும்.

132. அச்சேத்ய மென்னுமது ஈரும் வேம் ஈரியாயுலர்த்தவென்னப்பட, சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க, காரணங்கள் முடியானேயிலவையாக, உடலமாத்மதர்மம் கொள்ள, காற்றும் கழியும் கட்டிஅழக் கொண்டபெருங்காதலுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே.

133. ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தைகளுக்குத் தோழி தாயார் மகளென்றுபேர்.

134. ஸகி வெறிவிலக்கி ஆசையறுத்து அறத்தொடு நின்ற மூன்றில் அநந்யார்ஹத்வமும், வாடி மெலிந்து பித்தேறி ஏறப் பேசிக் கட்டிழந்தகன்று சார்வதே வலித்தமை ஸாதநமாமோ வென்று மாதா அஞ்சிமுறைப்பட்டு முறையிடுகிற ஏழில் அத்யவஸாயமும், புத்ரி பலகால் ஆள்விட்டு ஆற்றாமை சொல்லிக் கவராதவை விட்டு இரைக்க மடலெடுத்துக் கண்புதையப் போக்கற்று உருநெஞ்சுள்ளெழக் கூடுநாள் தேடித் தாழ்த்ததுக் கூடி உசாத்துணையற்றுச் சூழவும் பகைமுகம் செய்யத் தடைநில்லாதே புயக்கற்று மாலையும் காலையும் பூசலிடுகிற பதினேழில் த்வரையும் தெரியும்.

135, தோழிமாரன்னையரென்கிற பன்மை ரக்ஷகத்வாதி பந்த வாத்ஸல்யாதிவ்யவஸாயபுத்தி பேதத்தாலே.

136. அபிலாஷா சிந்தநாநுஸ்ம்ருதீச்சாருசி பரபரமபக்திகளிலே பேதை முதலான பருவம் கொள்ளும்.

137. மயில் பிறை வில் அம்பு முத்துப் பவளம் செப்பு மின் தேரன்னம் தெய்வவுரு விகாஸ சுத்தி தாந்தி ஜ்ஞாநாநந்தாநுராகபக்த்யனுத்வ போக்யதாகதிகளையுடைய அகமேனியின் வகுப்பு.

138. சூழ்ச்சி அகற்றினீரென்னும் பழி, இணக்கி எங்ஙனே யென்னும் மேலெழுத்து, முன்னின்றாய் இவளை நீரென்னும் இருபடை மெய்க் காட்டு, நீரென்னே யென்னு முடன்பாடு, இடையில்லை யென்னு முதறுதல், இருந்திருந்து நடந்தாளென்னும் கொண்டாட்டம் அவஸ்த்தாத்ரயவ்ருத்தி.

139. தாயாரேதலர் உற்றீர்களென்னும் ஸாத்யஸித்த ஸாதநநிஷ்டரை; மகள் நம்முடையேதலர் யாமுடைத் துணையென்னும் ஸித்த ஸாதந ஸாத்யபரரை.

140. நாலயலார் அயற் சேரியார் உபாயசதுஷ்டயாந்தர்யாமித்வபரர்.

141. கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன் பற்றுள்ளசல்.

142. ஊரார் நாட்டாருலகர் கேவலைச்வர்யகாமஸ்வதந்த்ரர்.

143. இறுகலிறப்புக்கும் இறந்தால் தங்குழூரொக்குமே.

144. சிறு சீரார் சுளகுகள் உபயவிவேகபரிகரம்.

145. மாலைகங்குல் காலை பகல்—ரஜஸ்தமஸ் ஸத்த்வ சுத்த ஸத்த்வ ஜ்ஞாநங்கள்.

146. நிலாமுற்றம் ப்ரஜ்ஞாப்ராஸாதமென்னு மெல்லை நிலம்.

147. கலைவளை அஹம் மமக்ருதிகள்.

148. பட்டம் சூடகமாவன—பராவர குருக்கள் பூட்டு மாத்ம பூஷணங்கள்.

149. பந்து கழல்பாவை குழமணன் யாழ்தென்றல் மதிய மடிசில் சாந்தம் பூணகில் சிற்றில் தூதை முதலாவன-குணத்ரய விசித்ர கர்மஸூத்ரத்தாலே கட்டி லீலையாக ப்ரேரிக்க விழுந்தெழுந்தும் சுழன்றுழன்றும் பறிபட்டும் அற்பசாரமாமவையுமாய் மதீயமென்னில் விட்டகலவும் ததீயமென்னில் இகழ்வறவும் முனிவது மிக்கால மீதோவென்னப்படும் பொங்கைம்புலனில் போக்யாதி ஸமூஹம். ... ... *

மூன்றும் ப்ரகரணம்

150. சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர்மங்களைச் சிறகென்று குருஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநேபேசும்.

151. விவேகமுகராய் நூலுரைத்து அள்ளலில் ரதியின்றி அணங்கின் நடையைப் பின்சென்று குடை நீழலிலே கவரியசையச் சங்கமவை முரல வரிவண்டிசைபாட மாநஸபத்மாஸநத்திலேயிருந்து விதியினுலிடரி லந்தரமின்றி யின்பம்படக் குடிச் சீர்மையிலே யாதல் பற்றற்ற பரமஹம்ஸராதலான நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுநர் போல்வாரை அன்னமென்னும்.

152. என் பெறுதி யென்ன ப்ரமியாது உள்ளத்தூறிய மதுவ்ரத மாய் தூமதுவாய்கள்கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்துத் தேதெனவென்று ஆளம்வைத்துச் சிறுகாலெல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக் கொள்ளப் பாடித் துன்னிட்டு நெருக்க நீக்கென்று கடந்து புகும் தகைவறப் புக்கு வண்டொத்திருண்ட குழலிலே சங்கையற மருவி அருளாத யாமென்றோடி வந்து வாசமேயூதி வண்டே கரியான தெய்வ வண்டோடே சேர்விக்கும் சேயமுடை நாரதன் மூனி வாஹனர் தம்பிரான்மார் போல்வாரை வண்டு தும்பியென்னும்.

153. கண்வலைப்படாதே அகவலைப்பட்டு வளர்த்தெடுப்பார் கையிருந்து தயிர் நெய்யமர் பாலமுதுண்டு ஒருமிடறாய்ப் போற்றி ஒரு வண்ணம் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளம் துரப்பனென்னு மவற்றுக்கு முகந்து, சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியா வைத்த மாற்றம் கைகூப்பி வணங்கப் பாடி ஆலியா வழையா பராபிமாநத்திலே ஒதுங்கின நம்பிக்கன்பர் தலைமீதடிப்பொடி உடையவருடையார் போல்வாரைக் கிளிபூவை குயில் மயிலென்னும்.

154. ஆசறுதூவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியோடே திரையுகளும் வ்யஸநவ்யதையற்றுத் தாய்வாயிலுண்ணும் பிள்ளைக்கிரை தேடி வைகலுடன் மேய்ந்து நுங்கால் பைங்கானமென்று பரஹ்மரதம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு நல்லபதத்தையும் [1]வேண்டேனென்னும் தனிப்பெரும் பித்தர் நம்முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்.

155. பூண்ட நாள் சீர்க் கடலையுட்கொண்டு திருமேனி நன்னிறமொத்து உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து ஜ்ஞாநஹ்ரதத்தைப் பூரித்துத் தீங்கின்றி வாழ நிதி சொரிந்து கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து வெளுத்தொளித்துக் கண்டுகந்து பரஸம்ருத்தியே பேறான அன்பு கூருமடியவர் உறையிலிடாதவர் புயற்கை அருள்மாரி குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்.

156. தம்பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமாதீக்ஷாஸாரஸ்ய ஸௌந்தர்யங்களையுணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

157. பகலோலக்கமிருந்து கறுப்புடுத்துச் சோதித்துக் காரியம் மந்த்ரித்து வேட்டையாடி ஆராமங்களிலே விளையாடும் ராஜநீதி ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்த வென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு விண்மீதென்கிற ஐந்திலும் காணலாம்.

158. தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னானார் வணங்கு மிடத்திலே எல்லாம் பூர்ணம்.

159. வன்பெரு வானக முதலுய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி, வடிவுடைக் கடலிடம் கட்கிலீ யென்னுமவற்றில் இவள் திறத் தென்கொலோ வென்பிக்கிற வ்யூஹஸௌஹார்த்தப்ரதாநம்.

160. மண்ணோர்விண்ணோர்வைப்பில் போகின்ற ஏழுலகுக்குயிர்பாசம் வைத்த நிகரில்வாத்ஸல்ய முஜ்ஜ்வலம்.

161. உபயப்ரதாநப்ரணவமான உறை கோயிலில் எத்தேவு மென்னும் பரேசத்வம் பொலியும்.

162. வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீலமேனியின் ருசி ஜநகவிபவ லாவண்யம் பூர்ணம்.

163. ருசிவிவசர்க்குப் பாதமே சரணாக்கு மௌதார்யம் வானமாமலை யிலே கொழுந்து விடும்.

164. களைகணற்றாரை யுருக்கும் மாதுர்யம் குடமூக்கிலே ப்ரவஹிக்கும்.

165. மெலிவிலும் சேமம் கொள்விக்கும் க்ருபை தென்னகரிலே நித்யம்.

166. வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷண ஸ்தைர்யம் பம்போத்தர தேசஸ்த்தம்.

167. விளம்ப விரோதமழிக்கும் விருத்தகடநாஸாமர்த்த்யம் நன்னகரிலே விஸ்தீர்ணம்.

168. கடிதகடகவிகடநா பாந்தவம் அவ்வூரிலே த்விகுணம்.

169. கைம்முதலிழந்தா ருண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்தம்.

170. சென்று சேர்வார்க்கு உசாத்துணையறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்.

171. ப்ரவண சித்தம் பரத்வ விமுகமாக்கும் ஆநந்தவ்ருத்தி நீணகரிலே.

172. ஸாதரரைப் பரிசழிக்கும் சேஷ்டிதாச்சர்யம் குளத்தே கொடிவிடும்.

173. ச்ரமமனம் சூழும் ஸௌகுமார்ய ப்ரகாசம் ஆய்ச்சேரியிலே.

174. மஹாமதிகள் அச்சம் கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்றாற்றிலே கொழிக்கும்.

175. ஸாத்யஹ்ருதிஸ்த்தனாயும் ஸாதந மொருக்கடுக்கும் க்ருதஜ்ஞதா கந்தம் தாயப்பதியிலே.

176. அவகாஹித்தாரை அநந்யார்ஹமாக்கும் நாயகலக்ஷணம் வளம் புகழூரிலே குட்டமிடும்.

177. போக்யபாகத்வரை தெளிந்தசந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்.

178. போகத்தில் தட்டுமாறும் சீலம் காட்கரையிலே கரை யழிக்கும்.

179. மஹாத்மாக்கள் விரஹம் ஸஹியாத மார்த்தவம் வளத்தின் களத்தே கூடு பூரிக்கும்.

180. பிரிந்த துன்பக் கடல் கடத்தும் விஷ்ணு போதாநுசம்ஸ்யம் நாவாயிலே நிழலெழும்.

181. சரண்யமுகுந்தத்வம் உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்.

182. மார்க்கபந்து சைத்யம் மோஹநத்தேமடுவிடும்.

183. ஸைந்ய புத்ரசிஷ்ய ஸாத்யஸித்த பூஸுராரர்ச்சநத்துக்கு முக நாபி பாதங்களை த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்த சயநத்திலே வ்யக்தம்.

184. மோக்ஷதாநத்தில் ப்ரணத பாரதந்த்ர்யம் வளம்மிக்க நதியிலே கரைபுரளும்.

185. த்யாஜ்யதேஹவ்யாமோஹம் மருள்கள் கடியும் மயல் மிகு பொழிலிலே தழைக்கும்.

186. அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெரு நகரிலே பேர் பெற்றது.

187. இவற்றில் ப்ராவண்யம் இவள் பரமே யென்னவுண்டாய் ஷோட சகலாபூர்ணமான சந்த்ரமண்டலம் போலே பதினாறு திரு நக்ஷத்ரம் நிரம்பினவாறே தேவபோக்யமானவதிலம்ருதம் போலன்றிக்கே என்னுத் தமிழரிசைகாரர் முதற்பத்தர் வானவ ரென்னம்மான் பார்பரவென்னும்படி ஸேச்வரவிபூதியோ(போ)க்யமான பாலோடமுதன்ன மென்மொழி முகம்செய்தது.

188. நீர்பால் நெய்யமுதாய் நிரம்பினவேரி நெளிக்குமாபோலே பர பக்த்யாதிமயஜ்ஞாநாம்ருதாப்தி நிமிகிற வாய்கரை மிடைந்து மொழிபட்டு அவாவிலந்தாதி யென்று பேர் பெற்றது.

189. மனம்செய் எல்லையில் ஞானவின்பத்தை நின்மலமாக வைத்தவர் ஞானப்பிரானை ஞானத்து வைம்மினென்றவிது—தத்வ விவேக நித்யத்வாநித்யத்வ நியந்த்ருத்வ ஸௌலப்ய ஸாம்யா ஹங்காரேந்த்ரியதோஷ பல மந:ப்ராதாந்ய கரணநியமந ஸுக்ருதிபேத தேவாஸுரவிபாக விபூதியோக விச்வரூபதர்சந ஸாங்க பக்தி ப்ரபத்தி த்வைவித்த்யாதிகளாலே அன்றேநிய கீதாஸம மென்னும்.

190. அது தத்த்வோபதேசம்; இது தத்த்வதர்சி வசநம்.

191. அது ஐவரை வெல்வித்துப் பதிற்றைந்திரட்டி படச்சொன்னது; இது நாடாகத் தோற்றேமென்று ஐயைந்து முடிப்பான் சொன்னது.

192. அங்கு நம்பிசரணென்று தொடங்கி முடிவில் அப்ரிய மென்றது ; இங்கு பரமேயென்றிழிந்து பொலிக வென்றுஉகந்தது.
193. அதில் ஸித்ததர்மவிதி(யே) ; இதில் வித்யநுஷ்டாநங்கள்.
194. பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.
195. வேதவேத்ய வைதிகோபதேசம் ஆவித்யரளவிலே ; அஜ்ஞர் ஜ்ஞாநிகள் ஜ்ஞாநவிசேஷயுக்தர் ஸர்வஜ்ஞனென்னுமல் இவர் திருத்துவர்.
1'6. அறியாதார்க்கு உய்யப்புகுமாறும் இக்கரையேறினர்க்கு இன்ப வெள்ளமும், நிலையறியாதார்க்கு ஆழங் காலும் கரையேற்று மவனுக்கு நாலாறு மறிவிக்க வேணும்.
197. அவன்முனிந்தார்க்குத் தாம் கண்டது ; தம்மை முனிவார்க்குத் தம்கண், காணுதது' காண்பார்க்குக் கண்மாறுமிடம், ராகாந் தனுக்குமாயாதோஷம் இவர் காட்டுமவை.
198. ஸாதநஸாத்யஸ்த மத்யஸ்தரைவிட்டு அவற்றில் கலங்கும் ஜீவேச் வரர்க்கு வீடுமின் நினைமின் பிடித்தேன் விடுவேனே வைத் தெழவூது' வாடி நிற்கக் கன்மமன்று ஆன்பின் கைகழியேல் உழிதராய் என்சொற்கொள் என்று இவர் பலகாலும் ஹிதா ஹிதங்கள் சொல்லுவர்.
199. கதிர்ஞானமூர்த்திக்கு உணர்த்துவது ப்ரேமத்தாலே ; தமமூடு வார்க்கு வேட்கை யெழுவிப்பது ஞானத்தாலே.
200. உயிர் மாய்தல் ஆழுமென்னுருயிரென்னும் பரதுக்கம்ஸஹியாமை இரண்டிலு முண்டு.
201. என்னதுன்னதாவியிலே அறிவாராத்மா வென்று அவன் மதம் தோன்றும்.
202. இருத்து மெண்டானுய்ப் பொய்கலவாது அன்பு செய்து பற்றி லனுய் க்ஷ‌த்த்ருட் பீடித நிர்த்தநரைப் போலே கண்டு கொண்டுண்டுபருகிப் பரிஜனுதிகளோடே தன்னைத்தந்து என் செய்வனென்றேயிருந்து அகிலபரத்தையும் ஸமர்ப்பிக்க, அது சுமந்து அல்லுநன்பகலும் போகு என்றாலும் அகல்வானு மல்லனுய் போகேலென்றால் உகப்பையும் தவிர்ந்து விதி வகையே நடத்துமவனே உபதேசஸத்பாத்ரம்.
203. நண்ணுதார் மெய்யிலுான் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்யாமா நித்வாதிகள் விஞ்சின ப்ரணிபாதாபிவாதந பரிப்ரச்ந ஸேவா பரர்க்கு உளங்கொள் பேசுமளவன்றென்னு மர்த்தத்தை வம்மின் விரோத மீனச்சொல் எவ்வுயிர்க்குமறியவென்று அடைவு கெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்தபுத்தியும் அநர்த்தம் கண்டு ஆற்றாமையும் மிக்கக்ருபையு மிறே.

204. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடிபணிந்தவர்க்குமே இவையுள்ளது.

205. க்யாதிலாப பூஜாபேக்ஷையற மலர் நாடி ஆட்செய்ய உய்யக்கொண்டு ஆரைக்கொண்டு வாளும்வில்லும் கொண்டென்கிற இழவுகள் தீரப் பெற்றது.

206. ப்ரஹ்மநிஷ்டரும் ஸம்வத்ஸரவாஸிகளுமாகில் ஏபாவம் பயனன்றாகிலும் சேராது.

207. மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு அநுபவகர்ப்போபதேசம்.

208. இவற்றுக்கு மந்த்ரவித்யநுஸந்தாநரஹஸ்யங்களோடே சேர்த்தி.

209. அளிப்பானடியேனடைக்கலம் சூடிய பொய்யாதானா மழுந்தாரென்று ஸ்வரூபவிரோதி நிவ்ருத்திகளையும், தாமரையுந்திப் பெருமாமாயனாளாகவே வாழிய வென்று ப்ராப்ய பலங்களையும், நெறிகாட்டி மனத்துக்கொண்டு க்ண்ணனாலடித்துக் கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்தையும் சொன்னவை மந்த்ரச்லோகங்களோடே சேரும்.

210. த்வயார்த்தம் தீர்க்கசரணாகதியென்றது ஸாரஸங்க்ரஹத்திலே.

211. மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர்திண்ணணை யொன்று பயிலேறு கண் கரு வீடு சொன்னால் ஒருக் கொண்ட நோற்ற நாலும் எம்மா வொழிவில் நெடுவே யென்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும், அருளினன் வீடு பெற்ற வென்கையாலே ஐந்திலு மிரண்டையும், தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய் யென்கிற முக்தலக்ஷணவ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேயமென்னும்.

212. ரஹஸ்யத்துக் கோரெழுத்தும் அதுக் கோருருவும் போலேயானவற்றிலே இமையோரதிபதி அடியேன் மனனே பொய் மயர்வு பிறந்தருளினன் விண்ணப்பம் தொழுதெழென்ற பஞ்சகத்தோடே அவித்யாதிஸ்வரூப ஸ்வபாவாத்மேச்வர பந்தரக்ஷணக்ரம குண விக்ரஹ விபூதியோக ததீயாபிமாநோபதேச விஷயாந்யாபதேச ஹேத்வாதிகளும் ஸங்க்ருஹீதம்.

213. அடி தொழுதெழென்ற விதிலே வஸ்துநிர்த்தேச நமஸ்காராசீஸ்ஸுக்களுமுண்டு.

214. சாதுசனம் நண்ணா மயர்வற மாசறுக்கும் தெருள் கொள்ளப் பத்தராவரடிமையறவுரிய நோய்களறுக்கும் உடைந்து ஏற்றரும் வானின் தாளின்கீழ் அடிக்கீ ழின்பக்கதிபயக்கும் ஊடுபுக்கு மூவுலகு முருகாநிற்ப ரென்னும் ஸாம்யத்தாலே வாச்யன் பத்தினாயதோற்றம் போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப் பத்தான விதினாவிர்ப்பாவம்.

215. ஐந்தினோடொன்பதோ டொருபத் தென்னுமவை போலே நூறே சொன்ன பத்துநூறுஓராயிர மென்றதும் ஸாபிப்ராயம்.

216. பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேசப்பத்து.

217. பகவத் பக்த பரங்கள் ஆச்ரயண விதிசேஷங்கள்.

218. பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்யகாமத்வா பத்ஸகத்வார்த்திஹரத்வ விசிஷ்டன் 'மயர்வையறுக்க, தத்த்வவேதநமறப்பற்று ஜ்ஞப்தி பல முக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து மோக்ஷபலவ்ருத்தி செய்ய வர்த்தித்துப் புருஷார்த்த பலாந்யருசி யொழிந்து விரக்திபல ராகம் கழிய மிக்கு ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ஸாதநப லோபகாரக் கைம்மாறின்றி க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருத மானத்தை யுணர்ந்து. ஆத்ம தர்சநபலப்ராப்தி மரணாவதியாகப் பெற்றுக் காலாஸத்திபலகதிக்குத் துணை கூட்டின தம் பேற்றைப் பிறரறியப் பத்துத்தோறும் வெளியிடுகிறார்.

நான்காம் ப்ரகரணம்

219. பரபரனாய்நின்ற வளவேழ்வைப்பா மவையுளும்பர் வானவரதிபதி மயர்வறமன்னி மனம் வைக்கத் திருத்தி மறக்குமென்று நல்கி விடாதே மன்ன, அயர்ப்பிலனறுத்தேன் என் சொல்லி மறப்பனோ வென்னும்படி தத்த்வஜ்ஞானவர் சுடரடியெம் பிரானை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநு பவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்யோபா தேய தோஷ குணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக வுபதேசித்து எளிதாகவவதரித்துப் பிழைகளை ஸஹித்துப் புரையறக் கலந்து அல்பஸந்துஷ்டனாய் அம்ருதமே ஔஷதமாக்கி நீர்புரையத் தன்னை நியமித்து போகத்தை ஸாத் மிப்பித்து பக்திகணைனகளுக்கு ஒக்கவருமவனுடைய ஸேவைக்கு எளிமையுமினிமையு முண்டு, தொழுதால் அரும்பயனாயதரும், உத்யோகத்தே வினைகளும் மாளும், அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வுகொண்டு நலம் செய்வதென்று தாம் மயர்வறமதிநலமருளி பஜநத்திலேசேர்க்கிறார் முதற்பத்தில்.

220. சோராத மூவா வேர்முதலாய் உலகம் படைத்தவனென்கிற சித சித்த்ரயத்ரிவித காரணமானவன் அறியாதனவறிவிக்க உள் ளம் தேறித் தூமனம் மருளிலென்னும் ஜ்ஞாநபலமான ஒளிக் கொண்ட மோக்ஷம் தேடிவாட, உலராமலாவிசேர்ந்து சிக்கனப் புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரென்ன வாழ்வித்து உபகரிக்கிற நீந்தும் கெடலில் எம்மாவீட்டை உபயாநு குண

மாக்கினவர் ஆச்ரயணீயனுக்குப் பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற ஸகலபலப்ரதத்வகாரணத்வ சேஷசாயித்வச்ரிய: பதித்வஸௌலப்யாதிகளைத் திண்ணனவ்வதென்று வெளியிட்டு, கள்வாதீர்த்தனென்று வசநப்ரத்யக்ஷங்களும் காட்டிப் புலனைந்தென்று ஸம்ஸார மோக்ஷஸாதந துக்காநந்தரஸம் முன்னாக விதிக்கிற அந்தர்கத குணோபாஸநத்தை மதித்துப் பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மை வலம் சூதும் செய்து இளமை கெடாமல் செய்யும் க்ஷேத்ர வாஸ ஸங்கீர்த்த நாஞ்சலிப்ரதக்ஷிணகதிசிந்தநாத்யங்கயுக்த மாக்குகிறார் இரண்டாம் பத்தில்.

221. முழுதுமாய் எங்கணும் மொழிவற அருவாகி நின்று தோய்விலனாம் ஸர்வவ்யாபகன் தீர்ந்தவடியார்களைத் தாளிணைக் கீழ்க் கொள்ளும் தன் படிக்கும் நீதந்தமமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி அலமருகின்றேன் வேறறவரிந்து எந்நாளெங்குவந்து தலைப்பெய்வனென்று கழித்துப் புகும் தம் காதலுக்கும் ஸத்ருசமாகக் கண்டு கொள்ளென்னா ஊனமில் மோக்ஷ பலமான முடிச் சோதியி லநுபவத்தாலே நித்யவஸ்து நீடுபெற்று அவச் சேதமற்றவடிமை செய்யவேண்டும்படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து சொல்லிப் பாடியேத்திப் பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக்கும்பிடுநட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதியுகள, தம்மடியாரென்ன வுடன்கூடும் ஸாத்யம் வளர, பைகொள் பாம்புபோலே இந்த்ரியவ்ருத்திநியமமறப் பாட வந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய், குறைமுட்டுப் பரிவிடர்துயர் துன்பமல்லல் துக்கம் தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்தமக்நரானவர் செய்யதாமரைக் கண்ணன் அமரர் குல முதலென்று அஞ்சாதபடி எளிவருமிணைவனாமென்றவை பரத்வமாம்படி அவனாகும் ஸௌலப்ய காஷ்டையைக் காட்டி வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னாவது? வேண்டிற்றெல்லாம்தரும், தன்னாகவே கொள்ளும், கவி சொல்லவம்மினென்று முக்தைச்வர்யத்தை முன்னிட்டு ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம்பத்தில்.

222. ஈசனை யீச னீசன்பாலென்ன ஏர்கொள் வானத்தும் ஆயே யென்கிற வ்யாப்தி-நிறம்பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா ஒழிவில் காலத்துக்குச் சேர பூர்வ போகங்களை ஓதுமாலெய்தின சாபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கிப் போதால் வணங்காமை தீர்த்த ப்ரணயித்வத்திலே காதல் மையலேறிய பித்தாய் தேச தூரத்துக்குக் கூவியும் கொள்ளா யென்றது தீர, கண்ட சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட, வீவிலின்பம் 'கூட்டினையென்று முக்தபோகமாநஸப்ராப்திபலமான தேவதாந்தராத்மாத்மீய லோகயாத்ரைச்வர்யாக்ஷரங்களில் வைராக்யம், உன்னித்து

உயிருடம்பினால் கொடுவுலகம் வேட்கையெல்லாமொழிந்தே னென்னவுடையரானவர் ஒருநாயகமென்று ராஜ்யஸ்வர்காத் மாநுபவால்பாஸ்திரத்வஸாவதிகத்வாதிகளையும், ஆடு கள்ளிறைச்சி கரும்செஞ்சோறுகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்தாடும் நிஹீநதையையும், பேசநின்ற தேவதாஜ்ஞாநாசக்திஸாபேக்ஷத்வாதிகளையும் இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டிமத தமோ நிஷ்டதையையும் சொல்லி, ஓடிக் கண்டீர் கண்டும் தெளியகில்லீர் அறிந்தோடுமின் ஆட்செய்வதே உறுவதாவதென்று விரக்திபூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம்பத்தில்.

223. ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவன் எவ்விடத்தானென்னும் பாவியர்க்கும் இருகரையுமழிக்கும் க்ருபாப்ரவாஹமுடையவன் பொய் கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவும் தானாய் உன்னை விட்டென்னப்பண்ணின விரக்திபலபரமாத்மராகம் பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்தாற்றகில்லாது நீராய் மெலிய ஊடுபுக்கு வளர விஷவ்ருக்ஷபலங்கள் கைகூடினவர் அடிமை புக்காரையும் ஆட் செய்வாரையும் காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு ப்ரஹ்லாத விபீஷணர் சொற் கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடித்து தேசகாலதோஷம் போக எங்குமிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள், நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுகதோஷமில்லையாமென்று விஷ்ணுபக்திபரராக்கிக் கண்ணுக்கினியன காட்டலாம் படியானார் கண்ணிலே நோக்கிக் காணும் பக்தி ஸித்தாஞ்சநத்தை யிடுகிறார் அஞ்சாம்பத்தில்.

224. என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே *ஸர்வலோக பூதேப்ய: என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட்டாக்குகிற சரண்யன் அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்யஜ்ஞாநங்க ளளவாலன்றிக்கே அங்குற்றேன் என்னுன் புணரா யென்னும்படி மெய்யமர் பக்தி பூம பலமாகவும் அநந்யகதித்வமுடைய தமக்குப் பாதமே சரணாக்க அவ்வயே சேமங்கொண்டு ஏக சிந்தையராய் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து விளம்பரோஷ முபாயத்தாலேயழிய உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின சிதசித் ப்ராப்யப்ராபகா பாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீருதீரென்று ததீய சேஷ

மாக்கியும் புறத்திட்டுக் காட்டியென்று ப்ரஸங்கிக்கில் முடியும்படி விட்டு, தந்தை தாயுண்ணும்சோறு மாநிதி பூவையாவையு மொன்றேயாக்கி, நளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல் வாவோ வென்னு மார்த்தியோடே திரிவிக்கிரமனைக் குறள் கோலப்பிரானாய் அடியை மூன்றையிரந்த வன்கள்வன் கண் முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந் தாமரைகளை இணைத் தாமரைகள் காண இமையோரும் வரும் படி சென்று சேர்ந்த உலகத் திலதத்தை கண்டு அகலகில்லே னென்று பூர்வ வாக்யமநுஸந்தித்தவர் பிணக்கறத் தொடங்கி வேதப் புனித விருதி சொன்ன ஸாத்யோபாயச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்குத் தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தே னென்று ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங் களாலே காட்டுகிறார் ஆறும்பத்தில்.

225. எண்ணிலாக் குணங்கள் பாலதுன்ப வேறவன் மாயாப்பல்யோகு செய்தியென்னு மாச்சர்ய சக்தி யோகத்தாலே தெளிவுற்ற வர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை யருளும் ப்ராபகத்வம் புற்பா வெறும்பு பகைவனுக்கு மாக்க வல்ல ஸர்வசக்தி, பாதமகல கில்லாததம்மை அகற்றுமவற்றின் நடுவே யிருத்தக் கண்டு நலி வான் சுமடுதந்தாய் ஓவென்று ஸாதனபலமான ஆக்ரோசத் தோடே பழிபிட்டுக் கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் தேற்ற வொண்ணதபடி தோற்று ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாநம் மற்றும் கற்பாரிழவிலே சுவறிப் பழைய தனிமைக் கூப்பீடுதலை யெடுத்துச் சூழவும் பகைமுகம் செய்ய எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க உபாயாதிகாரதோஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க ஐச்சமாக விருத்தி உறக்கொண்ட ஸ்வபர ப்ரயோஜநத்தை யருளிச் செய்ய என் சொல்வி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவுமென்கிற உபகாரஸ்ம்ருதியோடே தன்சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்கவிருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காநகோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர் சரமோபாய பரரானர்க்கு நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன் றிலம் உள்ளித் தொழுமின் என்று ப்ராப்யஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்.

226. தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடு என்னும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதிகளையுடைய ஸத்யகாமன் கொண்ட வாக்வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும்தீர, தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதாபலப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கந்யகாதா நம்போலே ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்ம லாபத்தாலே

அதீவவிளங்கிப் பணைத்து ஐம்பாசம்விட்டு ஆத்வாரம் ஆளுமாளாரென்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து பிரிவில் க்ருபண தசையாகத் துவரும் ஸீதா குணங்களாலே ப்ரீதி வர்த்தித்து. இத்திக்கவுள்ளே உறைந்து கண்டுகொண்டிருந்து அமாநுஷபோகமாக்கினவன் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட தேஹாதிகளில்பரமாய் நின்றுநினைக்கில் லக்ஷ்மீதுல்யமாய் அவர்க்கே குடிகளாம் பரதந்த்ரஸ்வரூபத்தையநுஸந்தித்தவர் ஸ்வஸாதநஸாத்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணுமதத்தையே குறிக்கொண்மின் உள்ளத்தென்று ப்ராப்யைகபராக்குகிறார் எட்டாம்பத்தில்.

227. எண்டிசையும் அகல்ஞாலம் எங்கு மளிக்கின்ற ஆலின்மேலென்னும்படி நித்யபோகபாத லீலோபகரணத்தின் லயாதிகளைப் போக்குமாபத்ஸகன் ஆருயிரென்னப்படுத்தின ஆத்மதர்சநபலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு ஏகமெண்ணிக் காணக்கருதி எழ நண்ணி நினைதொறுமுருகியலற்றிக் கவையில் மனமின்றிப் பதினாலாண்டு பத்துமாஸமொருபகல் பொறுத்தவர்கள் ஒருமாஸ தின ஸந்த்யையில் படுமது க்ஷணத்திலேயாக இரங்குகிற த்வரைக் கீடாக இனிப் பத்திலொன்று தசமதசையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக் கிட்டதாகாமல் நாளைவதுவைபோலே நாளிடப் பெற்றவர் இம்மடவுலகர் கண்டதோடு பட்ட அபாந்தவாரக்ஷகாபோக்யாஸாகாநுபாய ப்ரதிஸம்பந்தியைக்காட்டி மற்றொன்று கண்ணனல்லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம், அதில் துர்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலைமாலை விண்டு தேனைவாடா மலரிட்டு அன்பராம் ஸாங்கபக்தி, அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி, அதில் அசக்தர்க்கு உச்சாரண மாத்ரம், ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தொண்டனென்று கீதாசார்யனைப் போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரைக்கிறார் ஒன்பதாம்பத்தில்.

228. சுரிகுழல் அஞ்சனப் புனல்மைந்நின்ற பொல்லாப்புனக் காயாவென்னும் ஆபத்திற் கொள்ளும் காமரூப கந்தரூபத்தாலே ப்ரபந்நார்த்திஹரனானவன் அருள்பெறும்போதணுகவிட்டதுக்குப் பலமான வானேறும் கதிக்கு அண்ட மூவுலகும் முன்னோடிக் கால் விழுந்திடத்தே நிழல் தடங்களாக்கி அமுதமளித்த தயரதன் பெற்ற கோவலனாகையாலே வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன் மகனவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தனாகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்து மாத்தனை வழித்துணை

யாக்கி அறியச் சொன்ன ஸுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கொழித்து மீள்கின்றதில்லையென்று நிச்சித்திருந்தவர் ஸஞ்சிதம் காட்டும் தசையானவாறே முந்துற்ற நெஞ்சுக்குப் பணி மறவாது மருளொழி நகு கைவிடேலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து, வலம் செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதுமென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டுப் பிணக்கறவைச் சார்வாக நியமித்து எண்பெருக்கிலெண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச்சுருக்கி மாதவனென்று த்வயமாக்கிக் கரணத்ரயப்ரயோகவ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்துச் செஞ்சொற்கவிகளுக்குக் கள்ள வழி காவலிட்டு மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தரவிரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வாக்கையிலே புக்குத் தானநகர்களை அதிலேவகுத்துக் குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு தேஹதோஷ மறிவித்து மாயையை மடித்து வானேதரக் கருதிக் கருத்தின்கண் பெரியனானவனை இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க, "இந்த்ரியகிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில், அவை யாவரையும் அகற்ற நீவைத்தவையென்பர்; அது தேஹயோகத்தாலே யென்னில்; அந்நாள் நீதந்த சுமடென்பர்; முன்செய்த முழுவினையாலே யென்னில், அது துயரமே உற்ற விருவினை உன் கோவமுமருளுமென்பர்; ஈவிலாத மதியிலேனென்னும்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில். ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப் பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தாவென்பர்; யானே என்ஞான்று மென்றத்தாலேயென்னில்; அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழிலென்பர்; ஜீவப்ரக்ருதிசைதந்யம் நீங்கும் வ்ரத ஹேது: அகமேனியிலழுககறுக்கை அபிமாநிக்ருத்யம்; தான் நல்கும் பந்தம் நிருபாதிகம். ஸௌஹார்தம் என்ஞான்றும் நிற்கும்; பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநாதி வைகல்யமில்லை; ஏகமூர்த்தியில் அல்லல்மாய்த்த யத்நபலித்வங்கள் நம்மது; நாம் தனி நின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே அறிந்தனமே யென்னும் ஸர்வஜ்ஞரிவர்; நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்து நிற்க, அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம் போலே ஏறப் பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீகீத காஹளசங்காசீஸ்ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்குத் தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திரு

வாணையிட்டுக் கூசம் செய்யாத செய்திப் பிழை, பற்றுக்கொம் பற்ற கதிகேடு போரவிட்ட பெரும்பழி, புறம்போனல் வருமிழவு, உண்டிட்ட மூற்றீம்பு, அன்புவளர்ந்த அடியுரம்; உயிருறவு முதலளவு துரக்கைகளாலே பெருவாணை அல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி கடல் போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிருர் பத்தாம்பத்தில்.

229. உருமையோடே உற்றேனுக்காதொழிந்தது நாடுதிருந்த நச்சுப் பொய்கையாகாமைக்கு ப்ரபந்தம் தலைக்கட்ட வேர்சூடுவார் மண் பற்றுப்போலேயென்னுமவற்றிலும் இனி யினியென்று இரு பதின்கால் கூப்பிடும் ஆர்த்தியதிகார பூர்த்திக்கென்னுமது முக்க்யம்.

230. கமலக்கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய் காண்பானவாவுதல் அதிலிரட்டியாகையாலே கண்டுகளிப்ப வளவும் பரஜ்ஞாநகர்ப்ப ப்ரபக்தி.

231. இருந்தமை யென்றது பூர்ண ப்ரஜ்ஞாநம்.

232. முடிந்த அவாவென்றது பரமபக்தி.

233. இவை ஜ்ஞாநதர்சநப்ராப்த்யவஸ்த்தைகள்.

234. அவித்யாநிவர்த்தக ஜ்ஞாந பூர்த்திப்ரத பகவத்ப்ரஸாதாத் மோக்ஷலாப மென்கை மயர்வற வீடுபெற்றவென்ற ப்ரபந்தை கார்த்த்யம். ... ... *

ஆசார்யஹ்ருதயம் முற்றிற்று.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

(முடிவில் அநுஸந்திக்கும் தனியன்)

தந்தருளவேணும் தவத்தோர் தவப்பயனய்
வந்த முடும்பை மணவாளா—சிந்தையினல்
நீயுரைத்த மாறன்நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

ஸ்ரீ

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர்
எழுதிய

ஆசார்யஹ்ருதய பாடபரிஷ்காரம்.

ஆசார்யஹ்ருதயக்ரந்த ப்ரபாவம் ப்ரதிபாதயந்,
தத்பாடாநாம் பரிஷ்காரம் ப்ரதர்சயிது முத்ஸஹே.

ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் தோன்றியுள்ள நூல்களுள் **ஆசார்யஹ்ருதயம்** என்பது மிகச்சிறந்தது. **நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு** "தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது, ஈடுமுப்பத்தாறாயிரம்" என்று **உபதேசரத்தினமாலையில் மணவாளமாமுனிகள்** அருளிச்செய்தபடி மிகச் சிறந்த வியாக்கியானமாகிய [பகவத்விஷயமென வழங்கப்படுகிற] ஈடு முப்பத்தாறாயிரப்படியை அருளிச்செய்தவரான **வடக்குத்திருவீதிப்பிள்ளை** யென்னுமாசிரியர்க்கு இரண்டு திருக்குமாரர்கள் தோன்றியிருந்தனர். அவர்களுள் மூத்தவர் **பிள்ளை லோகாசார்ய**ரென்று உலகம் போற்ற நின்ற ஆசிரியராவர். இளைய திருக்குமாரர் **அழகிய மணவாளப்பெருமாள்நாயனார்** என்னுமாசிரியர். இவ்விருவரும் இவ்வுலகுக்குச் செய்தருளிய பேருதவி கைம்மாறிலாதது. ஸ்ரீவசநபூஷணம், முமுக்ஷுப்படி (திருமந்த்ரார்த்தம்) முதலிய அஷ்டாதச (18) ரஹஸ்ய திவ்யக்ரந்தங்களையருளிச்செய்தவர் மூத்தவரான பிள்ளைலோகாசார்யர். அவருடைய திருத்தம்பியாரான அழகியமணவாளப்பெருமாள் நாயனார் என்னுமிவர் அருளிச்செய்தவை— திருப்பாவைக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம், அமலனாதிபிரான் வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், பட்டோலை யென்பதோர் ரஹஸ்யம், **ஆசார்யஹ்ருதயம்** முதலியன.

இவற்றுள் ஆசார்யஹ்ருதயமென்னும் நூலின் பெருமையைப் பேசவும் அதில் தோன்றியுள்ள பாடப் பிறழ்வுகளைப் பரிஷ்கரிக்கவும் நாமிப்போது முன் வருகிறோம். இவ்வரிய பெரிய நூலின் பெயரைக் கேள்விப்படாதவர்கள் பலர் இருக்கலாம். கேள்விப்பட்டவர்களிலும் பலர் "**ஸ்ரீவசனபூஷணம்** முதலிய மற்ற நூல்களைப்போல் இதுவுமொரு நூல்" என்று இவ்வளவே க்ரஹித்திருக்கக்கூடும்; நூலினுள் இறங்கி ஆராய்ச்சிசெய்திரார்கள். இந்நூலில் பரிசயமுள்ளவர்களும் பெரும்பாலர் இதன் அருமை பெருமைகளை ஆழ்ந்து அறியப்பெற்றிலர் என்றால், இப்பேச்சில் யாரும் குறைகூற நேராது. "மற்ற நூல்களைப் போலல்லாமல் இது வொரு விலக்ஷணமான நூல்; மிகச்சிறந்த நூல்" என்று இவ்வளவு க்ரஹித்திருப்பவர்கள் சிலருளர். அந்தச் சிறப்பு எப்படிப்பட்டதென்பதை உலகமெல்லாமறிய நன்குவிளக்கிக் காட்டவேணுமென்னுமாசை நமக்கு எழுந்துளது.

இவ்வுலகில் அன்றுதொட்டு இன்றளவாகத் தோன்றியுள்ள திவ்ய நூல்களில் ஆசார்யஹ்ருதயத்திற்கொப்பானதொரு க்ரந்தம் இதுவரையில் தோன்றவுமில்லை, இனித் தோன்றப்போகிறதுமில்லை. உபநிஷத்துக்கள், இதிஹாஸ புராணங்கள், ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் எல்லாம் ஒருங்கே திரண்டு இந்நூலாக வடிவெடுத்திருக்கின்றதென்பது உண்மையுரை.

ஆசார்யஹ்ருதயம் என்கிற சொல்லானது 'ஆசார்யருடைய திருவுள்ளம்' என்னும் பொருள்பெற்றுள்ளது. வைதிக ஸந்தானத்திற்கு ப்ரதம ஆசார்யரான நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துகளைத் தெளிய வெளியிடுகையாலே, இந்நூலுக்கு ஆசார்யஹ்ருதயமென்று பெயராயிற்று என்பர் பெரியோர். நம்மாழ்வாரென்கிற ஒரு ஆசார்யருடைய திருவுள்ளத்தை மாத்திரம் வெளியிடாமல் ஸகல பூர்வாசார்யர்களுடையவும் திருவுள்ளக்கருத்துகளை யெடுத்துரைப்பது இந்நூலாதலால் "ஆசார்யர்களின் ஹ்ருதயம்" என்கிற பொருளும் பொருந்தும்.

இந்நூலின் அர்த்தங்கள் மிகவும் அதிசயிக்கத் தக்கவை யென்பது ஒரு புறமிருக்க, அர்த்தத்திற்காட்டிலும் சொல்தொடைதானே மிகவும் இனிதாயிருக்குமென்பது, இதில் ஸ்வல்ப பரிசயம் பண்ணினவர்களுக்கும் எளிதாகத் தெரியவரும். *செவிக்கினிய செஞ்சொல்* என்று திருவாய்மொழிக்கு ப்ரஸித்தியிருந்தாலும் உண்மையாகச் செவிக்கினிய செஞ்சொல் இந்நூலொன்றேயாகும். இந்நூலின் அரிய பெரிய பொருள்களை உள்ளவாறு உணரப்பெறுவதும் நெஞ்சில் தரிக்க வைத்துக்கொள்வதும் எப்படிப்பட்ட மாஞானியர்க்கும் எளிதன்று. நாடோறும் இதில் மூலத்திலும் வியாக்யானத்திலும் அவகாஹித்துக்கொண்டேயிருப்பார்க்கும் இதன் ஆழ்பொருள்கள் அறியவரியனவே.

இந் நூலில் ஒவ்வொரு சொல்லும் பெரும்பாலும் ப்ரமாணவசனத் தொகுதியேயாகும். ஆசிரியர் தம்முடைய சொந்த வாக்காக எழுதும் வார்த்தைகள் மிகச் சிலவே. நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வார்த்தைகள் வடமொழி மேற்கோள்களும் தென்மொழி மேற்கோள்களும் வடிவெடுத்தவை. இங்ஙனே நாம் எழுதியிடுவதனால் பயனில்லை. இதை விளக்கக் காட்டி வாசகர்களுக்குப் பேரின்ப மளிக்கின்றோம். இந் நூலில் ஒவ்வொரு மஹாவாக்யமும் சூர்ணை யெனப்படுகின்றது. முதல் சூர்ணை யொன்றைமாத்திரம் எடுத்துக்கொண்டு அது அமைந்திருக்கு மழகை விவரித்துக் காட்டுகின்றோம்.

"காருணிகனான ஸர்வேச்வரன் அறிவிலாமனிசர் உணர்வென்னும் சுடர் விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தா வேதவிளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய்விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினால் அருள்செய்தான்"

இது இந் நூலின் முதல் சூர்ணை. இதில் நூலாசிரியருடைய சொந்தமான சொல் ஒன்றுகூட இல்லை. சொல்தொடை மாத்திரமே இவருடையது. சொற்கள் யாவும் பூருவர்களின் திவ்ய ஸூக்திகளிலிருந்து அற்புதமாகத் திரட்டப்பட்டுள்ளன.

1. பட்டரென்கிற ஆசிரியருடைய வடமொழி ச்லோகமொன்று; 2. திருமாலைப் பாசுர மொன்று; 3. பேயாழ்வார் பாசுர மொன்று; 4. பூதத்தாழ்வார் பாசுர மொன்று; 5. திருமங்கையாழ்வார் பாசுரங்கள் ஐந்து; 6. பெரியாழ்வார் பாசுர மிரண்டு; 7. நம்மாழ்வார் பாசுர மிரண்டு; 8. திருமழிசை யாழ்வார் பாசுர மொன்று. ஆக இவ்வளவு திவ்ய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு இந்த வொரு சூர்ணை நிருமிக்கப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள அந்த ஸ்ரீஸூக்திகளை விவரித்துக் காட்டுகிறோம் காண்மின்;

1. *** ஹார்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீசோ மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி *** இது பட்டருடைய திருவாக்கு.
2. *** அறிவிலா மனிசர் *** இது திருமாலைப் பாசுரம்.
3. ***உய்த்துணர்வென்னு மொளிகொள் விளக்கேற்றி*** இது பேயாழ்வார் பாசுரம்.
4. *** ஞானச் சுடர்விளக் கேற்றினேன் *** இது பூதத்தாழ்வார் பாசுரம்.
5. *** பிறங்கிருள் நிறங்கெட * * நந்தா விளக்கே* *மறையாய் விரிந்த விளக்கை* *வந்து பன்னுகலை நால்வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாயருளிய* *கலைகளும் வேதமும் நீதிநூலும்*** இவை யைந்தும் திருமங்கையாழ்வார் பாசுரங்கள்.
6. ***பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்க* *வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு *** இவை பெரியாழ்வார் பாசுரங்கள்.
7. ***இவையன்றே நல்ல இவையன்றே தீய* *மிக்கஞானமூர்த்தி யாய வேதவிளக்கினைக் கண்டு *** இவை நம்மாழ்வார் பாசுரங்கள்.

8. ***துளக்கமில் விளக்கமாய்*** இது திருமழிசையாழ்வார் பாசுரம். ஆக இத்தனை பாசுரங்களிலுள்ள சொற்களை, தாம் கூற விரும்பிய பொருளுக்குத் தக்கவாறு கண்டங்களாக வெடுத்துத்திரட்டி ஒரு சூர்ணையமைத்துள்ள அதிசயம் என்னே!.

இந்த முதல் சூர்ணையில் இவ்வாசிரியர் வெளியிட விரும்பிய விஷயம் யாதெனில், சிறிதும் விடாமல் அதை நம்முடைய வாக்கியமாக எழுதிக் காட்டுகிறோம்;

அறிவிலிகள், ஞானவிளக்கையேற்றி நிபிடமான அகவிருள் நீங்கப்பெற்று எம்பெருமானாகிற விளக்கைக்கண்டு நன்று தீதுகளைப் பகுத்துணருகைக்காக, அகாரமாகிற விளக்கில் கொளுத்தின சாஸ்த்ரங்களாகிற விளக்கைப் பேரருளாளப்பெருமான் அருள் செய்தான்.

என்கிறவிதுவே இந்த முதல் சூர்ணையின் விஷயம். இதைத் தம்திருவாக்கால் அமைத்தருளாமல் முன்னோர்களது மொழிகளைக்கொண்டே வெகு அழகாக வெளியிட்டுள்ளார். 'பகவான் பரமகருணையாலே சாஸ்த்ரங்களை உபகரித்தான்' என்கிற விஷயத்தைத் திருமங்கையாழ்வார் ஒரு பாசுரத்தாலும், பட்டர் ஒரு ச்லோகத்தாலும் கூறியிருக்கையாலே, அவ்விரண்டு மேற்கோள்களையும் எடுத்தாள விரும்பிய ஆசிரியர், ஆதியில் **காருணிகனான ஸர்வேச்வரன்** என்றதனால் "**மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி**" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியையும், முடிவில் **நீர்மையினாலருள்செய்தான்** என்றதனால் "கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள்தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தையும் தொகுத்தருளினார்.

பகவான் இப்படிப்பட்ட பேருதவி செய்தருளினது ஜ்ஞானஹீனர்களான மனிசர்களுக்காகவென்று கூற விரும்பிய ஆசிரியர், அதையும் தமது சொல்லால் சொல்லாது **அறிவிலா மனிசர்** என்றிட்டுச் சொன்னது "அறிவிலா மனிசரெல்லாம்" என்கிற திருமாலைப்பாசுரத்தை நினைப்பூட்டவே. மனிசர் அறிவில்லாதவர்கள் என்பதற்கு ஒரு மேற்கோள் காட்டவேண்டிய அவசியமில்லையானாலும், கூடுமான வரையில் பெரியோர்களின் ஸ்ரீஸூக்திகளையிட்டே பணிக்கவேணுமென்று இவ்வாசிரியரின் திருவுள்ளமென்பது இதனால் நன்கு விளங்கும். "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்" என்ற நன்னூல் இங்கு நினைக்கத்தக்கது.

இங்கு ஒரு சிறிய சங்கை ஆராய்ச்சிப் புலவர்களுக்குத் தோன்றக் கூடியதுண்டு; அதாவது—முதலில் **காருணிகனான** என்றிட்டது "காருணிகோ ததாதி" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியைக் காட்டுதற்கேயன்றோ; அந்த பட்டர் ச்லோகத்தில் "**விவேகஞ்சு ஈச: ததாதி**" என்றிருக்கிறதே யொழிய **ஸர்வேச்வர:** என்றில்லையே. ஆகவே, "காருணிகனான ஈசன்" என்று இவ்வாசிரியர் பணித்திருக்கவேண்டுமே; 'ஸர்வேச்வரன்' என்று வேறுசொல்லையிட்டுப் பணித்தது ஏன்? என்பதாம். இந்த சங்கைக்குப் பரிஹாரம் வெகு நுட்பமான ஆராய்ச்சியினால் பெறவேண்டியிருக்கின்றது. கேண்மின்; பகவான் சாஸ்த்ரங்களை யுதவினன் என்கிற விஷயத்தை பட்டர்போலவே திருமங்கையாழ்வாரும் கூறியுள்ளாரென்றும், அவருடைய பாசுரமும் இச்சூர்ணையில் தொகுக்கப்பட்டுள்ளதென்றும் கீழே தெரிவித்தோமல்லவா? அந்தப் பாசுரத்தில் 'கலைகளும் வேதமும் நீதிநூலும்... **வானவர்க்கும்**

பிறக்கும் நீர்மையினா லருள்செய்து என்று, விண்ணுலகத்தாரோடு மண்ணுலகத்தாரோடு வாசியற ஸர்வ ஜனங்களுக்கும் அருள்செய்ததாகச் சொல்லியிருப்பதைத் திருவுள்ளத்திற் கொண்டு அதையும் காட்டவேண்டி **ஸர்வேச்வரன்** என்றாரென்க. வியாக்கியானத்தில் காட்டப்படாமலிருந்தாலும் இப்படி நுட்பமாக ஆய்ந்து அறியவேண்டியவையும் இந்நூலில் பலவுள்ளன. இடையில் தோன்றிய சங்கையும் பரிஹாரமும் நிற்க. இனி ப்ரக்ருத விஷயத்திற்செல்வோம்.

இதற்குமேல், **ஞான விளக்கையேற்றி** என்று கூறநினைத்த ஆசிரியர் அதையும் தமது சொல்லால் சொல்லாமல் ஆழ்வார்பாசுரத்தாலேயே சொல்லுமிடத்து, அவ் விஷயத்திற்குப் பூதத்தார் பாசுரமொன்றும், பேயார் பாசுரமொன்றுமாக இரண்டு மேற்கோள்கள் காட்டத் திருவுள்ளம்பற்றி **உணர்வென்னும் சுடர் விளக்கேற்றி** என்ற சொல்தொடர் அமைத்திருப்பதானது, மிகவற்புதம். இதனால் *உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி வைத்து* என்கிற பேயார் பாசுரமும், *ஞானச் சுடர் விளக்கேற்றினேன்* என்கிற பூதத்தார் பாசுரமும் நன்கு காட்டப்பட்டன. "உணர்வென்னும் விளக்கேற்றி" என்றோ "ஞான விளக்கேற்றி" என்றோ மூலமியற்றியிருந்தாலும் இங்கு ஆசிரியர்க்கு விருப்பமான பொருள் தோன்றக் குறையில்லை. ஆனாலும், மேற்கோள்களை அதிகமாகக் காட்டியருளவேணுமென்கிற விருப்பமே இப்படிச் சொல்தொடரை அமைக்கப் பண்ணிற்று.

இந்த ஸந்தர்ப்பத்தில் மிக முக்கியமாக இங்குத் தெரிவிக்கவேண்டிய தொன்றுண்டு; இந்நூலைக் கண்டபாடஞ்செய்து தரித்தாலொழியப் பயனில்லை. அப்படிக் கண்டபாடம் செய்திருப்பவர்கள் சிலரே யாவர். அவர்களும் பலவிடங்களில் தவறான—மிகத் தவறான பாடங்களை அந்த பரம்பரையாய் ஆதரித்துள்ளாரென்பதைப்பற்றி மேலே விரிவாக வரையப் போகிறோம். இங்கும் சிறிது தெரிவிக்கிறோம். இப்போது நாமெடுத்து விவரித்த இவ்விடத்தில் "உணர் **வென்னும்** சுடர்விளக்கேற்றி" என்று பாடம் பண்ணாமல் 'உணர்வெனும் சுடர்விளக்கேற்றி' என்றே பலரும் பாடம்செய்துள்ளார்கள். ஆசிரியர் எந்த ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைக் கொண்டு இவ்வாக்கியம் இட்டருளினாரோ அந்த ஸ்ரீஸூக்தியில் "உணர்**வென்னும்**" என்றுள்ளதேயல்லது "உணர்**வெனும்**" என்று (தொகுத்தல் விகாரமாக) இல்லை; திருமங்கையாழ்வாருடைய 'வாடினேன் வாடி' யென்கிற பாசுரத்தில் "உணர்**வெனும்** பெரும்பதம்" என்றுள்ளது. ஆனால்; அந்தப்பாசுரத்திற்கு இங்கு ப்ரஸக்திலேசமுமில்லை. "உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி" என்கிற பேயாழ்வாருடைய வெண்பாவே இங்கு விஷயமாதலாலும், அதில் தொகுத்தல் விகாரமில்லாமையாலும், இல்லாத விகார மொன்றைப் புகுத்த யார்க்கும் அதிகாரமில்லாமையாலும் "உணர்**வென்னும்** சுடர்விளக்கேற்றி" என்பதே சுத்தமான பாடம். **அந்த**பரம்பரையினால் வந்த தவறான **பாடம்** தவிர்க்கத் தக்கது—என்பது இங்கு ப்ராஸங்கிகமாக வுணர்த்தலாயிற்று. இனி ஆரம்பித்த விஷயத்திற் செல்வோம்.

பிறகு, **நிபிடமான அகவிருள் நீங்கப்பெற்று** என்று ஆசிரியர் தாம் கூற விரும்பிய விஷயத்தையும் ஆழ்வார் பாசுரத்தாலேயே சொல்லப்புகுந்து, இதற்கும்

இரண்டு ஆழ்வார்களின் பாசுரங்களைக் காட்டவேண்டிப் **"பிறங்கிருள் நீங்கி"** என்ற சொல்தொடர் அமைத்தது பரம சாதுர்யம். இதில் இரண்டு ஆழ்வார்களின் பாசுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. *பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப் பிறங்கிருள் நிறங்கெட* என்பது திருமங்கையாழ்வாரருளிச்செயல். *பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்க* என்பது பெரியாழ்வார் பாசுரம். இவ்விரண்டு பாசுரங்களையும் சேரத் திரட்டியிருக்கு மழகு காண்மின்; இங்கு மூலம் **"பிறங்கிருள் நீங்கி"** என்றுள்ளது. பிறங்கு என்பதனால் திருமங்கையாழ்வார் பாசுரத்தைக் காட்டினார். 'நீங்கி' என்பதனால் பெரியாழ்வார் பாசுரத்தைக் காட்டினார். 'பிறங்கிருள் நிறங்கெட்டு' என்றாவது 'பேரிருள் நீங்கி' என்றாவது மூலமியற்றி யிருந்தால் ஆசிரியர்க்கு விருப்பமான பொருள் தோன்றாமல் போகாது, தோன்றியே தீரும்; ஆனாலும், இரண்டு மேற்கோள்கள் காட்டின சுவை தோன்றாதன்றோ? பலமேற்கோள்கள் காட்டப்பட்டனவென்பது மேற்பார்வையில் சிறிதும் தெரியாதபடி அமைத்திருப்பதும் ஒரு ஆச்சரியம்! இதுவே இந்நூலுக்கு ஒவ்வொரு சூர்ணையிலும் அஸாதாரணமான சிறப்பு என்றுணர்க.

இதற்குமேல் **"எம்பெருமானாகிற விளக்கைக் கண்டு"** என்று ஆசிரியர் சொல்ல நினைத்த விஷயத்தையும் ஆழ்வார்பாசுரத்தாலேயே சொல்லுமிடத்து, எம்பெருமானை விளக்காகக் கூறுவது பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஆகிய மூவருடைய பாசுரங்களினாலும் ஸித்திக்கின்றதென்று காட்டவேண்டி **"மேலிருந்த நந்தா வேத விளக்கை"** என்று சொல்தொடர் அமைத்தது வெகு அற்புதம். *வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு* என்றவர் பெரியாழ்வார். *நந்தாவிளக்கே* என்றவர் திருமங்கையாழ்வார். *மிக்கஞான மூர்த்தியாய வேதவிளக்கினை கண்டு* என்றவர் நம்மாழ்வார். இம்மூன்று மேற்கோள்களும் விளங்குமாறு **"மேலிருந்த நந்தா வேதவிளக்கைக்கண்டு"** என்று தொடுத்தது மற்றொருவர் மதிக்கும் நிலமன்று. மேலிருந்த விளக்கை யென்றோ, நந்தாவிளக்கை யென்றோ, வேதவிளக்கை யென்றோ, ஏதேனுமொரு விதமாகப் பேசியிருந்தாலும் போதும்; ஆனால், மூன்று மேற்கோள்கள் காட்டினவாறது அப்போது விளங்காதன்றோ? இதிலும் பலமேற்கோள்கள் காட்டப்பட்டன வென்பது தெரியாதபடியே சொல்தொடை அமைந்துள்ளது.

இதற்குமேல் **நன்றுதீதுகளைப் பகுத்துணருகைக்காக** வென்று தாம் சொல்ல நினைத்த விஷயத்தையும் இரண்டு மேற்கோள்களால் கூறவிரும்பிய ஆசிரியர் **"நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு"** என்று சொல்தொடர் அமைத்தார். இதில் *இவையன்றே நல்ல இவையன்றே தீய* என்ற நம்மாழ்வார் பாசுரமும், *ஸதஸதீச விவேகதும்* என்ற பட்டர் ச்லோகமும் கையாளப் பட்டிருப்பது காண்க. நல்லதும் தீயதுமறிகைக்கு என்றோ, ஸதஸத்துக்களை விவேகிக்கைக்கு என்றோ மூலமியற்றியிருக்கலாம்; ஆனால், அப்போது ஒரு ப்ரமாணவசனமே மேற்கொண்டதாகும். அவ்வளவில் த்ருப்தியடைபவரல்லரே இவ்வாசிரியர்.

இதற்குமேல் **"அகாரமாகிற விளக்கில்"** என்று சொல்ல நினைத்த ஆசிரியர், அகாரத்தை விளக்காகக் கூறுவது திருமங்கை யாழ்வாருடையவும் திருமழிசையாழ்வாருடையவும் பாசுரங்களினால் ஸித்திக்கின்றதென்று காட்ட வேண்டி **மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின** என்று சொல் தொடர் அமைத்தார். *மிக்கானை மறையாய்விரிந்த விளக்கை* என்றருளிச் செய்தவர் திருமங்கையாழ்வார்; *தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்* என்றருளிச் செய்தவர் திருமழிசையாழ்வார்; இவ்விரண்டு மேற்கோள்களும் உணரலாம்படி "மறையாய்விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின" என்று மூலமமைத்தது மற்றொருவருடைய சிந்தைக்கும் கோசரமன்று, மறையாய்விரிந்த விளக்கிலென்றோ துளக்கமில் விளக்கிலென்றோ இயற்றியிருந்தாலும் குறையில்லை. ஆனால், அப்போது இச்சுவை காணமுடியாததாகும்.

இந்த முதல் சூர்ணையில். ஞானத்தை ஒரு விளக்காகவும், எம்பெருமானை ஒரு விளக்காகவும், அகாரத்தை ஒரு விளக்காகவும் பேசிவந்தபடிக்கிணங்க, சாஸ்த்ரத்தையும் ஒரு விளக்காகப் பேசவேண்டி **ப்ரதீபமானகலைகளை** யென்று மூலமியற்றியுள்ளார். இதிலுள்ள 'ப்ரதீபமான' என்கிற விசேஷணமானது பட்டர் ஸ்ரீஸூக்தியிலிருந்து கொள்ளப் பட்டது (*மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி* என்றாரே அவர்.) அதற்குமேல் **கலைகளை** என்கிற விசேஷ்யமானது *கலைகளும் வேதமும் நீதிநூலும்* *பன்னுகலை நால்வேதம்* என்ற திருமங்கை யாழ்வார் பாசுரங்களிலிருந்து கொண்டு கூறப்பட்டது.;'

இந்த சூர்ணையில், ஆரம்பத்தில் திருவுள்ளம் பற்றின **காருணிகோததாதி** என்ற பட்டர் ஸ்ரீஸூக்திக்குச் சேர **நீர்மையினாலருள் செய்தா** னென்று திருமங்கை யாழ்வார் பாசுரத்தினால் முடித்ததானது மிகவும் ரஸிக்கத்தக்கது.

இன்னமும் பல விசேஷங்கள், இதிலே உய்த்துணரவேண்டிய மருமங்களாகவுள்ளன; அவற்றையும் உணர்த்துகிறோம். "கண்ணன் பின்மாலையெழுந்து கோவிலை வலம்வந்து குளஞ்சென்று நீராடித் தாமரைப் பூப் பறித்துவர எண்ணங்கொண்டு இரவில் படுத்துக் கொண்டான்" என்று ஒருவர் சொன்னால், இந்த மஹாவாக்யத்தில் காணப்படுகிற **எழுந்து, வலம்வந்து, சென்று, நீராடி, பறித்து** என்கிற வினையெச்சங்கள் இறந்தகால வினையெச்சங்களாக இருந்தாலும் எதிர் காலப் பொருள்படுமேயன்றி இறந்தகாலப்பொருள் படுவதில்லை யென்பது தெளிவு; பின்மாலை யெழுந்திருக்கவும், கோவிலை வலம்வரவும், குளம் செல்லவும், அங்கு நீராடவும், தாமரைப்பூப் பறிக்கவும் திரும்பிவரவும் எண்ணங்கொண்டு படுத்துக் கொண்டதாகவே சொல்லவேண்டியுள்ளது. இவ்விதமாகப் பொருள்கொள்ள வேண்டிய பிரமேயம் இத்திவ்விய நூலில் மிகவுண்டு. இதையும் இந்த முதல் சூர்ணையிலேயே காணலாம். இதில் **விளக்கேற்றி, இருள் நீங்கி. விளக்கைக்கண்டு** என்கிற இறந்தகால வினையெச்சங்கள் எதிர் காலப் பொருளிலேயே பிரயோகிக்கப் பட்டன. **விவேகிக்கைக்கு** என்று மேலுள்ள ஸ்ரீஸூக்திக்குச் சேருமிது. 'விளக்கேற்றுகைக்காகவும், அதனால் இருள் நீங்கப் பெறுதற்காகவும், பின் எம்பெரு

மாநுகிற விளக்கைக் காண்கைக்காகவும் நல்லதும் தீயதும் விவேகிக்கைக்காகவும் கலைகளை யருள் செய்தானென்பதாக இந்த விவக்ஷிதமென்று உணரவேணும்.

மற்றொரு விஷயமும் குறிக்கொள்க. அதாவது, திவ்விய ப்ரபந்தப் பாசுரங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை முதலானோர் அருளிச்செய்த வியாக்யானங்களில் காணாத சில அர்த்த விசேஷங்களும் இவ்வாசிரியர் திருவுள்ளம் பற்றுவதுண்டு. நிர்வாஹ பேதங்களென்கிற முறையிலே இது தீதற்றதே. இப்படி இவ்வாசிரியர் கொண்டதோர் அர்த்த விசேஷமும் இந்த முதல்சூர்ணையிலேயே காணக் கிடக்கின்றது. *மறையாய் விரிந்த விளக்கை* என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் காணாதபொருள் இவர்கொண்டது. எம்பெருமான்றன்னையே ஸாக்ஷாத்தாக மறையாய் விரிந்த விளக்கென்று ஆழ்வார் கூறினதாகப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் காட்டுகின்றது. இவ்வாசிரியரோ வென்னில் ஸகலவாக்குக்களுக்கும் வித்தான அகாரத்தை மறையாய் விரிந்த விளக்கென்று சொன்னதாகக்கொண்டு அந்த அகாரத்திற்கு எம்பெருமான் பொருளாயிருப்பவனென்கிற காரணத்தினால் [அந்த ஸாமாநாதிகரண்ய நிதானத்தினால்] ஆழ்வார் பாசுரத்தில் எம்பெருமான் பொருள்படுகிறானென்று திருவுள்ளம் பற்றி இந்த சூர்ணையில் அகாரபரமாகவே அந்தப்பாசுரத்தை மேற்கொண்டருளினார். இப்படிப்பட்ட நிர்வாஹபேதம் இந்நூலில் ஐந்தாறிடங்களில் வருவதுண்டு. மேலே "பண்ணார் பாடல் பண்புரை யிசைகொள் வேதம்போலே" (50) என்ற சூர்ணையின் வியாக்கியானத்தில் மணவாளமுனிகளின் ஸ்ரீஸூக்தியுங்காண்க.

மற்றுமொரு பரம ஆச்சரியமான விஷயமும் இந்த திவ்யக்ரந்த அமைப்பில் பொலிந்துள்ளது; அதாவது, பலபல பாசுரங்களை இவ்வாசிரியர் மேற்கோளாக எடுத்தாளச்செய்தேயும் அவை இவருடைய ஸொந்தவாக்யம்போல் வரிசையாக அந்வயம் பெற்று விளங்கா நிற்கும். மற்றை நூல்களில் மேற்கோள்களைக் காட்டினால் "என்கிறபடியே" என்றும், "என்று" என்றும் இடையிடையே காணப்படும். அவை ப்ரமாண வசனங்களென்று தனிப்பட்டு நிற்குமேயொழிய நூலாசிரியருடைய வாக்ய சைலியாகவே பொருந்திப் பொருள் படமாட்டா. ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி, ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய ஸகல க்ரந்தங்களும் அவ்வகையிலேயே அமைந்தன. இந்நூலில் அப்படி மேற்கோளெடுத்துக் காட்டுவதாகத் தாமே கூறுகிற விடங்கள் மிகச்சில; "மறந்தேனுனையிகிலாதே உணர்விலேனேனிலையனர்த்தென்றும்" "கடன்ஞாலம் மின்னிடை மல்லிகை...வாயுந்தீர்ப்பா ரென்னுமவற்றிலே தோன்றும்" என்பவை முதலிய சில சூர்ணைகளில் மாத்திரமே மேற்கோளான ப்ரமாணவசனங்கள் தமது வார்த்தையாக அமைந்துபொருள்படாமல் "என்று" "என்றவை" "என்கிற" இத்யாதி பதங்களைச் சேர்த்துத் தனியந்வயமாகக் காட்டப்பட்டிருக்கும். பெரும்பாலும் அப்படியல்லாமல் 'பிரமாணவசனங்களான மேற்கோளிவை' என்றே பிறரால் தெரிந்துகொள்ள முடியாமலும், அப்படி எடுத்தாளப்படுகிற அவையும் வரிசையாய் மிகப்பொருத்தமான அந்வயம் பெறும்படியாகவும் தொடுக்கப்பெறுவது இவ்வாசிரியரொருவர்க்கே சிறப்பாகவும் அற்புதமாகவும்

அமைந்த நடை. இந்நூலில் இந்த நடையொன்றே மாஞானிகளின் நெஞ்சையுருக்கக் கூடியது. இவ்விஷயத்தையும் மேலே நாமெடுத்து விவரித்த முதல் சூர்ணிகையிலேயே காணலாம். "உணர்வென்னும் சுடர்விளக்கேற்றி" 'பிறங்கிருள் நீங்கி' 'மேலிருந்த நந்தா வேதவிளக்கை' 'மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில்' என்னுமிந்த வாக்கியங்களில் ஒவ்வொன்றிலும் பல மேற்கோள்கள் புகுந்திருக்கவும் "என்கிறபடியே" என்னவேண்டிய அவகாசமேயில்லாமல் இவருடைய ஸொந்த வாக்குப்போலே ஒன்றோடொன்று இணங்கி வரிசையாக ஒருநீராய்ப் பொருள்பட்டிருக்குமழகு ஒவ்வோரிடத்திலும் ஆழ்ந்து ஆராய்ந்து உணரவேண்டிய மஹத்தான அதிசயம். பலபல மேற்கோள்களையும் தமது வார்த்தையாகவே ஆக்கி அடைவே அந்வயம் பெறத் தொடுப்பதென்பது தனிப்பட்டதொரு சக்தி விசேஷமன்றோ. இவ்விஷயத்தில் இன்னமுங்கேண்மின்.

இரண்டாம் ப்ரகரணத்தில் '**ச்ரமணீ விதுர ரிஷிபத்நிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு**' என்பது ஒரு ஸ்ரீஸூக்தி. 'சபரியையும் விதுரரையும் ரிஷிபத்நியையும் பரிசுத்தப்படுத்தின புண்டரீகாக்ஷனுடைய திவ்யகடாக்ஷமானது' என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இங்கு 'பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு' என்கிற சொல்தொடர் மிக அற்புதமானது. முன்னே யெடுத்த மூவரையும் எம்பெருமான் பரிசுத்தப்படுத்தியருளினதை அந்தந்த ஸ்தலங்களிலுள்ள ப்ரமாணங்களைக் கொண்டே காட்டுவதாகவன்றோ இந்த சொல்தொடர் அவதரித்திருக்கின்றது. (1) *சக்ஷுஷா தவ ஸௌம்யேந **பூதாஸ்மி** ரகுநந்தந!* என்கிற சபரியின் வார்த்தையை நினைப்பூட்டுகிறது 'பூதராக்கின' என்கிற சொல். (2) விதுரர்திருமாளிகையிலே அமுதுசெய்தருளின கண்ணபிரானை நோக்கித் துரியோதனன் 'பீஷ்மாசார்யரையும் த்ரோணாசார்யரையும் என்னையு முபேக்ஷித்து (விதுரனென்னும்) சூத்ரனுடைய அன்னத்தை எவ்வாறு புஜித்தாய்? என்று ஆக்ஷேபிக்கும்போது *பீஷ்ம த்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்* என்ற ச்லோகத்தில் 'புண்டரீகாக்ஷ!' என்று ஸம்போதித்தான்; வையவந்த இந்தவிடத்திலே இப்படிப்பட்ட ஸம்போதநம் தகவேதகாது. ஆனாலும் தைவிகமாகவே அவன் வாயில் **புண்டரீகாக்ஷ!** என்கிற ஸம்போதனம் வெளிவந்தது; விதுரன் சூத்ரயோநியில் பிறந்தவனாயினும் உன்னுடைய தாமரைபோன்ற திருக்கண்பட்டதனால் சபரியைப்போலவே அவனும் பரிசுத்திபெற்றனன் என்பதாகக் காட்டுவதாம் இந்த புண்டரீகாக்ஷ! என்பது. ஆகவே இதுவும் திருக்கண்ணோக்காலே பரிசுத்தப்படுத்துகையென்கிற ப்ரக்ருத உத்தேச்ய விஷயத்தில் விதுரரைப் பரிசுத்தராக்கினதற்கு ப்ரமாண வசனம் காட்டினபடியாயிற்று. (3) இனி மூன்றாவதாகவுள்ள **நெடுநோக்கு** என்கிற சொல் *வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் **போது**, ஈதென்று பார்த்திருந்து **நெடுநோக்குக்** கொள்ளும் பத்தவிலோசனத்து* என்கிற ஆண்டாள் பாசுரத்தை நினைப்பூட்டும் முகத்தாலே அந்த விஷயத்திற்கு ப்ரமாணம் காட்டினபடியாகிறது. ஆக இங்ஙனே ப்ரக்ருத விவக்ஷிதத்திற்கு ப்ரமாணம் காட்டுவதாகப் பிறர் தெரிந்துகொள்ள முடியாதபடிக்கு ப்ர-

மாணங்களைக் காட்டும் முறையிலே உக்திவிந்யாஸம் செய்வது ஆசார்ய ஹ்ருதய காரர்க்கு அஸாதாரணமான ஸாமர்த்தியம். இப்படி அமைந்த க்ரந்தம் வேறு இல்லையாதென்பது புநருக்தம்.

இந்நூலில் 'இவற்றுக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்' என்பது எட்டாவது சூர்ணை. இதன் பொருளென்னவென்றால், கீழ்ச் சூர்ணையில் சொல்லப் பட்ட ஜன்மத்திற்கு மூலம் ப்ரபலங்களான புண்ய பாபங்கள்; (கீழ்ச் சூர்ணையில் சொல்லப் பட்ட) கடாக்ஷத்திற்கு மூலம் ஸ்வாபாவிகக்ருபையாகிற ஸுக்ருதம். என்பது பொருள். இப்பொருளுக்கு வாசகமாக மூலத்திலுள்ள ஸ்ரீ ஸூக்தியாவென்னில், 'இருவல்லருள் நல்வினைகள்' என்பது. *சார்ந்த இருவல்வினைகளும் சரித்து* என்கிற பாசுரத்தையும், *தொல்லருள் நல்வினையால்* என்கிற பாசுரத்தையுங்கொண்டு இந்த ஸ்ரீஸூக்தி வெகு அற்புதமாக அருளிச் செய்யப்பட்டது. ஆசார்யஹ்ருதயகாரருடைய ஸாமர்த்தியங்களில் விலக்ஷண ஸாமர்த்தியமிது; விசேஷணம் பேதப்படாமல் விசேஷ்யங்கள் மட்டும் பேதப்பட்டிருக்கும் ப்ரமாணங்களைத் தாம் சேர்க்கும்போது, விசேஷண பதத்தை ஒரு தடவை மட்டும் சொல்லி விடுவர். (இதற்கு உதாஹரணம்.) *ஸர்வலோக சரண்யாய* என்கிற விபீஷண வசனத்தையும், *அபயம் ஸர்வ பூதேப்ய:* என்ற பெருமாள் வசனத்தையும் ஒரே வார்த்தையாக்கத் திருவுள்ளம்பற்றி "ஸர்வலோக பூதேப்ய:" என்றருளிச் செய்திருக்கிறார். மேலே காட்டின இரண்டு வசனங்களிலும் விசேஷ்ய பதங்கள் பேதப் பட்டிருந்தாலும் (ஸர்வ என்கிற) விசேஷணபதம் ஒன்றேயாதலால் அதை முன்னே ஒருமுறை ப்ரயோகித்து, வெவ்வேறான விசேஷ்யங்களை யொன்று சேர்த்து (ஸர்வ-லோகபூதேப்ய:) என்றவிது வேறொருவருடைய மதிக்கு நிலமன்று.

விசேஷணங்கள் வேறுபட்டு விசேஷ்யம் மட்டும் வேறுபடாமலிருக்கும் ப்ரமாண வசனங்களைத்தாம் சேர்க்கும்போது, வெவ்வேறான விசேஷணபதங்களை அப்படியே காட்டி, வேறுபடாத விசேஷ்யத்தை மட்டும் ஒரு முறை சொல்லுவர்; இதற்கு உதாஹரணம் மேலே காட்டின (இருவல்லருள் நல்வினைகள்) என்பது. *சார்ந்த இருவல்வினை* என்றவிடத்தும் *தொல்லருள் நல்வினை* என்ற விடத்தும் வினையென்பதே விசேஷ்யமாதலால் அதை இருமுறை பிரயோகித்திலர். ஒரு பாசுரத்தில் (இருவல்) என்பது விசேஷணம்; மற்றொரு பாசுரத்தில் (அருள்நல்) என்பது விசேஷணம். இந்த வெவ்வேறுபட்ட விசேஷணங்களை ஒன்று சேர்த்து (இருவல், அருள்நல்) என்றாக்கி விசேஷ்யமான வினையைக் கூட்டி 'இருவல்லருள் நல்வினைகள்' என்று யோஜித்திருப்பதானது அஸாதாரண சக்தி விசேஷ நிபந்தநம்: இவ்விடத்து வியாக்யானத்தில் மணவாளமாமுனிகள் விரிவாக விவரணம் காட்டியருளாமல் 'இருவல்லருள் நல்வினைகள் என்றது இருவல்வினையும் அருள்நல் வினையும் என்றபடி' என்று இவ்வளவே காட்டியருளினார். நெடுநாளைக்கு முன்னே தெலுங்குலிபியிலும் தமிழ்லிபியிலும் ஆசார்ய ஹ்ருதய வியாக்யானத்தைப் பதிப்பித்தவர்கள் இங்கு 'இருள்வல்வினையும் அருள் நல்வினையுமென்றபடி' என்று இல்லாததொரு ளகாரத்தைச் சேர்த்துத் தவறாக அச்சிட்டு விட்டார்கள். அது நிற்க

இங்ஙனே எடுத்து நிரூபிக்கவேண்டிய அதிசயங்கள் இந்நூலில் அளவற்றவை. ஒப்புயர்வற்ற சாதுரியமும் ஈடுமெடுப்புமில்லாத பாண்டித்யமும் மிக விளங்க அமைந்தது இவ்வுலகின்கண் இந்நூல் ஒன்றேயென்று எத்தனை தடவை கூறினாலும் மிகையாகாது.

இந்நூலைக் கண்டபாடமாக்கி அநுஸந்தானம் செய்துவருவார்பலருளர். அவர்கள், நெடுநாளைக்கு முன்பு அச்சிடப்பட்டிருக்கின்ற மூலப்பதிப்புகளிலும் வியாக்கியானப் பதிப்புகளிலும் காண்கிற பலவகைப் பிழைகளையும் விடாமல் தமது கண்டபாடத்திலே ஆதரித்து வருகின்றார்களென்பதைப் பலவிடங்களிலே நாம் கண்டு வருந்துவதுண்டு. பெரும்பாலும் பிரசாரமுள்ள திவ்யப்ரபந்தப் பாசுரங்களிலுமே பலபல பிழைகள் புகுந்துள்ளனவென்றால், எளிதில் பொருளுணர முடியாத இந்நூலில் பிழைகள் புகக் கேட்கவேணுமோ? அப்பிழைகளையெல்லாம் அகற்றி அடியேன் சுருக்கமான கருத்துரையுடனும், விரிவான கருத்துரையுடனும், பதவுரையுடனும் மூன்று பதிப்புகள் செய்திருக்கின்றேனென்பதையும் இங்கு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். தனிப்பட்ட மூலப் பதிப்புமுள்ளது.

நல்ல பாடங்களைக் காட்டினாலுங்கூட ரஸிக்கமாட்டாதவர்களும் அநாதி வாஸநா பலத்தாலே ஆக்ரஹப் படுகிறவர்களும் எக்காலத்திலும் எந்நாட்டிலுமுளர். இற்றைக்கும் பலரால் ஆதரிக்கப்படுகிற தவறான பாடங்களில் சிலவற்றை யெடுத்துக்காட்டி, அங்கு இருக்கவேண்டிய யுக்தமான பாடங்களையும் குறிப்பிடுகிறேன். ரஸிகர்கள் கண்டு ரஸிக்க வேணும். கூடிய மட்டில் திருத்தமான பாடங்களையே கொண்டிருக்கும் மஹான்களும் இவற்றைக் குறிக்கொள்க.

—பாடத்திருத்தங்கள்.—

1. முதல் சூர்ணையில் "உணர்வெனும் சுடர்விளக் கேற்றி" என்கிற பாடம் அச்சுப் பிரதிகளிலும் கண்டபாடங்களிலும் வந்திருக்கிறது. இந்த "உணர்வெனும்" என்பது பிசகு; 'உணர்வென்னும்' என்றிருக்க வேண்டுமென்பது கீழே விவரிக்கப் பட்டுள்ளது. (உணர்வெனும் என்று பாடங் கொண்டால் *ஓடினேனோடியுய்வதோர் பொருளாலுணர் வெனும் பெரும்பதம்* என்கிற வாக்கியத்தைக் கொண்ட* வாடினேன் வாடிப் பாசுரமே கொள்ளவேண்டியதாகும்; அது ப்ரக்ருதத்திற்கு அநபேக்ஷிதமாகையாலே அநந்விதமாகும்; *உய்த்துணர் வென்னு மொளி கொள்விளக்கேற்றி* என்கிற பேயாழ்வார் பாசுரமே இவ்விடத்திற்குப் பொருந்துமாதலால் 'உணர் வென்னும்' என்பதே சுத்த பாடமாகும்.

2. ஆறாவது சூர்ணையில் "இவற்றுக்குக் காரணம் இரண்டிலொன்றில் ஒன்றாகைகள்" — என்பது தவறானபாடம். "மூன்றனுள் இரண்டவையகற்றி, ஒன்றினில் ஒன்றி நின்று" என்கிற திருவெழு கூற்றிருக்கைப் பாசுரம் இந்த விஷயவாக்ய மாதலால் ஒன்றினில்' என்பதே சுத்தபாடம்.

3. பதினோராவது சூர்ணை "இவை கிட்டமும் வேட்டு வேளானும் போலே" இத்யாதி. இதில் 'ஒண்பொருள் பொருளல்லாதவை பென்றே' என்றே நாம் ஐம்பது வருஷமாகச் சிந்தனை செய்திருப்பதும் நமது பலபதிப்புகளிலும் அச்சேற்றியிருப்பதுமான பாடம். ஸமீபகாலத்தில், ஒரு பெரியார் நெடுநாளைக்கு முன் திருத்தியிருந்த தெலுங்குலிபி ஸ்ரீகோசத்தைக் காண நேர்ந்தது. அதில் 'பொருளல்லாத வை' என்றவிடத்திலுள்ள வைகாரம் அடிக்கப்பட்டுள்ளது கண்டோம். "ஒண்பொருள் பொருளல்லாத வென்றே" என்பது தான் சுத்தபாடமெனத் தெரிந்தது. எண்பெருக்கந்நலத் தொண்பொருள்* என்கிறபாட்டிலிருந்து 'ஒண்பொருள்' என்பது கொள்ளப்பட்டது; *பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி* என்கிறபாட்டிலிருந்து 'பொருளல்லாத' என்பது கொள்ளப்பட்டது, ஆக "ஒண்பொருள் பொருளல்லாத வென்றே" என்பது பொருத்தம். ஒண்பொருளென்றே, பொருளல்லாத வென்றே என்று யோஜனை. உயர்ந்த பொருளென்று பாராமல், அபதார்த்தமென்று பாராமல் என்றதாயிற்று. ஆகவே இங்கு வைகாரம் அநபேக்ஷிதமேயாகிறது. இனி, ஒண்பொருள் என்பதற்கும் பொருளல்லாத வென்பதற்கும் த்வந்த்வஸமாஸம் பண்ணினால் (ஒண்பொருள் பொருளல்லாதவை) என்னுகலாம். அதற்கு ஆவச்யகதையிருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் இது அஸங்கதமான பாடமன்று. வைகாரமில்லாத பாடம் மிகச்சிறக்கும்.

4. பதினைந்தாவது சூர்ணையில் 'ஆஸ்திக்யம் விவேகம்' என்று தனித்தனிப் பதமான பாடம் பிசகு; இது அந்வயியாது. "ஆஸ்திக்ய விவேகாந்யவைசக்ஷத்வ..." என்று ஸமஸ்தமான பாடமே சுத்தமானது.

5. இருபதாவது சூர்ணையில் "உணர்ந்துணர்ந்துணர்வும்...மிகவுணர்வு முண்டாம்" என்கிற பாடம் மிகவும் தவறு. சிறிதும் அந்வயியாது. உணர்வு உண்டாகுமென்று இங்குச் சொல்லுகிறதன்று. சூர்ணையின் தொடக்கத்தில் இவை என்றிருக்கிறது, அது வேண்டுமாம். கீழ்ச் சூர்ணையில் சொன்ன ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியும் உண்டாம் என்றபடி. அவை எதனாலேயுண்டாம் என்னில், அந்த ஹேதுக்களைச் சொல்லுகிறது இந்த சூர்ணை. "ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந்துணரவும் உணர்வைப்பெறவூர மிகவுணரவு முண்டாம்" என்பது திருத்தமான பாடம். உணர—உணர்வதனாலே என்றபடி.

6. முப்பத்தைந்தாவது சூர்ணையில் 'குலந்தருமென்றும் மாசிற் குடிப்பழியென்றும்' என்கிற பாடம் மிகத்தவறு; "குலந்தருமென்கிற பாட்டிற் கூறியபடியே கிடைக்கிற மாசில்குடிக்குப் பழியாகுமென்கிற காரணத்தினால்' என்று இங்கு விவக்ஷிதமான பொருளாதலால் "குலந்தரு மென்னும் மாசிற் குடிப்பழியென்று" என்பது திருத்தமான பாடம். "குலந்தரு மாசிற்குடிப்பழியென்று" என்று மொரு பாடமுண்டு; அதில் விசேஷ பாதகமில்லை.

7. சூ. 36ல் "கோத்ரஸூத்ர சரணகூடஸ்தர்" என்பது "கோத்ர சரணஸூத்ர கூடஸ்தர்" என்றிருக்கத்தக்கது. இந்த க்ரமத்திலேயே மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் அவதரித்திருப்பதனால்.

8. சூ. 37ல் "அறியக்கற்று வல்லாரானால்" என்பது பிழை; "வல்லாரானால்" என்றிருக்க வேணும். ஆழ்வார் ஸ்ரீஸூக்தி அங்ஙனேயிருக்கை யாலே. *அறியக்கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே* என்கிற திருவாய்மொழிப் பாசுரமே இங்கு விஷயவாக்கியம்.

9. சூ. 49ல் "சொல்பயிற்றிய வேதம்" என்பது தவறு. "சொல் பயிற்ற, வேதம்" என்பது திருத்தமான பாடம். சொல்பயிற்ற—கற்பித்ததனாலே என்றபடி.

10. சூ. 54ல் "ஸ்வரூப ரூபகுணவிபூதி..." என்பது தவறான பாடம்; இங்கே 'ரூப' என்பது சேராது 'ஸ்வரூப குணவிபூதி' என்றிருக்கவேணும். ரூபமென்பது மேலே தனிப்படவருகிறது.

11. சூ. 57ல் "க்ருவுள் வேறிலாமை" எனபது தவறு; வேறலாமை என்பது திருத்த மான பாடம். "வெள்ள நீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" என்பது மூல ஸ்ரீஸூக்தியாதலால். இல்லாமையும் அல்லாமையும் ஒன்றன்று.

12. சூ. 60ல் "காயோடென்னுமவையே" என்பதில் "என்னுமிவையே" என்று திருத்தவேணும்; "வீழ்கனியு மூழிலையு மென்னுமிவையே நுகர்ந்து" என்கிற பெரிய திருமடற்சந்தை இங்கு விஷயவாக்ய மாதலால்.

13. சூ. 62ல் "விசும்புந்துழாய் திருமாலென்றும் எங்கே காண்கே னென்றும் இவரலமாப்பு" என்கிற பாடம் மிகத்தவறு; அந்வீதம். "திருமா லென் றெங்கே காண்கே னென்னு மிவர்" என்பது திருத்தமான பாடம். (திருமாலென்று) என்றவிடத்திலுள்ள (என்று) என்கிற சொல்லானது ஆச்ரய ஹ்ருதயகாரருடையதன்று; நம்மாழ்வாருடைய பாசுரத்திலேயே அது சேர்ந்துள்ளது; *சிந்தைகலங்கித் திருமாலென்று அழைப்பன்* என்பதன்றோ பாசுரம் அசு, திருமாலென்று என்னுமிவர், எங்கே காண்கே னென்னு மிவர்—என்று விவக்ஷிதமாகையாலே (திருமாலென்றெங்கே காண்கே னென்னுமிவர்) என்கிற பாடமே அந்வயிக்கும். மேலே அசுத்த பாடமாகக் காட்டப் பட்டுள்ள பாடம் அந்வயிக்கவே மாட்டாது.

14. சூ. 63ல். "வேதாதிகளில் பௌருஷமான கீதாவைஷ்ணவங்கள் போலே" என்றவிடத்தில் "பௌருஷ மானவ கீதா......" என்பது திருத்தமான பாடம். *வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்ம சாஸ்த்ரேஷு மானவம்* என்கிற ப்ரமாணவசனமன்றோ இங்கு விஷயம்.

15. 'ம்லேச்சனும் பக்தனுனல்' இத்யாதி 85 ஆம் சூர்ணையில் "முடிமன்னனும்" என்பது 'முடிமன்னவனும்' என்று திருத்தத் தக்கது. "தாளுந் நீண் முடியரசர்தங் குரிசில் தொண்டை மன்னவன்" என்கிற பெரிய திருமொழிப் பாசுரம் இங்கு விஷய வாக்யம். மன்னன் என்கிற சொல்லுக்கும் மன்னவனென்று பேருண்டே யென்று நினைக்கலாகாது. மூலப்ரமாணவசனத்திலுள்ள சொல்லை யன்றோ ஆசிரியர் கையாண்டது.

16. சூ. 94-ல். "கழறலர்ஞான முருவின" என்பது சிறிதும் அர்த்தமில்லாத பாடம். திருவிருத்தத்தில் *கழறலமொன்றே நிலமுழுதாயிற்று* என்ற பாட்டில் 'கழறலம்' என்றும் 'அழறலர்' என்றும் வருவதால் அந்த வாஸனை கொண்டு இங்கு "கழலறலர் ஞான முருவின" என்று பாடம் பண்ணிவிடுகிறார்கள். "கழலலர் ஞான முருவின" என்பது சுத்தமான பாடம். (உலகளந்த) கழலென்ன அலர்ஞானமென்ன [அதாவது தனது விகஸிதஜ்ஞானமென்ன] இவ்விரண்டும் மறுபாடுருவின பரப்பெங்கும் என்றபடி.

17. சூ. 102. "இடகிலேன் நோன்பறிகிலேன்" என்பது அந்வயிக்க முடியாத அபத்த பாடம். "......நோன்பறிவிலேன்" என்பது திருத்தமான பாடம். "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்கிற விஷய வாக்யத்தோடும் பொருந்தும். நோன்பிலேன் அறிவிலேனென்று சொல்ல வேண்டிய ஸ்தானத்தில் (நோன்பறிவிலேன்) என்று யோஜித்தது இந்நூலின் அஸாதாரண நடையில் சேர்ந்தது.

18. சூ. 112. * "இவன் நடுவே அடியானித்யாதி-சூர்ணையில் "இவன் நடுவே அடியானென்ன,...வன்களவிலஹுப்வ்மாக" என்று திருத்திக் கொள்க. இங்கு இன்னமும் பழைய ஏட்டுப் பிரதிகளை இராய்ந்து பார்க்கவே இசை.

19. சூ. 119. "தேறுங்கலங்கி யென்றும்" என்றிருப்பதில் என்று மென்பது அநந்விதம். "தேறுங்கலங்கியென்று தேறியும் தேறுதும் ஸ்வரூபம் குலையாது" என்பதே பொருத்தம். தேறும் கலங்கி யென்று—*தேறுங்கைகூப்பும்* என்கிற பாசுரத்திலும் *கண்ணீர் மிகக் கலங்கிக் கைதொழும்* என்கிற பாசுரத்திலும் தெளிந்த தசையோடு கலங்கின தசையோடு வாசியற எப்போதும் அஞ்ஜலி மாறுதென்கையாலே, தேறியும் தேறுதும் — *தேறியும் தேறுதும் மாயோன் திறத்தனளேயித்திருவே* என்கிறபடியே தெளிவு கலக்கமாகிற உபயாவஸ்தையிலும், ஸ்வரூபம் குலையாது— சேஷத்வரூபமான ஸ்வரூபம் நிலை குலையாது. என்பது இந்த சூர்ணையின் பொருள். இதில் "தேறுங்கலங்கி" என்பது மட்டுமே ப்ரமாணோபாதானம். தேறியும் தேறுது மென்பது திருவாய் மொழிப் பாசுரமேயானாலும் அது ஆசிரியருடைய வார்த்தைப்பாட்டாகவே உபயோகிக்கப் பட்டுள்ளது. ஆகவே (என்றும்) என்றிருந்தால் அந்வயியாது. இவ்விஷயம் நுண்மதியோர்க்கே நிலமாகும்.

20. "வித்யை தாயாகப் பெற்று" இத்யாதியான 121-ஆம் சூர்ணையில் "நோக்கி யலங்கரித்து" என்கிற பாடம் சிறிதும் பொருள் படமாட்டாதது; "நோக்கியர் அலங்கரித்து" என்றே பாடம். "மானேய்நோக்கியரான திவ்யாப்ஸரஸஸ்ஸுக்கள் எதிரே வந்து... அலங்கரித்து" என்கிற வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்க. *மழலை தீரவல்லார் காமர் மானேய்நோக்கியர்க்கே* என்கிற பாசுரமன்றோ இங்கு விஷயம்.

21. அழுந்தொழு மித்யாதி 127ஆம் சூர்ணையில் "ஊனுடை வீரசரிதம் கற்பார்" என்கிற ஸ்தானத்தில் 'வீரசரித மூனைக் கற்பார்' என்கிற பாடம் ஏட்டுப்பிரதிகளில் காண்கிறது. வியாக்கியானத்திற்கு மிதுவே இணங்கும்.

21.B. "பெருக்காறு பலதலைத்து" இத்யாதி 131-ஆம் சூர்ணையில் "உடையப் பெருகுகாதல்" என்பதே நமக்குப் பாடம். இங்கு ஒரு பெரியார் ஸாதித்ததாவது, இவ்விடத்து மணவாள மாமுனிகள் வியாக்கியானத்தில்*பெருந்தமால்வேட்கை* கழியமிக்கதோர் காதல்* என்கிறபடியே—என்று இரண்டு சந்தைகள் உதாஹரிக்கப்பட்டிருக்கையாலே இரண்டாவது சந்தைக்கு மூலத்தில் விஷயமில்லையாகிறது; "உடையப் பெருகு மிகு காதல்" என்பதே சுத்தமான பாடம்-என்று.

22. 'என்பெறுதியென்ன ப்ரமியாது' இத்யாதியான 152-ஆம் சூர்ணையில் "கடந்து புகுந்து தகைவறப்புக்கு" என்பது தவறு. 'கடந்து புகும் தகைவறப்புக்கு" என்பதே திருத்தமான பாடம். கடந்துபுகும் தகைவு அற—கடந்து புக வேண்டுகையாகிற தகைவு இல்லாதபடி என்க.

23. சூ. 156. '**நம்** பிழையும்' என்பது பிசகு; '**தம்** பிழையும்' என்பதே சுத்தபாடம். திருவாய்மொழியில் *என்பிழைகோல் நினைந்தருளி* என்றபாசுரத்தை யுட்கொண்டு ஆசிரியர் தாம் கூறுவதாதலால் தம்பிழையுமென்பதே பொருந்தும். நம்பிழையுமென்றால் அந்வயியாது.

24. சூ. 160. 'மண்ணோர் விண்ணோர் **வெற்பில்**'—இங்கு வெற்பில் என்பது **வைப்பில்** என்று திருத்தத்தக்கது. 'வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு' என்கிற பாசுரம் இந்த விஷய வாக்யம். 'தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே' என்கிற பாசுரத்திற்குச் சேர '**வெற்பில்**' என்கிற பாடமும் இருக்கலாமென்று சிலர் கூறுவது இவ்விடத்து ப்ரமேயமின்னதென்று அறியாமையினாலாகும். இதைப்பற்றின விரிவு மேலே காண்க.

25. சூ. 183. 'ஸௌகுமார்யப்ரகாசம் அச்சேரியிலே' என்பது தவறு; ஆய்ச்சேரியிலே யென்பது சுத்தபாடம். 'உடையநங்கையார் பிறந்தமாகையாலே

ஆழ்வார்க்கு அய்ச்சேரியா யிருப்பதாய்'' என்கிற மணவாளமாமுனிகளின் வியாக்கியானஸ்ரீஸூக்தியோடுஞ் சேரும். இதைப்பற்றியும் மேலே விரிவு காண்க

26. சூ. 183. "முகநாபி பாதங்கள் த்வாரத்ராயத்தாலே''—முகநாபி பாதங்களை என்பது சுத்த பாடம்.

27. சூ. 198. "வைத்தெழவூதி"—ஊது என்று திருத்துக.

28. சூ. 202. "போகேலென்றாலும் உகப்பையும் தவிர்ந்து''—'போகேலென்றால் உகப்பையுந் தவிர்ந்து' என்பது சுத்த பாடம். 'உம்மை' இங்குவேண்டா.

29. சூ. 209. "அடைக்கலம் சூடி பொய்யாதானும்'' 'சூடிய' என்று திருத்துக. *திருமால் திருப்பேர்வல்லாரடிக்கண்ணி சூடிய என்கிற திருவிருத்தப் பாசுரம் காண்க.

30. சூ. 211. "எம்மாவொழி நெடுவே யென்கிற''—'எம்மாவொழிவில் நெடு... என்று திருத்துக.

31. சூ. 118. "காலாஸக்தி பலகதிக்கு''—'காலாஸத்தி ..' என்று திருத்துக. ஆஸக்தியன்று, ஆஸத்தி.

32. சூ. 219. "வளவேழ்வைப்பாமவன் அவையுள்'' —இங்கு 'அவன்' என்பது அநந்விதம். 'வளவேழ்வைப்பாமவையுள்' என்பதே சுத்தம்.

33. சூ. 220. "எம்மா வீட்டை உபாயாநுகுணமாக்கினவர்'' —உபாயாநு குண....' என்று திருத்துக. (இதிலேயே) "திண்ணனவவ தென்று"—"திண்ணனவீவதென்று'' சுத்தபாடம்.

34. சூ. 222. "ஆடுங்களெளிறைச்சி''—'ஆடுகளெளிறைச்சி' என்று திருத்துக. திருவாய்மொழியில் *அங்கோராடுங்களும் பராய்* என்றிருந்தாலும் உம்மைகளை நீக்கிய ஆசிரியர் பாசுரம் திரட்டியுள்ளாரென்பது ஸுஸ்பஷ்டம்.

35. சூ. 223. "தேவர் குழாங்களைக் கண்டு கூப்பிட்டு'' — காப்பிட்டென்று திருத்துக. *பொலிக பொலிக பொலிகவில் நோக்கு.

36. சூ. 124. "திரிவிக்கிரமனுக்கு குறள் கோலப்பிரானைப்''—'திரிவிக்கிரமனுக்க குறள்...' என்பது சுத்த பாடம்.

37. சூ. 226. 'அவர்க்கே குடிகளாய் பாரதந்த்ரஸ்வரூபத்தை' —'குடிகளாம்' என்று திருத்துக.

38. சூ. 227. "வைகல்வாழ்முதலானவஸித்தோபாயம்"—"வாழ்தலான" என்று திருத்துக *குற்றமில் சீர்கற்று வைகல் வாழ்தல்* என்கிற பாசுரமன்றோ இங்கு விஷயம்.

39. சூ. 228. அறியச் சொன்ன ஸுப்ரபாதத்தை "—'ஸுப்ரபாதத்தே' என்று திருத்துக. (அதிலேயே) "மாயையை மடிவித்து"—'மடித்து' என்று திருத்துக. (அதிலேயே) "ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்கு" — பரப்ராப்திக்கென்று திருத்துக. "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்ற உபநிஷத்துக்குச்சேர. (அதிலேயே) "கூசம் செய்யாது செய்திப்பிழை"—'செய்யாத' என்று திருத்துக.

தெலுங்கிலும் தமிழிலுமுள்ள பழைய அச்சுப் பிரதிகளை வைத்துக்கொண்டு திருத்தம் காட்டுவதானால் இன்னமும் அதிகமாகவே காட்ட நேரும். அடியேன் வெளியிட்டுள்ள பதிப்புகளில் அக்ஷரந்தோறும் உற்று நோக்கினால் அந்த அபத்த பாடங்களெல்லாம் அறும். அடியேனுக்குக் கிடைக்காத சுத்த பாடங்கள் இன்னமும் இருக்கக்கூடும். அவற்றைப் பரமக்ருபையோடு தெரிவிப்பார் திறத்தில் பெருநன்றிபாராட்டி வெளியிடுவேன். இப்போது காட்டின திருத்தங்களில் ஒன்றுகூட அடியேன் ஸ்வதந்திரமாகச் செய்ததன்று. ஏடுகளில் கண்டனவும் பெரியார்வாய்க் கேட்டனவுமாம். இந்தத் திருத்தங்கள் வேண்டாதவையென்று தோன்றிப் பழைய பதிப்புக்களிற் பாடங்களையே ஆதரிக்கவேணுமென்பார்க்கு அடியேன் மறுமாற்றமொன்று முரைக்ககில்லேன். "எங்ஙனே சொல்லினு மின்பம் பயக்குமே" என்ற ரீதியில் இந்த திவ்யக்ரந்தத்தை எவ்வண்ணமாகப் பாடங்கொண்டு அநுஸந்தித்தாலும் பரமபோக்யமே யாகும். ... ... *

வைப்பில் பாட ஆராய்ச்சி.

கீழேகாட்டிய திருத்தங்களில் (24) *மண்ணோர் விண்ணோர் வெற்பில்* என்பது தவறானபாடமென்றும் (வெற்பில்) என்பதை நீக்கி வைப்பில் என்றே ஓதவேணுமென்றும் காட்டப்பட்டிருக்கின்ற திருத்தத்தில் சிலர் த்ருப்தி பெறாமலிருந்ததனால் விவேகிகள் பரம திருப்தியடையும்படி இங்கு அவ்விஷயத்தை மிகவும் விசதமாக விவரிக்கின்றேன். அங்கு (வெற்பில்) என்றிருந்தால் அது சிறிதும் பொருந்தாது; ஆசிரியரின் திருவுள்ளத்திற்கு அடியோடு இசையாதது; மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸரணிக்கும் சிறிதும் ஏலாதது என்பதை நிரூபிக்கின்றேன். திருவாய்மொழியில் *தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே* என்று பாசுரமிருப்பதால் அதற்குச் சேர இங்கு (வெற்பில்) என்றுதானே யிருக்கவேணுமென்று சிலர் நினைப்பர். இந்த சூர்ணையானது திருவேங்கட வெற்பைப்பற்றியே அவதரித்

துள்ளதனால் (வெற்பில்) என்றல்லது வேறுவிதமாக இருக்கவேதகாதென்றும் சிலர் நினைப்பர். இந்நினைவெல்லாம் மிகத்தவறான நினைவு என்பதை உபபாதிக்கின்றோம்.

இத்திவ்யக்ரந்தமானது அருளிச்செயற் பாசுரமயமானதென்றும், ஒரு வார்த்தையில் பலமேற்கோள்களைத் தொடுப்பது இவ்வாசிரியருடைய அஸாதாரணமான நடையென்றும் கீழே பரக்க நிரூபித்திருக்கின்றோம். **"மண்ணோர் விண்ணோர் வைப்பில்"**என்றவிதில் இரண்டுபாசுரங்கள் தொடையுண்டன;*கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு* என்கிற நம்மாழ்வார் பாசுரத்தையும் * தண்ணருவி வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு * என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தையும் மணவாள மாமுனிகள் தமது வியாக்கியானத்தில் உதாஹரித்தருளியுள்ளார். மூலத்தில் (வெற்பில்) என்று பாடமிருந்திருக்குமானால் * வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு * என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தை மாமுனிகள் உதாஹரித்தருள ப்ரஸக்தியே யில்லை.

இதற்குமேல் ஒன்று சொல்லக்கூடும்; மூலத்தில் 'மண்ணோர் விண்ணோர்' என்றிருப்பதனால் அந்த வாக்யம்*கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு என்கிற திருவாய்மொழிப் பாசுரத்திலிருப்பதுபோல *வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு* என்கிற மழிசையர்கோன் பாசுரத்திலுமொருவாறு இருப்பதால் இதைக் காட்டுவதற்கே மாமுனிகள் இந்தப் பாசுரத்தையும் உதாஹரித்தருளினர்; **வைப்பு** என்பதைக் கடாக்ஷித்து உதாஹரித்ததல்ல—என்று.

இது ஒவ்வாது; மாமுனிகள் இந்தப்பாசுரத்தை உதாஹரித்தவளவோடு நிற்கவில்லை; 'உபய விபூதிக்கும் **நிதியான** திருமலையிலே' என்று மூலத்தின்மீது அர்த்தமும் விளங்க அருளிச்செய்துள்ளார். (வெற்பில்) என்கிற பாடமிருந்ததாகில் அதற்குரிய சந்தையை மாமுனிகள் காட்டியிருக்கவேண்டுமே. அதைத் தொடவேயில்லையன்றோ. *தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே* என்ற சந்தையை எடுத்துக்காட்டியிருந்தாலன்றோ (வெற்பில்) என்கிற பாடம் புகுவதற்கு இடமுண்டாம். மாமுனிகள் அந்தச் சந்தையைச் சிந்தையிலுங்கொள்ளவில்லையே. மூலத்தில் எந்தச்சொல் உளதோ அந்தச் சொல்லைக் கொண்ட பாசுரத்தை மாமுனிகள் இங்குக் காட்டாதிருக்க ஔசித்யம் கிடையாது. இங்கு *கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு' என்று மாமுனிகள் உதாஹரித்திருப்பதானது மூலத்திலுள்ள*மண்ணோர்விண்ணோர்* என்கிற வளவுக்கேயாகும். (வெற்பில்) என்று மூலத்தில் பாடமிருந்து அதை நோக்கியிருந்தாராகில் *வேங்கட விண்ணோர் வெற்பனே* என்னுமளவும் உதாஹரித்தேயிருப்பர். அஃதில்லாமையால் இங்கு **வெற்பில்** பாடம் அஸம்பாவிதமென்று நிச்சயிகத்தக்கது.

இதற்குமேல் ஒன்று சொல்லலாம்; (வெற்பில்) என்பது இங்கு அந்வயிக்க மாட்டாததன்றே; பாசுரத்திலுமுள்ள சொல்தானே அது. திருமலைக்கும் வாசக

மான சொல்தானே. இது இருந்தால் என்ன ஹாநி? இதைத்தள்ளி (வைப்பில்) என்கிற பாடத்தை ஸ்தாபிப்பதில் என்ன சுவை? என்று. இதுயுக்தமான கேள்வியே; இங்கு (வைப்பில்) என்பது இருந்தே தீரவேண்டுமென்பதை மாமுனிகள் தாமே இன்சுவைமிக நிரூபித்தருளியிருப்பதால் அதை யெடுத்து விளக்குவதே நமக்குற்ற பணியாகும். கேண்மின் ;

இந்த சூர்ணையில் (வைப்பு) என்பதே உயிரான வாசகம். இதை ஊன்றி நெஞ்சிற் பதியவைத்துக் கொள்வதே இங்கு முக்கியமானது. திருவாய் மொழி யாயிரத்தில் ஆழ்வார் மங்களாசாஸனஞ் செய்தருளின திருப்பதிகள் இருபத்தெட்டு; அவற்றில் விளங்கும் திருக்குணங்களைத் தனித்தனியே இருபத்தெட்டு சூர்ணைகளில் அருளிச் செய்கிறார் மூலகாரர். முதல்நான்கு திருப்பதிகளில் பர வ்யூஹ விபவ அந்தர்யாமி குணங்கள் விளங்குவதாகவும் மூலகாரர் திருவுள்ளம் பற்றினதாக மாமுனிகள் விவரித்தருளியுள்ளார். அந்த நான்கு திருப்பதிகளாவன—

(1) கோயில். 2. திருமலை. 3. திருக்குருகூர். 4. திருக்குறுங்குடி.

(1) கோயிலில் வ்யூஹகுணம். (2) திருமலையில் அந்தர்யாமிகுணம். (3) திருக்குருகூரில் பரவாஸுதேவகுணம். (4) திருக்குறுங்குடியில் விபவகுணம் இந்த முறையில் திருக்குணங்கள் விளங்குவதாக வகுத்துள்ளார். இது மூலத்திலேயே ஸ்பஷ்டமாகவுள்ளது. இந்த நான்கு சூர்ணைகளிலும் திருப்பதியைக் குறிப்பிடும்போதே "இது வ்யூஹஸ்தாநீயம், இது அந்தர்யாமிஸ்தாநீயம், இது பரவாஸுதேவஸ்தாநீயம், இது விபவஸ்தாநீயம்" என்பது மிகநன்றாக விளங்கும்படி சொல்தொடை அமைந்துளது.

(1) கோயில் வ்யூஹஸ்தாநீயமாகக் கொள்ளப்பட்டது. வ்யூஹம் பள்ளி கொண்ட விடமாதலால் * வன்பெருவானக மித்யாதி [ஸ்ரீரங்கபரமான] சூர்ணையில் "இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி" என்றே வாசகமிடப் பட்டது. இதில் "திருக்கண்கள் வளர்கின்ற" என்பது உயிரான சொல்; இத் தலத்தில் [கோயிலில்] வ்யூஹ குணமான ஸௌஹார்தம் முக்கியமாக விளங்கு மென்றார். (2) இரண்டாவது—திருமலை; இது நிற்க; இதில்தானே இப்போது விஸம்வாதம். இதைப்பற்றிப் பிறகு எடுத்துக் கொள்வோம். (3) திருக்குருகூர். இது பரத்வஸ்தாநீயமாகக் கொள்ளப்பட்டது. பரமபதமானது *ஆதிப்பிரானவன் மேவியுறை கோயிலாதலால் அச்சொல்தொடையாலேயே இத்தலத்தைக் குறிப் பிட்டு இங்கே பரத்வகுணமான பூரசத்வம் பொலியுமென்றார். (4) திருக்குறுங் குடி. இத்தலம் விபவஸ்தாநீயமாகக்கொள்ளப்பட்டது. அது விளங்கும்படியாகவே "வைஷ்ணவ வாமநத்தில்" என்று இச்சொல்லையிட்டே தலத்தைக் குறிப்பிட்டார். [வாமனன் விபவாவதாரமன்றோ.] இத்தலத்தில் விபவகுணமான லாவண்யம் பூர்ணமென்றார்.

இனி ப்ராக்ருதவிஷயம். (2) திருமலை. இத்தலம் அந்தர்யாமிஸ்தாநீயமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. கண்ணுக்குப் புலப்படாதபடி மறைந்திருப்பது அந்தர்யாமித்வம். இதை நிதி யென்கிற சொல்லாலே முன்னோர்கள் வழங்கியுள்ளார்கள். கண்ணுக்குத் தோன்றாது மறைந்து கிடந்து ஸமயத்தில் உதவுகிற வைத்தமாநிதி போன்றவன் அந்தர்யாமி. *அந்தர்ஹிதோ நிதிரஸித்வம் அசேஷபும்ஸாம்* என்றார் ஆழ்வானும் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில். *வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு* என்று இத்திருவேங்கடம் நிதியாகக் கூறப்பட்ட படியால் இத்தலத்தை அந்தர்யாமிஸ்தாநீயமாகக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமுளதென்று திருவுள்ளம்பற்றினர் ஆசிரியர். இத்தலத்தைக் குறிப்பிடவேண்டும்போது "மண்ணோர் விண்ணோர் **வைப்பில்**" என்றே குறிப்பிடவேண்டிய அவசியம் இப்போது நன்கு புலப்பட்டதாகும். தோஷபூயிஷ்டமான இடங்களிலெங்கும் உள்ளுறைந்து கிடப்பதானது தோஷபோக்யத்வ கார்யமாதலால் இத்தலத்தில் *நிகரில் புகழாகிய வாத்ஸல்யம் ஜ்வலிக்குமென்றார். வாத்ஸல்யம் ஜ்வலிக்குமிடம் அந்தர்யாமித்வமாகவே யிருக்க வேண்டுமாதலால் இதை நன்கு தெரிவிக்குமதான **வைப்பு** என்கிறசொல் இங்கு இருந்து தீரவேண்டியதாயிற்று. இவ்விஷயங்களெல்லாம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தைச் சிறிது ஊன்றி நோக்கினாலே நன்கு புலப்படும்.

இதற்குமேல் ஒருவர் சொன்னார்; நம்மாழ்வாருடைய திவ்யதேசாநுபவ ப்ரகாரங்களைச் சொல்லவந்த இவ்விடத்தில் வேறொரு ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியையும் கூட்டிக்கொண்டு மூலமியற்றுவது யுக்தமன்றே. **வெற்பில்** என்று பாடங் கொண்டால் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியொன்றே கொள்ளப்பட்டதாகிறது; **வைப்பில்** என்று பாடங் கொண்டால் திருமழிசையாழ்வாருடைய ஸ்ரீஸூக்தியும் கூட்டிக் கொள்ளப்பட்டதாகிறது. இது அநாவச்யகந்தானே—என்று. இந்தவாதம் இந்த திவ்யக்ரந்தத்தில் வாஸநை பண்ணியறியாதார் செய்யுமதுவேயாகும். முதன் முதலாகத் திருவரங்கம் பெரிய கோயிலைக் குறிக்குமிடத்து "**வன்பெருவானக முய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி**" என்றார்; இந்த வாக்யம் பெரியாழ்வார் குலசேகராழ்வார் ஆகிய இவ்விருவருடைய சந்தைகளையே யிட்டுத் தொடுக்கப்பட்டிராநின்றதே யன்றி இதில் நம்மாழ்வாருடைய பாசுரம் ஒரு துணுக்கைகூட சேரவில்லை. *வான்திகழுஞ்சோலை மதிளரங்கர்வண் புகழ்மேலான்ற தமிழ் மறைகளாயிரமும்* என்னப்பட்ட ஆயிரத்தில் கோயில் விஷயமான சந்தை இல்லையா? எதுக்குத் திருவாய்மொழியை அடியோடு விட்டிட்டு வேறு சில ஆழ்வார்களின் பாசுரங்களையிட்டு அருளிச்செய்யவேணும்? என்று விமர்சிக்கவேணும்.

உண்மையில் இந்த நம்மாழ்வார் பாசுரத்தை ஏன் கொள்ளவில்லை யென்னில்; கேண்மின். தென்திருவரங்கத்தைப் பற்றி நம்மாழ்வார் திருவாக்கில் அவதரித்த பாசுரங்களில் *பொருநீர்த்திருவரங்கா* செங்கயல் பாய் நீர்த்திருவரங்கத்தாய் * எதிநீர்த்திருவரங்கத்தாய்* *திட்கொடிமதிள் சூழ் திருவரங்கத்தாய் * செழுநீர்த் திருவரங்கத்தாய் * * திருவரங்கததுள்ளாய் * தண்புனல் சூழ் திருவரங்கத்தாய் *செழுந்தடம்புனல் சூழ்திருவரங்கத்தாய் * தென் திருவரங்கம் கோயில் கொண்டானே * என்றிப்படிப்பட்ட உக்திகளேயுள்ளன. திருவரங்கத்தில் திருக்கண்வளர்பவனென்கிற சொல்லமைப்பு ஒரு பாசுரத்தில்கூட இல்லை. [திருவரங்கம் வ்யூஹ ஸௌஹார்தப்ரதாநம்] என்று கொண்ட ஆசிரியர்க்கு வ்யூஹம்போலே கோயிலைப் பள்ளிகொண்ட விடமாகவே குறிப்பிட வேண்டியது அவசியமாயிற்று. அதற்கிணங்கின சொல் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளிலின்றிக்கே வேறு ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளிலிருந்தபடியால் அவற்றைக் கொண்டருளினர்—என்பதே வஸ்து ஸ்திதி. இது போலவே திருமலையை நிதியாகக் குறிப்பிடவேண்டிய அவசியம் இருந்ததனால் அப்படி நிதியாகக்கூறின திருமழிசையாழ்வாருடைய சந்தை கொள்ளப்பட்டது என்றுணர்க.

நம்மாழ்வாருடைய பாசுரங்களில் திருவரங்கத்தை சயனஸ்தலமாகக் கூறினவிடம் கிடையாதென்று சொல்லலாமோ? கங்குலும் பகலுமென்ற பதிகத்தில் பைகொள் பாம்பணையாய்! என்கிற விளி இல்லையோ? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மின்; *மையல் செய்தென்னை மனங்கவர்ந்தானே யென்னும் * என்கிற அப்பாசுரத்தில் இரண்டாமடியில் * தண்புனல் சூழ் திருவரங்கத்துள்ளாய் * என்கிற விளி ஸ்ரீரங்கநாதனைப் பற்றி அஸாதாரணமாகவுள்ளது; இனி அதிலேயே ஈற்றடியில் *பைகொள்பாம்பணையாய் * என்றுமிருப்பதானது அந்யதாஸித்தமாகவுங் கூடுமாதலால் ஸ்ரீரங்கநாதனுக்கே அஸாதாரணமான விளி யென்று அதனைக் கொள்வதற்கில்லை, ஆனது பற்றியே ஆசிரியர் அந்தச் சந்தையைக் கொள்ளாமல் ஸுஸ்பஷ்டமான சந்தைகளை வேறு ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளிலிருந்து கொண்டருளினர்.

ஆய்ச்சேரி விஷயம்.

மலைநாட்டிலுள்ள திருவண்பரிசாரத்தில் விளங்கும் திருக்குணத்தை விவரிக்குஞ்சூர்ணையில் "ஸௌகுமார்யப்ரகாசம் ஆய்ச்சேரியிலே" என்றிருந்தபாடம் அச்சேரியிலேயென்று பிறழ்ந்துவிட்டதென்று கீழே திருததம் காட்டினோம். இதிலும் சிலர்க்கு ஆக்ஷேபமாம். அச்சேரியிலே என்றபாடம் தவறானது; அர்த்தமற்றதானபாடம். மாமுனிகளின் வியாக்கியானத்தில் "ஆழ்வாருடைய திருத்தாயாரான உடையநங்கையார்க்குப் பிறந்தகமாகையாலே ஆய்ச்சேரியான திருவண்பரிசாரத்திலே" என்றுள்ளது. மூலத்திற்போலவே வ்யாக்கியானத்திலும் அச்சேரியான என்று அச்சுப்பிழையுள்ளது. இது எப்படி அந்வயிக்குமென்று புத்திமான்கள் விமர்சிக்கவேண்டுமே. தொலைவில்லிமங்கல மென்கிற திருப்பதியில் விளங்குங்குணத்தை யருளிச் செய்யும் சூர்ணையில் [*கடிதகடகவிகடனேத்யாதியில்] "அவ்வூரிலே த்விகுணம்" என்கிறார். இது அழகியதே. தொலைவில்லிமங்கலப் பாசுரத்தில் * அவ்வூர்த் திருநாமங்கேட்பது சிந்தையே* என்றிருப்பதால் அந்தரஸத்தைக் காட்டியருள

அவ்வூரிலே என்றது மிகவழகியது. அப்படி அச்சேரியிலே யென்பதற்கு ஒரு பொருத்தமுமில்லை யென்பது ஆராய்ச்சி வல்லுநர்க்கே அறிய வெளிது. திருவாய்மொழியில் * வாயுந்திரையுகளும் * என்கிற பாட்டின் இரண்டாமடியிலே "ஆயும் அமருலகும்" என்றிருக்கின்றதன்றோ; அங்கு "ஆய்" என்பதற்குத் தாய் என்று பொருள்; அந்தச் சொல்லே இங்குக் கொள்ளப்பட்டது. * உண்ணுஞ்சோறு பருகுநீர் * என்கிற பதிகத்திலே * அயற்சேரியுள்ளாரு மெல்லே * என்று தாய்ப்பேச்சாக வெளிவந்திருக்கின்றது. அதைக் கடாக்ஷித்தே ஆசிரியர் அதற்குப் பிரதி கோடியாக ஆய்ச்சேரி யென்று அருளிச் செய்தார் என்பது நுட்பமான ஆராய்ச்சியினால் அறியத்தக்கது. ... ...

இனி வியாக்கியானத்திலிறங்குவோம்.

இத்திவ்விய க்ரந்தத்திற்கு மணவாள மாமுனிகள் இட்டருளின வியாக்கியானம் அமுதினுமாற்ற வினிது. அதனுடைய பரம போக்யதையை ஸர்வஜ்ஞர்களன்றோ கொண்டாடவேண்டும். உலகில் வியாக்கியானங்களருளிச் செய்த ஆசிரியர்கள் பலருளரெனினும் அவர்களுடைய வியாக்கியானங்களிலே பலவகையான க்லேசங்களை யநுபவியா நின்றோம். பல குறைகளையுங் காணாநின்றோம். அப்படி ஒருவிதமான குறையும் கூறுதற்கிடமின்றியே ஒருவகையான க்லேசத்தையுங் கொடாதே ஸ்வச்ச கங்காப்ரவாஹமென்ன வமைந்த வியாக்கியானம் மணவாள மாமுனிகளுடையதேயாம். ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் மிகத் தெளிவாகத் திருவுள்ளத்திலடக்கிக் கொண்டிருந்து, தேனும் பாலுங் கன்னலுமமுதுமான ஸ்ரீஸூக்திகளைத் தொடுக்குந்திறன் மாமுனிகளொருவர்க்கே அஸாதாரணமாகும்.

ஸம்ஸ்க்ருதத்தில் வியாக்கியான நூல்களெழுதினவர்களுக்குள் மல்லிநாதர்க்கு மிக ப்ரஸித்தி; தமிழில் உரை நூல்களெழுதினவர்களுக்குள் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய சிலர்க்கு மிக்க பெரும்புகழ். ஆக இந்த வ்யாக்யாதாக்களெல்லாரும் மணவாள மாமுனிகள் பக்கலிலே நெடுநாள் குருகுலவாஸம் செய்ய வேணுமென்றால் இது ஈஷத்தும் அதிவாதமாகாது. வேண்டாதவற்றை அறவே விட்டும், வேண்டியவற்றைச் சிறிதும் விடாமலும், அவசியமற்ற அதிகப்படி விஷயங்களை இழுத்துப் புகவிட்டுக் கொள்ளாமலும், சொற்களிலும் பொருள்களிலும் மாதுர்யத்திற்கு ஓரிடத்திலும் குறைபாடின்றியும், பூருவர்களின் ஸரணியில் ரேகாமாத்ரமும் வழுவுதலின்றியும், அபூர்வமான ஆராய்ச்சி வல்லமை பொலியவும் வியாக்கியானமருளிச் செய்ய வல்லவர் கடல் சூழ்ந்த மண்ணுலகில் மணவாள மாமுனிகளொருவரே. ஒருவரே !! ஒருவரே !! இவருடைய மதுர கம்பீர திவ்ய ஸூக்திகளின் சுவைகளைப் பருக பாக்ய மற்றவர்கள் "மணவாள மாமுனிக்கு என்ன தெரியும்? ஏதோ தமிழ் தெரியும் போலிருக்கிறது" என்று அவஹேளையாகச் சொல்லியும் க்ஷேபித்தும் நசித்துப் போவாருமுளர். அப்படிப்பட்ட கருவிலே திருவிலாதாரை எண்ணாத போதெல்லாமினியவாறே. ஸகல சாஸ்த்ரஸாகர பாரங்கதர் ஸ்வாமியொருவரே யென்று குன்றிலிட்ட விளக்காகக் காட்டும்படியன்றோ ஸ்வாமியின் வியாக்கியான திவ்ய ஸூக்திகள் அவதரித்திருக்கின்றன. மற்ற ஆசாரியர்களை பஹுஜ்ஞர்களென்ன வேணும். ஸ்வாமியை ஸர்வஜ்ஞரென்ன வேணும். ... ...*

ப்ராஸங்கிகமான வொரு பெரிய விஷயம்.

இரண்டாவது ப்ரகரணத்தில் "அழுந்தொழும் ஸ்நேஹபாஷ்பாஞ்ஜலி யோடே" இத்யாதி சூர்ணையில் நம்மாழ்வார்க்கு, இளையபெருமாள் பரதாழ்வான் சத்ருக்நாழ்வான் ப்ரஹ்லாதாழ்வான் முதலான பல புராண புருஷர்களோடு ஸாம்யம் சொல்லுகையில் சத்ருக்நாழ்வானோடு ஸாப்யம் நிர்வஹிக்கிற விடத்தில் (மூலத்தில்) "புலன்கொள் நித்யசத்ருவிசிந்தநம்" என்கிற ஸ்ரீ ஸூக்தியுள்ளது. பாகவத சேஷத்வமே பரமபுருஷார்த்த மென்று அறுதியிட்ட சத்ருக்நாழ்வான் பெருமாளுடைய வடிவழகில் ஈடுபடாதே பரமபாகவதோத்தமனான பரதாழ்வானுடைய அநுவ்ருத்தியிலேயே ஊன்றியிருக்கச் செய்தேயும், அந்த பரதாழ்வானுடைய உகப்புக்காகப் பெருமாளுடைய வடிவிலேயும் நெஞ்சு சென்று பெருமாளையே சிந்தனை செய்து கொண்டிருந்ததுபோல நம்மாழ்வாரும் இங்ஙனே யிருந்தாரென்று நிரூபணம் செய்கிறது இங்கு. சத்ருக்நாழ்வான் படியை ஸ்ரீ ராமாயண ச்லோகங்கள் கொண்டும், ஆழ்வார் படியைத் திருவாய்மொழிப் பாசுரங்கள் கொண்டும் நிரூபித்தருளுகிறார். சத்ருக்நாழ்வான் பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று அதனையே நெஞ்சில் சிந்தனை செய்து கொண்டிருந்தானென்பதற்கு ஸ்ரீ ராமாயணத்திலிருந்து ப்ரமாணம் காட்டியாகவேண்டும். மூலத்தில் ஸ்ரீ ராமாயண ப்ரமாண மொன்று காட்டப்பட்டிருக்கிறது. ஆசார்ய ஹ்ருதய க்ரந்தமானது தமிழ்ப் பிரமாணங்களையோ, ஸம்ஸ்க்ருதப் பிரமாணங்களையோ எவ்விதமாகக் காட்டுகிற வழக்கமோ அவ்விதமாகவே இங்கும் காட்டியிருக்கிறது. அதாவது 'நித்யசத்ரு விசிந்தநம்' என்று மூலமுள்ளது. அயோத்யாகாண்டத்தில் எண்பத்தொன்பதாவது ஸர்க்கத்தில் (3) "ஜாகர்மி நாஹம் ஸ்வபிமி தமேவார்யம் விசிந்தயந்" என்கிற ச்லோகம் சத்ருக்நாழ்வானுடைய வார்த்தையாக ஸ்பஷ்டமாய்க் காணப்பட்டுவருகிறது. இந்த ச்லோகமேதான் ப்ரக்ருத ஸ்தலத்திற்கு மூலகாரரால் மூலமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. (விசிந்தயந்) என்பதை (விசிந்தநம்) என்று மாற்றி ஸாதித்திருப்பதானது வாக்யாந்வயத்திற்காக. இந்த க்ரந்தத்தின் சைலியே இப்படிப்பட்டதாகையால் இதில் விவாதம் வேண்டா. ஏவஞ்ச "தமேவார்யம் விசிந்தயந்" என்கிற சத்ருக்நவசநத்தையே கொண்டு மூலம் அமைக்கப்பட்ட தென்பது நிர்விவாதம். இவ்விடத்தில் மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் இருக்கும் படியை இனி விமர்சிப்போம்.

"சத்ருக்நாழ்வான்........பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று *விசிந்தயந்* என்கிறபடியே எப்போதும் அத்தை மநஸ்ஸிலே கொண்டிருக்குமா போலே" என்று அருளிச் செய்து விட்டு,

“விசிந்தந மென்கிறவிதுக்கு இப்படி வ்யாக்யானம் பண்ணிற்று இதின் பட்டோலை யானதிலே உறுமோவென்று நித்யசத்ருவை வென்று புலன் கொள் வடிவை விசிந்தய நாயிருக்கும் என்று விசிந்தயந் என்று ஒரு வசன முண்டாகவு மெடுத்து இப்படி இவர்தாமே அருளிச்செய்து வைக் கையாலே. இவ்விடத்திலும் சிந்தநமென்னுமல் விசிந்தநமென்றது அவ் வசந ஸூசகமாகவிறே. ‘விசிந்தயந்’ என்கிற வசநம் இன்ன விடத் திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை; வந்தவிடத்திலே கண்டு கொள்வது”

என்றருளிச்செய்து தலைக்கட்டியிருக்கிறார். இத்தால் ‘விசிந்தயந்’ என்கிற வசன மிருக்குமிடம் மாமுனிகளுக்குத் தெரியவில்லை யென்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப் பட்டதாகிறது. அயோத்யாகாண்டத்தில் (89—3) * தமேவார்யம்’ விசித்தயந் * என்றிருப்பது அல்பஜ்ஞர்களான அஸ்மதாதிகளுக்கும் நன்றாகத் தெரிந்திருக்க இது ஸர்வஜ்ஞரான மாமுனிகளுக்குத் தெரியவில்லை யென்றால் இதனில் மிக்க வியப் புண்டோ? இங்கே தத்துவமென்ன என்று விவேகிகள் யாவரும் விமர்சிக்க ப்ராப்தம். ஆங்காங்கு காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமிகளிலே சிலர் இங்கே சொல்லுவதென்ன வென்றால்; மணவாளமாமுனிகள் ஸர்வஜ்ஞராயிருக்கச் செய்தேயும், ராமக்ருஷ்ணாதி கள் அஜ்ஞத்வ அசக்தத்வங்களை பாவித்ததுபோலத் தாமும் பாவிக்கவேண்டி, தமக்குத் தெரியாத விஷயங்களும் உண்டென்று காட்டவேண்டி இங்ஙனே அருளிச் செய்து வைத்தார் என்கிறார்கள். வேறுசிலர் சொல்லுவதாவது—“இன்னவிடத் திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை” இத்யாதி பங்க்திகள் மாமுனிகள் அருளிச் செய்தவையாக இருக்கமாட்டா; பிற்காலத்தில் ப்ரக்ஷிப்தங்களாக இருக்கும்—என் பது. இப்படிப்பட்ட ஸமாதானங்கள் அத்யந்தம் அஸமஞ்ஜஸங்கள். முந்தின ஸமாதானத்தில், விசிந்தயந் என்கிற ப்ரமாண மிருக்குமிடம் மாமுனிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் வேணுமென்றே தெரிந்ததில்லை யென்று எழுதினா ரென்பது மாமுனிகளை விப்ரலம்பக கோடியிலே யாக்குவதாகும். இது ஸ்வாமியின் இயல்புக்குச் சிறிதும் சேர்ந்ததன்று. பிந்தின ஸமாதானம் (ஸ்ரீ ஸூக்திகள் ப்ரக்ஷிப் தம் என்பது) ஸுதராம் அநுபபந்நம். ஏனென்னில், உண்மையில் ப்ரமாண வசனத்தைப் பூர்த்தியாக எடுத்துக்காட்ட வேண்டியிருந்தும் காட்டியருளவில்லை; பட்டோலையிலிருந்து ஸ்ரீஸூக்தியை யுதாஹரித்திருப்பது பிறர்க்கு ஸாத்யமான காரிய மன்று. ஆகவே ப்ரக்ஷேபவாதமும் சிறிதும் அங்கீகரிக்கத் தக்கதன்று.

பின்னை இங்கு உண்மை யென்னவெனில்; ஊக்கத்தோடு கேண்மின். ஸ்ரீ ராமாயணாதி இதிஹாஸ புராண ச்லோகங்களில் பலவகையான பாட பேதங்கள் பூர்வாசார்யர்களின் காலத்திலேயே நேர்ந்திருக்கின்றன. இதற்குப் பல நிதர்சநங் கள் காட்டவேண்டியதுண்டு; அது மற்றொருகாலாகும். இவ்விடத்தில் “ தமே

வார்யம் விசிந்தயந்" என்று பாடமிருப்பது போலவே "ராமமேவாநுசிந்தயந்" என்கிற பாடமும் முன்னோர்களின் காலத்திலேயே யிருந்திருக்கிறது. கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியான அவதாரிகையின் அரும்பதவுரையிலே "ராமமேவாநு சிந்தயந்" என்கிற பாடமே யிருப்பதை எல்லாப் பதிப்புகளிலும் காண்கிறோம். ஸ்ரீராமாயண ஸ்ரீகோசங்களிலும் சிலவற்றில் இங்ஙனே பாடம் காண்கிறோம். ஆசார்ய ஹ்ருதயகாரருக்கு "தமேவார்யம் விசிந்தயந்" என்கிற பாடமே கிடைத்திருக்கிறது. மணவாளமாமுனிகளுக்கு "ராமமேவாநு சிந்தயந்" என்கிற பாடமே கிடைத்திருக்கிறது. மூலத்தில் விசிந்தநம் என்றும், பட்டோலையிலும் 'விசிந்தயந்' என்றும் ஸுஸ்பஷ்டமாக இருக்கையாலே இவ்விடத்திற்கு (அநுசிந்தயந்) என்றுள்ள வசனத்தை யெடுத்துக்காட்ட ஔசித்யமில்லையாயிற்று. அந்த வசனம் இங்கு ஸ்புரிப்பதற்கே இடமில்லாமல் போயிற்று. ஆசார்ய ஹ்ருதய க்ரந்தம் அப்போது ப்ரவசந பரம்பரையிலும் விசேஷமாக வந்திருக்கவில்லை போலும். ஆக, 'ராமமேவாநு சிந்தயந்" என்கிற பாடமே கொண்டிருந்தவர் மாமுனிகள்; "தமேவார்யம் விசிந்தயந்" என்கிற பாடமே கொண்டிருந்தவர் ஆசார்ய ஹ்ருதயகாரர். இதனால் இவ்விடத்தில் இப்படிப்பட்ட க்லேசமுண்டாயிற்றென்று உண்மையுணர்ந்த பெரியார்கள் உபபாதிக்கிறார்கள்.

இந்த ஆசார்ய ஹ்ருதய மஹாக்ரந்தம் முதன்முதலாகத் தெலுங்கு லிபியில் 1876-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது. [இற்றைக்கு எண்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டதென்கை.] அந்தப்பதிப்பில் மூலத்திலும் வியாக்கியானத்திலும் காணப்படுகிற பிழைகள் அபரிமிதம். அக்ஷரங்கள் மாறுடினவை பதங்கள் மாறுடினவை வாக்யங்கள் விட்டுப்போனவை........... இப்படிப்பட்ட அவத்யங்கள் அனேகம் புகுந்தன. ஸ்தாலீபுலாக ந்யாயேந ஸ்வல்பம் காட்டுவோம்; பதினோராவது சூர்ணையின் வியாககியானத்தில் "ஒண்பொருள் பொருளல்லாதவை யென்னுதே" என்கிற மூலத்திற்குச் சேர "ஆத்மாவின் சீர்மை பாராதே" என்றும் "அசித்தின் சிறுமை பாராதே" என்றும் மணவாளமாமுனிகள் ஸாதித்திருக்க, இரண்டிடத்திலும் (சீர்மை பாராதே என்கிற பதிப்புள்ளது. ஆத்மாவுக்குச் சீர்மையுண்டு; அசித்துக்குச் சிறுமையொழிய சீர்மை கிடையாது. இது தவறே.

மூன்றும் ப்ரகரணத்தில் நாரை கொக்கு குருகுகளுக்கு ஸ்வாபதேச மருளிச்செய்கிற "ஆசறுதூவி யென்னும்" என்கிற சூர்ணையின் வியாக்யானத்தில் "தாய் வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரை தேடி" என்கிற மூல ஸூக்திக்குப் பொருள் விவரிக்குமிடத்தில் "தங்கள் வாக்கால் உபகரிக்கும் பகவத்விஷயத்தை உபஜீவித்திருக்கும் குழைச்சரக்கான சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக ஸாத்யமான பகவத் விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரித்து" என்று அச்சிட்டிருக்கி

றார்கள். இதில் ''சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக'' என்கிற பங்க்திக்கு என்ன பொருளென்று விமர்சிக்கவேணும். 'உபாயாநுகுணமாக' என்றது இவ்விடத்திற்கு ஒருவிதத்திலும் சேராது. சிலர் ''வயோநுகுணமாக'' என்றிருக்குமென்று ஊஹிக்கிறார்கள். நம்முடைய புத்தியைக்கொண்டு நாம் ஸ்வதந்திரமாகத் திருத்துவதிற் காட்டிலும் ஓலை ஸ்ரீ கோசத்தைக்கொண்டு திருத்தலாமென்று பார்த்தபோது ஸுப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஓலை ஸ்ரீகோசத்தில் தாம் ஸேவித்த பாடத்தைப் பரமக்ருபையுடன் அநுக்ரஹிக்க ப்ராப்தமாயிற்று. ''யகாரஸ்தாநே ககார: பாட்ய:'' என்று அந்த ஸ்வாமி ஸாதித்தருளினபடி. அதாவது. ''சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக'' என்பதல்ல; ''சிஷ்யர்களுக்கு பாகாநுகுணமாக'' (பாகாநுகுண) என்பது திருத்தமான பாடமென்கை. இப்போது எவ்வளவு அழகாக அர்த்தமாகிறதென்று பார்க்க. சிஷ்யர்களின் ஜ்ஞான பாகத்திற்குத் தகுந்தபடி ஆசார்யர்கள் ஆராய்ந்து உபதேசிப்பர்களென்று சொல்வது மிகவும் பொருத்தமானதன்றோ. ககாரத்தை யகாரமாக மாற்றிவிட்டதனாலுண்டான க்லேசம் எவ்வளவென்று பார்க்க.

மூன்றாம் ப்ரகரணத்திலேயே ''தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னோர் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்'' என்ற விடத்து வியாக்கியானத்தில் ''அவதாரங்களுக்குப் பிற்பாடரானவர்களுக்கு அநுபாவ்யமான அர்ச்சாவதாரத்திலே 'ஸர்வம் ஸஹே' என்கையாலே பரத்வாதிகளில் அநுபாவ்யமான குணங்களெல்லாம் பூர்ணமென்கை'' என்கிற பங்க்திகள் தெலுங்கு பதிப்பிலும் தமிழ்ப் பதிப்பிலும் ஏகரீதியாக அச்சிடப்பெற்றுள்ளன. இங்குக் காட்டிய 'ஸர்வம் ஸஹே' என்கிற ப்ரமாணம் எந்த அம்சத்திற்கு ஸம்வாதமாக அருளிச்செய்ததென்று விமர்சிக்கவேணும். ''அர்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணு:'' இத்யாதிகளிற் சொல்லப்பட்ட (அர்ச்சாவதார அஸாதாரணமான) ஸர்வஸஹிஷ்ணுத்வத்தை குணபூர்த்திக்கு நிபந்தநமாகக் காட்டுவதற்கு 'ஸர்வம் ஸஹே' என்கிற ப்ரமாணம் மேற்கோளாக இங்குக் காட்டப்பட்டதென்று சிறிதும் கூசாமலே சில காலக்ஷேப ஸ்வாமிகள் ஸாதித்து வருகிறார்கள். ''அபூத பூர்வம் மம பாவி கிம் வா ஸர்வம் ஸஹே மே'' என்கிற ஸ்தோத்ர ரத்ந ஸ்ரீஸூக்தியிலுள்ளதான (ஸர்வம் ஸஹே) என்கிற விது ப்ரக்ருத ஸ்தலத்திற்கு அணுமாத்ரமாவது பொருந்துமாவென்று வினவினால் பொருந்தமாட்டாததை மணவாளமாமுனிகள் அருளிச்செய்வரோ? அவரருளிச்செய்திருக்கும்போது, பொருந்துமாவென்கிற விசாரம் செய்ய நாமார்? என்றுசீறுகிறார்கள். அஸ்மதீய ஸம்ப்ரதாயக்ரந்த தூஷணகதீக்ஷிதர்களாகவுள்ள பிறர்களோ வென்னில் உண்மையுணராது தூஷிக்கத் தலைப்படுகிறார்கள். இங்கு உண்மையான பாடம் என்னவென்றால், ஸ்ரீவசனபூஷண வ்யாக்க்யாநாதிகளிலும் உதாஹ்ருதமான ''ஸர்வம் ஸஹே

ஸர்வம் பூர்ணம் ஸஹோம்'' என்கிற உபநிஷத் வாக்யமே இங்கு (ஸர்வம்ஸஹோ) என்று விகாரமடைந்திட்டது. இவ்விகாரம் அச்சுப்பிரதிகளில் மாத்திரமன்று; நாலைந்து ஏட்டுப்பிரதிகளிலும் நமக்குப் புலப்பட்டது.

இந்த ஆசார்யஹ்ருதயவியாக்கியானத்தைத் தமிழ்லிபியில் 1806-ம் வருஷத்தில் ஸ்ரீமான் உ. வே. திருநீர்மலைமாடபூஷி ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமியென்பவர் வெளியிட்டார். அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. அழகியமணவாள ராமாநுஜஜீயர்ஸ்வாமி 1905ம் வருஷத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி யுத்ஸவம் ஸேவிக்கத் திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிருந்தபோது மேலேசொன்ன திருநீர்மலை ஸ்வாமியானவர் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியிடம் வந்து, தாம் ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தைத் தமிழ் லிபியில் அச்சிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்து அந்த ஸமயத்தில் அச்சாகியிருந்த சில பாரங்களைக் காண்பித்தாராம். ஜீயர்ஸ்வாமி அவற்றைக் கடாக்ஷித்தருளி 'தேவரீர் லோகோபகார புத்தியினால் அபரிமிதமான பொருளைச் செலவுசெய்து நடத்துகிற இந்தப் பதிப்பில் பலவிதமான பிழைகள் காண்கிறதே; ஸம்பிரதாயத்திலும் தமிழிலக்கண நூல்களிலும் பரிசயமுள்ள மஹான்களைத் துணைகொண்டு இது செய்தால் நன்றாயிருக்கும்; (இவைத்துக்கு. அவைத்துக்கு) என்று இப்படியெல்லாம் அஸம்பத்தமாக அச்சிட்டிருக்கிறீரே; தமிழில் (இவைத்துக்கு, அவைத்துக்கு) என்கிற சொற்கள் கிடையாதே.'' என்று சில விஷயங்கள் ஹிதமாக ஸாதித்தாராம். அது கேட்ட அந்த திருநீர்மலை ஸ்வாமிக்கு அபரிமிதமான சீற்றம உண்டாயிற்றாம்; எனக்கு ஸம்ப்ரதாயம் தெரியாதென்றும் தமிழ் தெரியாதென்றும் இந்த ஜீயர் ப்ரசாரம் செய்யப்பார்க்கிறார் என்று கடுஞ்சொற்களைப் பொழிந்துகொண்டே எழுந்து சென்றாராம். பிழைகளை ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டினாலுங்கூட இங்ஙனே சீறிச்சிவந்து நிந்திப்பவர்களே உலகில் மலிந்திருக்கிறார்கள்.

அந்த ஸமயத்தில் அந்த திருநீர்மலை ஸ்வாமி தாம் பதிப்பித்துக்கொண்டிருந்த ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தில் இரண்டாம் ப்ரகரணம் முடிவுபாகம் நடந்து கொண்டிருந்ததாம். * பந்து கழல் பாவை * இத்யாதியான கடைசி சூர்ணையின் வியாக்கியானம் முடியுமிடத்தில் ''தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே'' என்கிற ஸ்ரீஸூக்திக்குமேல் (முந்தின தெலுங்கு பதிப்பில்) ஐந்தாறு பங்க்திகள் அடியோடு விட்டுப்போயின. திருநீர்மலைஸ்வாமியின் தமிழ்ப் பதிப்பிலும் அப்படியே விட்டிருந்தனவாம். அவற்றை ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி எழுதிக்கொடுத்தருளி ''இந்த பங்க்திகள் அவச்யம் இருக்கவேண்டியவை; இதையாவது சேர்த்தால் நன்றாயிருக்கும்'' என்று சொல்லியனுப்ப, ''நான் வைத்துக்கொண்டிருக்கிற ஓலை ஏட்டிலும் இந்த பங்க்திகள் இல்லை; எந்த ஆதாரத்தைக்கொண்டு இதை நான் சேர்ப்பது?'' என்று ப்ரபலமாக ஆக்ஷேபிக்க, பிறகு மஹத ப்ரயாஸேந சேர்க்கும்படி

செய்தருளினதாக ஜீயர்ஸ்வாமி ஸாதிக்கக் கேட்டிருக்கை. இங்கே, முந்தின தெலுங்குபதிப்பில் விட்டுப்போய் பிந்தின தமிழ்ப்பதிப்பில் சேர்க்கப்பட்ட பங்க்திகளாவன;—(தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே) என்பதற்கு மேல்—

"இந்த்ரிய வ்யதிரிக்தங்களான போகோபகரணங்களுக்கு உபலக்ஷணம்; போகஸ்தானமான தேஹத்தையும் போகோபகரணமான இந்த்ரியங்களையும் பந்துகழலித்யாதியாலே லீலோபகரணமாகச் சொல்லுகிறது. லீலையாவது தாதாத்விகரஸமான வ்யாபாரமாகையாலே"

என்றிவ்வளவுபங்க்திகள். இந்த பங்க்திகள் இல்லாவிட்டால் அவ்விடத்து ஸங்கதியை நிர்வஹிக்கவேமுடியாதென்பது ப்ராஜ்ஞர்களுக்குத் தெரியும். பழைய தெலுங்கு பதிப்பை வைத்துக்கொண்டு ப்ரவசனம் செய்தருளும் மஹான்கள் இங்கு விட்டுப்போனபங்க்திகளால் ஒருகுறையையுமுணராமல், அந்வயிக்கவில்லையேயென்ற க்லேசமும் படாமல் அநாயாஸமாகக் காலக்ஷேபம் நிர்வஹித்து வருகிறார்கள். ஹயக்ரீவஸ்ரீயம் பஞ்சலக்ஷணீ, சதுர்தசலக்ஷணீ முதலான க்ரந்தங்களின் அச்சுப் பதிப்புகளில் பல விபர்யாஸங்களுண்டு; க்ரந்த மியற்றினவர் (........அவச்சிந்ந) என்று சில விடங்களிலும் (.......அநவச்சிந்ந) என்று சிலவிடங்களிலும் எழுதியிருப்பதுண்டு. அச்சில் அவை மாறிவிழுந்திருக்குமிடங்கள் சிலவுண்டு. (அவச்சிந்ந) என்றிருக்க வேண்டு மிடத்தில் (அநவச்சிந்ந) என்றும், (அநவச்சிந்ந) என்றிருக்கவேண்டுமிடத்தில் (அவச்சிந்ந) என்றும் விழுந்திருக்கிறது. சாஸ்திரவ்யுத்பத்தியும் ஆழ்ந்த அறிவும் பெற்று ப்ரவசனம் செய்பவர்கள் ருஜுவாக அந்வயிக்கவில்லையே யென்று க்லேசப்பட்டு, ஆலோசித்து, இங்கு அச்சுப்பிழையுள்ளதென்று தெளிந்து திருத்தி ப்ரவசனம் செய்து போருவர்கள். "சதுச்சாஸ்த்ரங்களில் எந்த க்ரந்தத்தையும் நாம் அவலீலையாக ப்ரவசநம் செய்யவல்லோம்" என்றிருக்கும் சில மஹாமதிகள் மேலே காட்டின அவச்சிந்ந—அநவச்சிந்ந—விபர்யாஸங்களில் சிறிதும் கிலேசப்படாமலும் மயங்காமலும் அங்குலீந்ருத்தஸாரர்களாய் வெகு அட்டஹாஸத்தோடும் ப்ரவசனம் செய்தே போவர்கள்; இங்குப் பிழையுள்ளதென்று கண்டறியவேமாட்டார்கள். ப்ராஜ்ஞர்கள் எடுத்துரைத்தாலும் இது விச்வாமித்ரஸ்ருஷ்டியென்று ஏசி நிற்பர்கள். இவ்விதமாகவே ஸம்ப்ரதாயக்ரந்தங்களிலும் நேர்ந்திருக்கிற விபர்யாஸங்களை ப்ராமாணிகர்கள் எடுத்துக்காட்டினால் சில அதிகாரிகள் வீணான ஆக்ஷேபங்களைச்செய்து போதுபோக்குவது தவிர, சுவைகண்டு மகிழ பாக்யமற்றவர்களாகிறார்கள்.

இந்த மஹாக்ரந்தத்தில் நான்காம் ப்ரகரணத்தில் "மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய்" என்றவிடத்து வியாக்கியானத்தில் பழைய தெலுங்கு தமிழ்ப்பதிப்புகளிரண்டிலும் விட்டுப்போன பங்க்திகள் ஏட்டுப்பிரதிகளிலிருந்து

எம்மால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அந்த பங்க்திகள் மிகவும் அவசியமானவை. அவை ப்ரகாசிதமா யிருப்பதற்கு க்ருதஜ்ஞதாநுஸந்தானம் பண்ண ப்ராப்தமாயிருக்க, அது செய்யாததோடு ஆக்ஷேபிக்கவும் முன்வந்திருக்கும் மஹாநுபாவர்கள் "நசேத நிராகரணீயா: கவிதா பொராஅநீயா:" என்று ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் பட்டர் அருளிச்செய்த கணக்கிலே சோசநீயர்களத்தனை.

ஆழ்வார் திகைப்பு.

ப்ரக்ருத விஷயமாக நாம் ஸ்ரீராமாநுஜன் 105ல் மூன்றுதத்தின் மூலஸ்தான மென்றும், அம்ருதலஹரி 167-ல் நைச்சியாநு ஸந்தானமென்றும் இரண்டு விபுல வியாஸங்களை வெளியிட்டிருந்தோம் இவற்றிலுள்ள விஷயங்களுக்குப் பெரும்பாலு முகந்து சில விஷயங்களில்மட்டும் ப்ரத்யவஸ்தாநம் பண்ணத் தோன்றி ஸந்தேஹங்கள் கேட்கும் முறையிலே ஏழெட்டு விஷயங்களை ஒரு ஆப்தர் தெரிவித்துள்ளார்; அவற்றையும் அவற்றிற்கான ஸமாதானங்களையும் விவேகிகள் தெரிந்து கொள்ளவேண்டுவது ஆவச்யகமாகையாலே இங்குத் தெரிவிக்கிறோம்.

1 பிள்ளைலோகாசாரியரும் அவரது திருத்தம்பியாரும் தம் திருத்தகப்பனார் நம்பிள்ளை திருவடிகளில் பகலெல்லாம்கேட்ட அர்த்த விசேஷங்களை இரவிலே [ஈடுமுப்பத்தாறுயிரப்படியாக] ஏடுபடுத்தி வைக்க, அதிலுள்ள அர்த்த விசேஷங்களை யாராய்ந்து கொண்டு அவற்றைப் பெய்து தாங்கள் ரஹஸ்ய க்ரந்தங்களெழுதினார்களாம்—என்று நாமெழுதி யிருந்தோம். அந்த காலத்தில் நாம் இருந்ததுமில்லை கண்டதுமில்லை. மஹான்கள் பணிக்கக் கேட்டதிது என்னுமிடம் விளங்கவே பங்க்தி விந்யாஸம் பண்ணி யிருக்கிறோம். தவிர நம்முடைய ஆராய்ச்சியிலும் ஈட்டில் ஆங்காங்குச் சிதறியுள்ள அர்த்தவிசேஷங்கள் ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீவசநபூஷணங்களில் சேரத்திரட்டப் பட்டிருப்பதாகத்தேறியது. இவை விரிவாக மூதலிக்கவும் பெறும். நிற்க. இதில் ப்ரத்யவஸ்தாந மென்னவென்றால், மணவாளமாமுனிகள் ரஹஸ்யாவதாரிகைகளில் "ஆசார்ய பரம்பராப்ராப்தமான அர்த்தங்களிவை" என்றும் "அவர்கள் தாங்கள் கௌரவாதி சயத்தாலே ரஹஸ்யமாக உபதேசித்துப் போந்தவை" என்று மருளிச் செய்திருப்பதற்கு இது விருத்தம் என்று. ஸமாதாநம். இவற்றுக்குப் பரஸ்பரவிரோதம் சிறிதுமில்லை. ஈட்டில் கண்ட அர்த்தங்கள் ஸ்வகபோல கல்பிதங்களல்லவே; ஸ்தாசார்ய ஸதுபதேச பரம்பராப்ராப்தங்களே யல்லவோ? திருக்குமாரர்கள் உபதேசம் கேளாமல் ஏட்டையே பார்த்து எழுதி வைத்தார்களென்று சொல்லுவாரில்லையே. மணவாளமாமுனிகள்தாமும்

"ரத்நப்ரசுரமான பூஷணத்துக்கு ரத்நபூஷண மென்று பேராமாபோலே பூர்வாசார்யர்களுடைய வசநப்ரசுரமாய்..........இருக்கையாலே இதுக்கு வசநபூஷணமென்று திருநாமமாயிற்று" என்றருளிச் செய்துள்ளார். இவ்விஷ

யத்தை உபதேசரத்தினமாலையிலும் "முன்னங் குரவோர் மொழிந்த வசனங்கள் தன்னை மிகக் கொண்டு" என்று பாசுரமாக்கியருளினர். "முன்னங்குரவோர் மொழிந்த பொருள்களை மிகக் கொண்டு'என்னுமல் "வசனங்கள் தன்னை மிகக் கொண்டு—சேரச்சமைத்து" என்கையாலே பூர்வ ஸ்ரீஸூக்திகளையே கொண்டாரென்பது நன்கு காட்டப்பட்டது. இதையே நாமெழுதி யிருந்தோமாகையாலே நிரவத்யம்.

2 ஆசார்ய ஹ்ருதயகாரருடைய அஸாதாரணமான ஸரணியொன்றை "ச்ரமணீவிதுரரிஷிபத்னிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு" இத்யாதி ஸ்ரீஸூக்தியைக் கொண்டு விவரித்துக் காட்டி, இவ்வண்ணமாகவே "மூன்று தத்தின் மூலஸ்தானத்தை மூலகாரரே தெரிவித்தருளினரென்று நாம் பரக்க உபபாதித் திருந்தோம். இதில் ப்ரத்யவஸ்தாந மென்னவென்றால், *வளவேழுலகிலுள்ள அருவினையேன் என்கிற சந்தையைக் கொண்டே இங்கு அருவினை என்கிற ஸ்ரீஸூக்தி பணிக்கப்பட்டதென்றும், *பொருமாநீள்படையிலுள்ள *மேல்மற்றோர் நோயும் சார்கொடான்* என்கிற சந்தையையும், *வைகுந்தாமணிவண்ணனிலுள்ள *உள்ள நோய்களெல்லாந் துறந்து* என்கிற சந்தையையுங் கொண்டு (ஆசார்ய ஹ்ருதய ப்ரக்ருத ஸ்தலத்தில்) நோய் என்கிற ஸ்ரீஸூக்தி பணிக்கப்பட்டதென்றும் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தில் ஸாதிக்கப்பட்டிராமையாலே மேலே காட்டின அருளிச்செயல் சந்தைகளை மூலகாரர் விவக்ஷித்தவரல்லர்—என்பது. ஸமா அஜெ. மணவாள மாமுனிகள் தமது வியாக்கியானத்தில் மூலத்திற்குச் சார்பான அருளிச்செயல் சந்தைகளெல்லாவற்றையும் ஒன்று விடாமல் எடுத்துக் காட்டுவதென்கிற நிர்ப்பந்தத்தை வைத்துக் கொள்ளவில்லை. இது தானும் ஸஹேதுகமே யொழிய நிர்ஹேதுகமன்று. "இவை கிட்டமும் வேட்டுவாளானும் போலே" என்கிற (11) சூர்ணையில் "அந்தமும் வாழ்வுமாகிற" என்ற விடத்தில் *பல்லுயிர்க் கெல்லாம் அந்தமும் வாழ்வுமாய வெம்பெருமான்* என்கிற பெரிய திருமொழிப் பாசுரத்தை எடுத்துக்காட்ட வேண்டி யிருந்தும் காட்டியருளவில்லை. அவ்விடத்து வியாக்கியானத்தில் "அந்தமும் வாழ்வுமென்கிறவற்றில்" என்றிருக்கிறதே; அது பாசுரத்தைக் காட்டினதன்றோ? என்னில்; அவ்விடத்து மூலத்தில் (அந்தமும் வாழ்வுமாகிற) என்கிற ஸ்ரீஸூக்தி யிருக்கிறதே, அதைக்கொண்டு (அந்தமும் வாழ்வுமென்கிறவற்றில்) என்றருளிச் செய்ததத்தனை. என்றே பெரியார் பணிக்கின்றார்கள். அப்படியன்றிக்கே இது பெரிய திருமொழிப் பாசுரத்தைக் காட்டினபடிதானென்றே வைத்துக் கொள்வோம்; மேலே *வத்ஸலையான மாதா* இத்யாதி (14) சூர்ணையில் "பந்தமும் பந்தமறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே" என்ற விடத்தில் பந்தமுமித்யாதியான மூலத்திற்கு மூலமான பெரிய திருமொழிப்பாசுரம் காட்டப்படவில்லை யென்பது நிர்விவாதம்.

(கீழை மேலை வடக்கிலவை புறம்பாக) என்ற 141 சூர்ணையில், கீழை என்பதற்கு *தானுமோர் கன்னியும் கீழையகத்துத் தயிர் கடைகின்றான்போலும்* என்கிற சந்தையையும், மேலையென்பதற்கு *மேலையகத்தே நெருப்புவேண்டிச் சென்று* என்கிற சந்தையையும் சேர்த்துக் காட்டியிருக்கவேண்டும். மூலகாரர்க்குக் கீழையகமென்று கர்மயோகம் விவக்ஷிதம். தயிர் கடைதல் சொல்லுதலால் கர்மயோகம் தெரிவிக்கப்படுகிறதென்பதும் விவக்ஷிதம். தயிர் கடைகை கீழையகத்தில்தான் நடைபெறுகின்றதென்பதை * கீழையகத்துத் தயிர் கடைய * என்று குலசேகராழ்வார் மட்டும் காட்டினால்லர்; * கீழையகத்துத் தயிர் கடைகின்றான் * என்று திருமங்கையாழ்வாரும் காட்டினராதலால் இரண்டு ப்ரமாணங்களும் மூலகாரர்க்கு விவக்ஷிதமே. இனி, மேலையகமென்று ஜ்ஞாநயோகம் விவக்ஷிதம். காண்கை சொல்லுதலாலும், நெருப்பைச் சொல்லுதலாலும் ஜ்ஞாநயோகம் தெரிவிக்கப்படுகிறதென்பதும் விவக்ஷிதம். கீதையில் நான்காமத்யாயத்தில் ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம் என்றும் ஜ்ஞாநாக்நிஸ் ஸர்வகர்மாணி என்றும் கூறியுள்ளபடி ஞானம் நெருப்பாதலால் * மேலையகத்தே நெருப்புவேண்டி * என்ற சந்தையானது *மேலையகத்து நங்காய்வந்து காண்மின்கள் * என்கிற சந்தைபோலவே உத்தேச்யந்தான். ஆயினும் மணவாளமாமுனிகள் அடியேனுக்குக் காட்டிக்கொடுத்தவர் வியாக்கியானத்தில் காட்டியருளாதது ஸங்க்ரஹருசியினாலத்தனை. பலப்ரமாணங்கள் காட்டக்கூடிய ஸ்தலங்களில் பெரும்பாலும் ஒரு ப்ரமாணமே காட்டி நிற்பது மணவாளமாமுனிகளின் இயல்பு.

* அழுந்தொழு மித்யாதி (127) சூர்ணையில் * விரைந்து வருமளவும் * என்றவிடத்தில் "இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்கிற திருவாய்மொழிச் சந்தையை ப்ரமாணமாகவெடுத்துக் காட்டவேண்டியிருந்தும் காட்டியருளவில்லை. "வீடு திருத்தப்போனவன் விண்ணுலகந்தர விரைந்து வருமளவும்" என்கிற ஸ்ரீஸூக்தியை யருளிச்செய்துள்ள மாமுனிகள் அந்த ப்ரமாணத்தைக் காட்டினவரேயாவர் என்று சிலர் சொல்லக்கூடும். அந்தப்ரமாணம் மாமுனிகள் திருவுள்ளமறிந்ததேயென்று இதுகொண்டு சொல்லலாமத்தனையொழிய, ப்ரமாணங்களை அவர் தனிப்படவெடுத்துக் காட்டிவருமடைவிலே காட்டியருளவில்லை யென்பது ஊர்ஜிதமே.

இங்ஙனே எத்தனையிடங்களில் ப்ரமாணோபாதாநம் செய்தருளப்படாமலிருக்கிறதென்பதைத் தனி நூலிலே விவரித்திருக்கிறேனடியேன். இங்ஙனம் காட்டியாகவேண்டிய ப்ரமாணங்களை யெடுத்துக்காட்டாதொழிந்தது வியாக்கியானத்திற்குக் குறையன்றோவென்று சங்கிக்கவேண்டா. குறையன்று குறையன்று. "விவேகபலம் வீடுபற்று" என்கிற இரண்டாம் சூர்ணையை வியாக்கியானித்தருளுமிடத்து — "அவ்விவேகத்துக்குப் பலம் ஏதென்னச் சொல்லுகிறது (விவேகேத்யாதி.) அதாவது, இப்படி அவன் கொடுத்த சாஸ்த்ர ஜந்யஜ்ஞாநத்தாலே நல்லதும் தீயதும் விவேகிக்

கைக்குப் பலம்—த்யாஜ்யத்தை விடுகையும் உபாதேயத்தைப் பற்றுகையுமென்கை.'' என்று சூர்ணிகையின் வியாக்கியானத்தை முடித்திட்டு, பிறகு துண்டாக "த்யாக ஸ்வீகாரமென்றதே * விடுபற்று * என்கையாலே, *வீடுமின் முற்றவும் *அற்றிறை பற்று* என்ற ஆழ்வார் பாசுரத்தையுட்கொண்டு அருளிச்செய்தமை தோன்றுகிறது'' என்றருளிச்செய்துள்ளார். கீழும் மேலும் வியாக்கியானக்ரமம் இங்ஙனேயாயுள்ளது? இல்லை; காட்டவேண்டிய ப்ரமாணங்களை அடைவே காட்டியே வியாக்கியானம் செய்து போருகிறார். இங்குமட்டும் அந்த க்ரமம் மாறுவானேன்? என்னில்; இது வியாக்கியானத்திற்குப் புறம்புபட்ட விஷயமென்றும், டிப்பணியில் காட்டப்பட வேண்டிய விஷயமென்றும் காட்டுதற்கேயாம். இப்படி ஓரிடத்தில் காட்டிவிட்டு மற்றும் இங்ஙனேயான பலவிடங்களை யுபேக்ஷித்தருளினர் என்பது தத்துவம். இதே ரீதியிற்சேர்ந்ததுதான் (அருவினை நோய்) என்ற ப்ரக்ருதஸ்தலமும்.

•

மூலகாரர் அருவினை நோய் என்று ப்ரயோகித்தருளினது நாம் விவரித்த சந்தைகளைக்கொண்டு அன்றாகில் அந்தச்சொல்தொடர் எங்கிருந்து கொள்ளப்பட்டதென்று கேட்கவே நேரும். தாமே தொடுத்தாரென்னில் ப்ராமாணிகர்கள் இசையார்கள். இச்சொல்லுக்கு இப்பொருள் எந்த நிகண்டிலுள்ளது? *வளவேழுலகு பாசுரத்தில் அருவினையேன் என்கிற ஒருசொல் இல்லையாகி அந்தஸ்தானத்தில் (அடியேன்) என்றிருந்துவிட்டதானால் ஒரு ஆபத்துமில்லையே. அருவினையேனென்பதை விட்டுப் பாட்டைச் சொல்லிப்பார்க்கலாமே. பார்த்தால் இது வொருவகையான தோத்திரம் என்றல்லது வேறொன்றும் நெஞ்சிற்படாது. ஆழ்வார் அகலநினைக்கிறாரென்று எம் பெருமான் அதிசங்கிக்க அவகாசலேசமுமிராது. ஆசாரியர்கள் அப்படி அர்த்தம் செய்தருளவும் ப்ரஸக்தியிராது. ஆகவே இப்பாட்டில் அருவினையேன் என்பதுதான் உயிரானது இதிலிருந்தே அருவினையென்று கொண்டார் ஆசார்ய ஹ்ருதயகாரர்—என்பது கல்வெட்டு. இனி நோய் என்கிற சொல்லுக்கு வருவோம். * நீயும் நானுமிந்நேர் நிற்கில், மேல்மற்றோர் நோயும் சார்கொடான் * என்ற *பொருமா நீள் படைப்பாசுரத்தில் நோய் என்பதற்கு ஈட்டில் ஐந்து பொருள்கள் பணிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், அயோக்யதாநுஸந்தானம்பண்ணி அகலவிடுதல் என்பது மூன்றாவது. இதைக்கொண்டருளினர் ஆசார்யஹ்ருதயகாரர். இனி, வைகுந்தாமணிவண்ணனில் *உள்ளநோய்களெல்லாம் துறந்து* என்றும் *செடியார் நோய்களெல்லாம் துறந்து* என்றும் (நோய்ச்சொல்) இருவிசை வந்துள்ளது. முதலிடத்தில், "அயோக்யன் என்று அகன்று வருமவை'' என்றும், இரண்டாமிடத்தில் "அயோக்யதாநுஸந்தானத்தாலே வந்த நோய்'' என்றும் ஈட்டிலுள்ளது. ஆக இவ்வளவுங்கொண்டு (அருவினை நோய்) என்றசொல்தொடரை மூலகாரர் அமைத்துக்கொண்டாரென்பதை, இத்தகைய விமர்சத்திற்கென்றே இட்டுப்பிறந்த நாம் விவரியாநிற்க, இதை ஆமோதிக்கவோ ஆக்ஷேபிக்கவோ இவர்களார்கொல்!

3. மூன்றாவது தத்து * அந்தாமத்தன்பில்தானென்றும், அது எம்பெருமான் தன்னாலே தன்னுடைய அழுகையைக்காட்டிப் பரிஹ்ருதமாயிற்றென்றும் எழுதியிருந்தோம். இங்கு ப்ரத்யவஸ்தாநமென்னவென்றால், ஆழ்வாருடைய அகலுதலை அதிசங்கித்த எம்பெருமான் அழுதானென்பதற்கு ப்ரமாணமில்லையென்றும், திருவாய்மொழி நூற்றந்தாதியில் 'நைகின்றதன்மைதனை' என்பதற்கு அழுததன்மையென்று பொருள்கொண்டது மஹத்தான ப்ரமமென்றும் ப்ரத்யவஸ்தானமுள்ளது. சுவெத்ரா அநுதெ. * வளவேழுலகில் எம்பெருமான் உலகளந்த வ்ருத்தாந்தத்தையும் வெண்ணெய் வ்ருத்தாந்தத்தையும் ஆழ்வார்க்குக் காட்டியருளவில்லையென்று வைத்துக்கொண்டு பார்ப்போம். அப்போது ஆழ்வார் நிலைமை என்னாகும்? என்று ஒருவர் கேட்டால் என்னபதில் சொல்லலாகும்? ஆழ்வாரை இழந்தேபோக நேர்ந்திருக்கும் என்று சொல்லியாகவேண்டும். பொருமாநீள்படையில் * செல்வ நாரணனென்ற சொல்லை எம்பெருமான் ஆழ்வார் திருச்செவியில் படுத்தாதிருந்தானாகில் ஆழ்வார் நிலைமை என்னாகும்? என்று கேட்டாலும் இதற்கும் அதே பதில்தான் சொல்லியாகவேண்டும். இனி * அந்தாமத்தன்பு பதிகத்தில் ப்ராப்தமாகுங் கேள்வியைக் கேளீர்; * அல்லாவியுள் கலந்த * என் முடிவுகாணாதே * என்னும் பாசுரங்களினால் எம்பெருமானுக்கு ஆழ்வாருடைய அகலுகையைப் பற்றின விசாரம் உண்டாயிற்றென்பது மறுக்க முடியாமலும் மறைக்க முடியாமலும் ஸகல வியாக்கியானங்களினாலும் ஸித்தித்திருக்கின்றது. *வளவேழுலகிலும் *பொருமாநீள் படையிலும் ஆழ்வாருடைய பேச்சிலிருந்து எம்பெருமானுக்குத்தானே விசாரமுண்டாயிற்று; அந்த விசாரத்தினால் தானே பரிஹாரவழிகளைத் தான் ஆலோசித்துச் செய்தான். இப்போதும் விசாரமுற்றவன் எம்பெருமான்; இவனே பரிஹாரம் செய்யக் கடமைப்பட்டவனுமாயினன். அந்தக் கடமையினால் என்ன பரிஹாரம் செய்தானென்று கேட்கலாகிறது. ஒரு பரிஹாரமும் செய்திலன், வெறுமனேதானிருந்தானென்று சொல்லிவிடுவர்கள். இப்படிச் சொல்லுவது ரஸிகர் சொல்லாகாது என்று திருவுள்ளம் பற்றிய மணவாளமாமுனிகள் ஈட்டுக்காரரான நம்பிள்ளையின் கருத்தை விவரிப்பவராய் * செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து நைகின்றதன்மைதனை * என்றருளிச் செய்தார். நைகின்ற தன்மையாவது என்ன? என்று விசாரிப்போம். சிதிலமாவதென்று பலரும் வியாக்கியானிக்கிறார்கள். சிதிலமாகையாவதென்ன? என்று கேட்டால் விவரித்தாகவேண்டும். திவ்யப்ரபந்தங்களில் நைதல் என்பது பல நூறிடங்களில் வருகிறது. ஏதேனுமோரிடத்து வியாக்கியானத்தையெடுத்துப் பார்க்கலாம். [நையுங் கண்ணீர் மல்க நின்று] என்றவிடம் பார்ப்போம். "[நையும்] மாதாபிதாக்கள் சேரவிருக்க அவர்கள் ஸந்நிதியிலே பசித்த ப்ரஜைகளைப் போலே சிதிலையாகாநின்றாள்" என்பது ஈடு. பசித்த ப்ரஜை என்ன செய்யுமென்பதை அவரவர்கள் ஸ்வக்ருஹத்திலேயே பார்க்கப் பெறலாம். மற்றோரிடமும் பார்ப்போம். "[உம்மைக் காணுமாசையுள்நைகின்றாள்] ....வாடுகைதான்

தேட்டமாம்படியாயிற்று." என்பது ஈடு. வேறோரிடமும் பார்ப்போம். "[நின்று நின்று நையும் நெடுங்கண்கள் பனிமல்கவே.] கிண்ணகத்திலிளகின கரைபோலே உடை குலைப்படுகிறபடி." என்பது ஈடு. இவற்றால் என்ன தேறிற்று? அழுவதற்கும் மேற்பட்ட — மிக மிக மேற்பட்ட ஒரு நீநதசையே நைதலாகு மென்று தேறிற்று இந்தத்தன்மையை எம்பெருமான் தானடைந்து காட்டினான் ஆழ்வார்க்கு— என்கிறார் மணவாளமாமுனிகள். ப்ரக்ருத விசாரமெல்லாம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்திலே யாகையாலே மணவாளமாமுனிகளின் திருவாக்குத்தான் இதில் மிகச்சிறந்த கைவிளக்காகும். இப்படிப்பட்ட நீநதசையை எம்பெருமான் எதனால் காட்டினான்? மாறன் செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து=ஐயோ, ஆழ்வாரை இழந்துவிட நேர்ந்துவிட்டதே! என்கிற க்லேசாதிசயத்தாலே எம்பெருமான் இந்த நீநதசையைக் காட்டாதிருந்தனனாகில் ஆழ்வார் நிலைமை என்னாகும்? என்று இப்போது கேட்கிறோம். •* வைகுந்தாமணிவண்ணனே யென்கிறபதிகம் அவதரித்திரா தென்றும், இங்ஙனே அவதரித்திராதென்றும் சொல்லித் தீரவேண்டும். எல்லார்க்கும் அபயப்ரதானம் பண்ணுகிற எம்பெருமான்தனக்கும் ஆழ்வார்தாம் அபயமளிக்க வல்லராம்படி செய்து கொண்டானப் பெருமான். எதனாலே? — நைகின்ற தன்மைதனைக் காட்டியதனாலே. இஷ்டஸித்தி பெறுவதற்குப் பலவுபாயங்களுண்டு; அழுது ஜயித்தல், தொழுது ஜயித்தல் என்பர்கள். * தொழுகையுமிவை கண்டவசோதை தொல்லையின்பத்திறுதிகண்டாளே * என்னும்படி எம்பெருமான் யசோதை யிடத்திலே தொழுது ஜயித்தான். அங்கு அழுதலுஞ்செய்தான்; ஆனால் அது பயன்படவில்லை. ஆழ்வார் பக்கலிலேதான் அழுகை பயன் பட்டதவனுக்கு.

இதற்குமேல் ஒரு ப்ரத்யவஸ்தாநம். அதாவது, * வைகுந்தாமணிவண்ணனேட்டில் "நிர்ஹேதுகமாக உன்வடிவழகை நீ என்னை யநுபவிப்பிக்க அநுபவித்து அத்தாலே சிதிலனான நான் உன்னைவிட ஸம்பாவனையுண்டோ வென்கிறார்........... நீ பண்ணின உபகாரங்களைக் கண்டுவைத்து விட ஸம்பாவனையுண்டோ? காலத்ரயத்திலும் ஸர்வவித பந்துவுமான உன்னை விட ஸம்பாவனை யுண்டோ?" இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளிருக்கின்றன வென்றும், இவற்றால் உன்னுடைய போக்யதை வடிவழகு உபகாரகத்வம் ஸர்வவிதபந்துத்வம் முதலான கல்யாண குணங்களில் ஈடுபட்டமுந்தி அநுபவித்துக் கொண்டிருக்கிற நான் உன்னை விட ப்ரஸக்தியுண்டோ வென்று சொல்லுவதாகத் தேறுகிறதேயல்லது அவனுடைய அழுகைக்காக விடமாட்டேனென்று சொல்லுவதாகத் தேறவில்லையென்றும் ப்ரத்யவஸ்தாநம். சுலெ து அழகெ. குமாரனை விட்டிட்டுத் தாயார் ஊர்போக முயன்றவளவிலே குமாரன் அழத்தொடங்க அவ்வழுகைக்கிரங்கின தாயானவள் பயணத்தை நிறுத்திக்கொண்டு, பயலே! அழகியனாய் ஸமர்த்தனாய் விதேயனாய் என்னைச் சிந்தை கவர்ந்தவனாயிருக்கிற வுன்னை விட்டிட்டு நான் போவேனா? என்கிறாள். இது உலகில் நடைபெறுவதேயன்றி

அஸம்பாவித மன்று. இத்தால் தாயானவள் பயணத்தை நிறுத்திக் கொண்டது குமாரனது அழுகையினால் – என்கிற தத்துவத்தை இல்லை செய்ய முடியுமோ? குமாரனை நோக்கிச் சொன்ன வார்த்தைகள் அத்தோடு விருத்த மென்றாவது அந்ருத மென்றாவது நெஞ்சால்தான் நினைக்கப் போமோ? உன்னைவிட்டுப் போக மாட்டேனென்று தாய் சொன்னதற்கு உண்மையான முதல் ஹேது குமாரனுடைய அழுகைதான். பிறகு அவனுடைய குணங்களைச் சொல்லிச் சொல்லி உன்னை யெப்படி விட்டுப்போவேனென்றதற்கு ஹேது அவர்ஜநீயமான குணாநுராகம். அதுபோலவே யிங்கும் *உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கனவே* இத்யாதிகள் சொன்னதற்கு ஹேது வைகுந்தன் நைகின்றதன்மைதனைக் கண்டதுவேயாகும். பிறகு அவனது வடிவழகு முதலியவற்றைச் சொல்லி உன்னை யெங்ஙனம் விடுவேனென்றதற்கு ஹேது இயற்கையான ஈடுபாடு. ஆகவே, எடுத்துக்காட்டின ஈட்டு ஸ்ரீஸூக்திகளோடு விரோதகந்தமுமில்லை. இந்த ஆக்ஷேப மெல்லாம் மாமுனிக ளின் மீதேயேறும்.

4. *வளவேழுலகு ப்ரவேசத்தில் எம்பெருமானை விட்டகன்ற ஆழ்வார்க்கு— (உத்தர ஸ்ரீராமாயண கதையின்படி) பெருமாளுடைய ஆணைக்கு மாறாக துர்வாஸா வைப் பெருமாளருகே புகவிட்டுப் பெருமானையகன்றுபோன இளைய பெருமாளையும், இளைய பெருமாளால் காட்டில் கொண்டுவிடப்பட்டு அகன்றுபோன பிராட்டியையும் த்ருஷ்டாந்தமாகக் காட்டியிருக்கையாலும், இளைய பெருமாளுடையவும் பிராட்டியி னுடையவும் அகலுதல் ஸத்யமே யொழிய அஸத்யமன்றாகையாலும் இந்த த்ருஷ் டாந்த பலத்தாலும் ஆழ்வாருடைய அகலுதல் உண்மை யென்று ஸித்திக்கிறதென்றும்; ப்ரவேசத்தின் முடிவிலே, அகன்ற ஆழ்வாரை வருந்தி யிசைவித்துக் கொண்டதற்கு த்ருஷ்டாந்தமாக, யுத்தஞ் செய்யமாட்டே னென்று மீண்ட அர்ஜுநனை யுத்தத்திலே மூளப்பண்ணினபடியை த்ருஷ்டாந்தமாகக் காட்டி யிருக்கையாலே அதனாலும் அர்ஜுனனுடைய யுத்தாந்நிவ்ருத்தி போலே ஆழ்வாருடைய நிவ்ருத்தியும் ஸத்தியமே யென்று தேறுகின்ற தென்றும் ஒரு ப்ரத்யவஸ்தானம் தோன்றியுள்ளது. நாம் பல விடங்களில் "எம்பெருமானைவிட்டு அகலவேணு மென்று ஆழ்வார் ஒருகாலும் நினைத் தவரல்லர் நினைப்பவருமல்லர்—அகன்றாரென்பது எங்குமே வஸ்து ஸ்திதியில் கிடை யாது; ஆழ்வார் நம்மை விட்டிடுவரோ வென்று எம்பெருமான் அதிசங்கித்ததுதா னுள்ளது—*வளவேழுலகில் அகன்றாரென்றாலும் * பொருமாநீள் படையில் அகன்றா ரென்றாலும் எம்பெருமானுடைய அதிசங்காரூபமான அகல நினைத்தல் தவிர வேறு எதுவும் கிடையாது—" என்றெழுதி யிருப்பவற்றின்மேல் மேலேகாட்டின ப்ரத்யவ ஸ்தானம் தோன்றியுள்ளது.

ஸமாதாநம். இளைய பெருமாளையும் பிராட்டியையும் த்ருஷ்டாந்தமாகக் காட்டி யிருப்பது எந்த அம்சத்திற்காக என்பது நாம் விவரித்துக் காட்டவேண்டாத

படி ஈட்டிலேயே ஸ்பஷ்டமாக வுள்ளது. அவர்கள் எவ்வளவுதூரம் அகன்றார்களோ அவ்வளவுதூரம் ஆழ்வாரும் அகன்றாரென்பதற்காகவா காட்டியுள்ளது? அன்று அன்று. கேண்மின். ஆழ்வார் எம்பெருமானைவிட்டு அகல நினைத்தாரென்று நம் பிள்ளையருளிச் செய்தவுடனே 'அந்தோ! இப்படிகூட ஒரு நினைவு உண்டாகத் தகுமோ? அகலநினைப்பதோ அகல்வதோ இதெல்லாம் ஆத்மவிநாசந்தானே; இதனை ஸ்வயமேவ தேடிக்கொள்வதுமுண்டோ?' என்று சிலர் சங்கிக்க நேர்ந்தது. அதற்குப் பரிஹாரமுணர்த்துகையில், சேஷிக்கு அதிசயத்தை விளைக்கையே சேஷபூதன்பணி; அந்த அதிஶயாதானம் எந்தவிதத்திலு முண்டாகத் தக்கதே; அது ஆத்மோஜ்ஜீவனத்தினு லுண்டாகவுமாம், ஆத்மவிநாஶத்தினுலுண்டாகவுமாம்; அது விஷயமன்று; ஶேஷ்ய திஶயாதானமே முக்கியமானது. அதிலே நோக்குடையவர்கள் க்ருத்யாக்ருத்ய விவேகம் பண்ணுர்கள்—என்பதுதான் இங்கு நம்பிள்ளை யருளிச்செய்துள்ள விஷயம். ஸ்ரீவசநபூஷணத்தில் பிராட்டியினுடைய மூன்று பிரிவுகளை ப்ரஸங்கித்து அருளிச் செய்யுமிடத்தில் "நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக" என்றதை வியாக்கியானத்துடன் குருமுகமாகக் கேட்டவர்கள் கலங்கார்கள். *[illegible]* என்கிற பிராட்டியின் வசனம் இங்கு ஈட்டில் காட்டப்பட்டுள்ளது. இதை நன்றாக விவரித்தருளினவர் விசதவாக்சிகா மணிகளே. மேலே காட்டின வசனம் பிராட்டி பெருமாளைவிட்டு அகன்றதற்கு ப்ரமாணமன்று; ப்ரமாணமாவதற்கு ஔசித்யமுமில்லை. பின்னை எதற்கு ப்ரமாண மென்னில்; தனக்கு அசிந்திதமாக நேர்ந்த மஹத்தான கஷ்டத்தினுல் கங்கையில் விழுந்து உயிரைமாய்த்துக் கொண்டுஸுகிக்க வேண்டியிருந்தும் அது செய்யமாட்டா மைக் குறுப்பான பாரதந்திரியத்திற்கு ப்ரமாணம். பாரதந்த்ரிய மென்பது ஶேஷ்யதி ஶயாதானத்தின் எல்லை நிலமாகையாலே அதை இங்கெடுத்துக் காட்டினது மிகவும் உப பந்நம். இளைய பெருமாள் பெருமாளைப் பிரிந்துபோய் ஸரயுவில் ச்வாஸபந்தம்பண்ணி உயிரைவிட்டார். பிராட்டி தான் உயிரைவிட மாட்டாமை சொன்னுள். அவர் உயிரைவிட்டதும், இவள் உயிரைவிட மாட்டாமை சொன்னதும் இங்கு விஷயமன்று; இருவரும் ஸ்வலாபத்தைக் கணிசியாதே சேஷிக்கு அதிசயத்தை விளைக்கத் தேடின தொன்றுதான் விஷயம். இவற்றுல் பூதஸ்வரூபர்க்களுக்கு ஸ்வஸ்வலாபமுமில்லை. கீதாசார்யன் போர்புரியமாட்டேனென்ற அர்ஜுனனை *குரிஷ்யே வசநம் தவ* என் னப்பண்ணி இசைவித்ததை த்ருஷ்டாந்தமாகக் காட்டியருளினதும் இன்சுவை மிக்கது; அர்ஜுனன் போர்புரிய மாட்டேனென்றது *ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண!* இத் யாதி அப்ரகம்ப்யப்ரமாணஸித்தம். ஆழ்வார் அயோக்யதாநுஸந்தானம்பண்ணி அகல நினைத்ததும் அப்ரகம்ப்ய ப்ரமாணஸித்தம். அந்த ப்ரமாணமாகிறது *தளர் வுற்று நீங்கநினை மாறனை* என்கிற மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்தி. அகன்ற தன்று, அகல நினைத்தது ப்ரமாணஸித்தம். அர்ஜுனனும் ஓடவில்லை, ஆழ்வாரும் ஓடவில்லை. அர்ஜுனன் ரதோபஸ்தே உபாவிசத்; ஆழ்வார் பத்மாஸநே உபவிஷ்ட:.

அர்ஜுநனுடைய நிவ்ருத்தியோடு, ஆழ்வாருடைய நிவ்ருத்துநுவதையோடு வாசி யில்லை யென்பதையும், அதிலும் இது மிகக் கொடிதென்பதையும் நன்கு இசைவோம். அதை நிவர்த்திப்பித்தது போலே இதையும் எம்பெருமான் நிவர்த்திப்பித்தானென் பதை மறுப்பாரார்? நாமும் இதை நம்முடைய திவ்யார்த்ததீபிகை முதலான வியாக்கி யானங்களிலே போரப் பொலிய எழுதியே யிருக்கின்றோம். விஷயம் புத்தியில் ஆரோஹிப்பதற்கு ஆழ்வார் அகன்றுசென்றும் குட்டிச்சுவரிலே போய் முட்டாக் கிட்டுக்கொண்டு கிடந்தாரென்றும் சொல்லியாக வேண்டி யிருக்கிறதென்பதை நாம் க்ராஹியாமலில்லை. இதை வெகு அற்புதமாக ப்ரவசநமும் செய்து போருகின்றோம்.

ஒரு பெரிய விஷயம் காண்மின், கேண்மின். ஸ்ரீவசநபூஷணத்தில் "இதி ஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது" என்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் ஆச்சரியமான பரமார்த்தத் தைப் பூச்சொரிந்தாப்போலே சொரிந்தருளியுள்ளார். உலகில் ஸ்ரீராமாயண ப்ரவசநகர்த்தாக்கள் எத்தனைவருளரோ அத்தனைவரும் ஒன்று சேர்ந்து கனமாக ஆக்ஷேபிக்கக் கூடிய விஷயத்தை யாயிற்று மாமுனிகளருளிச் செய்திருப்பது. "பிராட்டியென்னாதே சிறையிருந்தவளென்றருளிச் செய்தது" என்று தொடங்கி ஸாதித்து வருகையில் சிறையிருப்பின் சிறப்பை உபபாதித்தருளியிருப்பது நிற்க; அதற்குமேலே "இத்தை ராவண பலாத்காரத்தாலே வந்ததாக நினைப்பார் இவள் ஶக்திவிசேஷ மறியாத க்ஷுத்ரரிறே; * சீதோ பவ * என்றவள் 'நஷ்டோ பவ' என்னமாட்டாளன்றே; ஆகையாலே இது தன்னநுக்ரஹத்தாலே பரரக்ஷணார்த்த மாகச் செய்த செயல்." என்றருளிச் செய்திருப்பது வடிக்கட்டின தத்வார்த்த மென்பது ஸாரஜ்ஞர்களின் கோஷ்டியிலே ஸம்ப்ரதிபந்நம். இதை இலேசாக இசைவார்களோ மற்றையோர். இது ராவணபலாத்காரத்தாலே வந்ததன்றிக்கே யிருந்தால் * சுரிகுழற்கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசை யரக்கன் * என்பது போன்ற பல நூறு பாசுரங்களினால் தத்வதர்சிகளான ஆழ்வார் களுங்கூட ராவணனை அளவுகடந்து நிந்தித்திருக்கிறார்களே இது எதற்காக? என்று நம்மவர்களே ஆக்ஷேபிக்கத் தலைப்படுகிறார்கள். அன்னவர்களுக்கு நாம் எவ்வளவு தத்துவமுணர்த்தினாலும் பயன்படுவதில்லை. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ — உத்தர சதகத்தில் ஸ்ரீராமாவதாரநுபவபரமான * மநுஜஸமயம் க்ருத்வா * என்னும் ச்லோகத்தில் * க்வசந விபிநே ஸா சேத் அந்தர்த்திநர்ம விநிர்மமே * என்றார். அதாவது, உலகில் சிறுவர்களும் சிறுமிகளும் கண்ணு மூச்சிவிளையாட்டென்று ஒரு விஹாரம் செய்வதுண்டு; வேணுமென்று தானே சென்று ஓரிடத்தில் மறைந்து கொள்வது இந்த விளையாட்டின் செயல்; இவ்வண்ணமாகவே பிராட்டியும் ஒரு விளையாட்டுச் செய்ததத்தனையே யென்றபடி. இதனாலும், பிராட்டி ராவண பலாத் காரத்தாலன்றிக்கே தானாகவே ராவணபவனத்திற் சென்று புகுந்துகொண்டா

ளென்பது நன்கு தேறுகின்றது. இப்படி யருளிச்செய்த பட்டர் அந்த ச்லோகத்தி லேயே உத்தரார்த்தத்தில் * கிமத ஜலதிம் பத்த்வா * என்று தொடங்கிப் பெருமாளை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார். பிரானே! பிராட்டி தானாகவே சென்று லங்கை யிலே மறைந்து கொள்ள, இதற்காகக் கடலிலே அணைகட்டுவதும், அரக்கர்தங்கள் இனம் கழு கேற்றுவிப்பது மான ஸம்ப்ரமங்களைச் செய்தருளிற்றே! இவையெல் லாம் என்திய? என்றாயிற்றுக் கேள்வி கேட்டிருப்பது. பட்டர் மாமுனிகள் போல்வார் தத்வதர்சிகளாகையாலே ஸமர்தானம் அவர்கள் திருவுள்ளமறிந்திருக் கிறது உண்மை. ராமாயணாதிகளிலுள்ள கதாசரீரமல்லது வேறொன்றறியாத நம் போல்வார்க்கு என்ன தெரிந்தது. "தாயும் தாப்பனும் சேரவிருக்கப் பொறுத பையல்" என்றிது போன்ற நூற்றுக்கணக்கான ஆசார்ய திவ்யஸூக்திகளை ஸேவிக்கிறபோதும், * பஞ்செனச் சிவக்கு மென்காற் பாவையைப் பிரித்த பாவி வஞ்சன் * (கம்பர்) என்றிது முதலான பாட்டுக்களை ப்ரவசனம் செய்கிறபோதும் முன்னே காட்டிய ஸ்ரீவசநபூஷண வியாக்கியான ஸ்ரீஸூக்தியை [அதாவது, "இத்தை ராவண பலாத்காரத்தாலே வந்ததாக நினைப்பார் க்ஷேத்ரரிறே" இத்யா தியை] மறைத்துவைக்கவும் மறந்திருக்கவுமன்றோ ப்ராப்தமாகிறது.

இவற்றுள் எது பரமார்த்தம்? எது ப்ரபலம்? என்று பார்ப்போமாயின், பிராட்டி இலங்கையிற் புக்கது ராவண பலாத்காரத்தாலன்று என்னு மர்த்தந்தான் பரமார்த்தமும் ப்ரபலமுமாகும். ஆனால் அது தத்வோத்போதக ஸமயவிசேஷத்தில் மட்டும் அநுஸந்தேயமாகுமேயொழிய ஸதா ஸர்வதா அநுஸந்தேயமாக வழியில்லை. ஸமயே ப்ராப்தே இந்த பரமார்த்தத்தை யெடுத்து வெளியிடாதிருக்கவொண்ணாது. இது போலவே ஆழ்வார் அகன்றார்; அகன்று நெடுந்தூரஞ் சென்றார்; சென்று ஒரு குட்டிச்சுவரிலே புக்கார் இத்யாதிகளையும் ஒருகால் சொல்லிக்கொண்டிருக்க வேண் டியதே; "வஸ்து ஸ்திதி அப்படியில்லை" யென்று பரமார்த்தமும் வெளியிடப்பட வேண்டியதே. * ந தே வாக் அந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி * என்று வரம் பெற்ற வால்மீகிபகவான் எழுதிவைத்ததெல்லாம் ஸத்யமாயிருக்கச் செய்தேயும் அது தன்னிலே மஹாவிவேகிகள் பரமார்த்தம் கண்டு அதை ரஹஸ்யத்திலிட்டு அநுபவிக் குமாபோலே, நம்பிள்ளை போன்ற நம் ஆசார்ய ஸார்வபௌமர்கள் அருளிச் செய் தவை யெல்லாம் ஸத்யமாயிருக்கச் செய்தேயும் அது தன்னிலே பரமார்த்தம் காண் பதும் காட்டுவதும் அவர்ஜநீயமாகு மத்தனை.

இங்ஙனே தேறும் பரமார்த்தத்தினால், — ஆழ்வார் அகலவேணு மென்கிற எண்ணத்தோடே நைச்யாநு ஸந்தானம் பண்ணினவரல்லர்; ப்ரேமாந்தனான எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் அங்ஙனே அதிசங்கை தோன்றுகிறது; அவ்வதிசங்கையினால் ஆழ்வாரை அகலவிடாதே அத்தாணிச் சேவகத்திலே யீடுபடுத்

திக்கொள்ள வழிதேடவேண்டியதாகிறது; ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொருவழி யாலே ஈடுபடுத்திக் கொள்ளும்படியான சதிரையுடையனாயிராநின்றானவன்; முதல் தத்திலே உலகளந்த அபதானமும் வெண்ணெய்க் கதையுமாகிற வழி கிடைத்தது. இரண்டாம் தத்திலே ஸ்ரீமந் நாராயணா வென்று சொல்லித் தலைச்சுமையை யிறக்க வல்லவொரு வழிப்போக்கன் தைவாதீனமாகக் கிடைத்தான். மூன்றாம் தத்திலே ஒருவழியும் கிடைக்காமற்போக "ஒருவழியாலும் பசை காணாதொழிந்தால் அப்ராப்ய மென்று கண்ணநீரோடே மீளுவது" என்று ஸ்ரீவசநபூஷணத்திலுண்மை யறிந்தருளிச் செய்த கணக்கிலே கண்ணநீரோடே மீளுவதாயிருக்கையில் அந்தக் கண்ண நீர்தானே ஒரு ஸதுபாயமாகத் தலைக்கட்டிற்று. 'பிரானே! ஏதுக்குக் கண்ண நீர் பெருக நிற்கிறாய்? நான் அகல்வேனென்றா? அந்தோ! என்கொலம் மான் திருவருள்கள்! நானோ உன்னைவிட்டு அகல்வேன்? இப்படியும் ஒரு நிர்விஷயக ப்ரம முண்டோ? என்னை இவ்வளவு அரஸிகனாக எண்ணிவிட்டாயே!' என்று இனையபலவும் சொல்லிக்கொண்டு ஆழ்வார் அணுகும்படியாக வாயிற்று.

துர்வாஸாவை உள்ளே புகவிட்ட இளைய பெருமாளையும், அவரால் திருத் தேரிலேகொண்டுவிடப்பட்ட பிராட்டியையும் வளவேழுலகு ப்ரவேசத்தில் த்ருஷ் டாந்தமாகக் காட்டினது அவர்களைப்போலே ஆழ்வாரும் அகன்றாரென்கைக்கு— என்று க்ரஹித்ததுமட்டும் அத்யந்த சோசநீயம். பெரிய திருமொழியில் கோவிந்த ஸ்வாமியென்பானொருவனுடைய கதையைச் சொல்லுகிற * மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சு மென்கிற பாட்டின் பின்னடி—

"போகம்நீயெய்திப்பின்னும் நம்மிடைக்கேபோதுவாயென்ற பொன்னருளெனக்கும் ஆகவேண்டுமென் றடியிணையடைந்தே னணிபொழில் திருவரங்கத்தம்மானே"

என்றிருப்பதைக்கண்ட சிலர் "திருமங்கையாழ்வார், தோகைமாமயிலன்னவர்சிற் றின்ப போகங்களைத் தமக்கு முன்னம் தந்து, பின்னை திருவடி சேர்த்துக்கொள்ளும் படி பிரார்த்திக்கிறார்" என்று பொருள் உபந்யஸிப்பதுண்டு. 'அவனுக்குத் தந்த பொன்னருளே எனக்கு மாகவேண்டும்' என்று பாட்டில் வ்யக்தமாக இருப்பதால் இப்படித்தானே பொருள் உபந்யஸித்தாக வேண்டும். நிற்க.

5. "எம்பெருமானுடைய கதையே நமக்கு வேண்டாமென்று வெறுத்து ஆழ்வார் விலகுவதென்பது ஒருநாளுங்கிடையாது" என்றெழுதிய நாமே, பெருமா ளீன்படைபிலுண்டான தத்தை எம்பெருமான் பரிஹரித்த விதமின்ன தென்று விவரிக்குமிடத்தில்— "இனி பகவத் விஷயகதையே நமக்கு வேண்டாமென்று உறுதி கொண்ட ஆழ்வாருடைய பரிஸரத்திலே ஒருவனைப் போகவிட்டு அவன்வாயால்

ஸ்ரீமந்நாராயணனென்று சொல்லுவித்து அம்முகத்தாலே ஆழ்வாரை அகலவிடாமல் ஈடுபடுத்திக்கொண்டது" என்றெழுதியிருக்கிறோமாம். இது பரஸ்பர விருத்தமாயிருப்பதோடு ஸ்வஸித்தாந்தந்தை நெகிழவிட்டபடியுமாகிறது — என்றொரு ப்ரத்யவஸ்தானம். இது க்ரந்தசைலியறியாமையினாலாயது. இனி பகவத்விஷய கதையே நமக்கு வேண்டாமென்று விலகி ஒரு குட்டிச்சுவரிலேபோய்ப் புக்கார் என்று நம்பிள்ளையருளிச்செய்திருப்பது கிடையாதென்றாவது, அது அஸம்பத்தமென்றாவது நாமெழுதியிருப்பதுண்டோ? அப்படி நெஞ்சிலும் நினைத்ததில்லை. அது ரஸகநமான வார்த்தையென்று கொண்டாடியே யெழுதியிருக்கின்றோம். அந்த ரஸோக்திக்கு எவ்வளவிலே தாத்பர்யமென்பதை அலசியலசி நிஷ்கர்ஷித்திருக்கிறோம். யதாச்ருதமான ஈட்டு ஸ்ரீஸூக்தியை யநுஸரித்து அதன் சாயையிலேயே நாமெழுதியிருப்பது நிஷ்கர்ஷவிருத்தமாக வழியில்லை. ப்ரபத்திஉபாயமன்றென்று பலகாலுமருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர் "ப்ரபத்த்யுபாயத்துக்கு" என்றருளிச் செய்திருப்பதைக்காட்டி 'இது ஸ்வோக்திவ்யாஹதம்' என்றெழுதியிருப்பாருமுளர், திருமந்த்ரம் ப்ரேமத்தோடே பேணியநுஸந்தித்தாலொழியக் கார்யகரமாகமாட்டாதென்று ஓரிடத்திலே பணிப்பதும், "சொல்லும் க்ரம மொழியச் சொன்னாலும் தன்ஸ்வரூபம் கெட நில்லாது" என்று மற்றோரிடத்திலே பணிப்பதுமானவிவை வ்யாஹதம் என்பாருமுளர். இங்ஙனே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளிலே பலபல வ்யாகாதங்களைக் கூறுமவர்கள் திரளிலே இவர்களும் சேர்ந்தால் வியப்பென்னோ! பிராட்டி ராவண நிர்ப்பந்தத்தாலே சிறைபுகுந்தாளல்லள் என்று தத்துவத்தை யருளிச்செய்துவைத்த மணவாளமாமுனிகள் தாமே ஸ்ரீராமாயணார்த்த ப்ரவசநகாலங்களிலே ராவணனுடைய நிர்ப்பந்தங்களையும் அவற்றைப் பொறுக்ககில்லாத பிராட்டியின் பிரபலமான ஆக்ரந்தன ஆக்ரோசங்களையும் பரக்க வுபந்யஸித்தருளாநின்றால் "ஆக்ரந்தனமெதற்காக? தானே ஆசைப்பட்டன்றோ சிறைபுக்காள்; அப்படிப்பட்டவள் பழம்நழுவிப் பாலில்விழுந்ததே! என்று உகந்திருக்கவேண்டியது ப்ராப்தமாக * மாயும்வகை விஷசஸ்த்ரங்கள்தேடி, ஹா ராம ஹா லக்ஷ்மணவென்று கத்தி, பரமதயாளுவை நிரநுக்ரோசனென்று நிந்தித்து, வேண்யுத்க்ரதநத்திலு மொருப்பட்டதாக தேவரீருடைய திருவாக்கினால்கூடவா ஸாதிப்பது!" என்று யாரேனும் கேட்டிருந்தால் அதற்கு என்ன ஸதுத்தரம் ஸ்வாமி தம்மாலருளிச் செய்யப்பட்டிருக்குமென்பதைக் குறித்து ஸஹ்ருதயஹ்ருதயங்கமமான வோருபந்யாஸநூலை இந்த ஆக்ஷேப்தாக்கள் விபுலமாக எழுதிவைத்தால் உலகமுய்யுமே. இனியாகிலு மிவர்கள் * வம்பார்வினைச் சொல்லவோ எம்மைவைத்த திவ்வான்புனத்தே* என்று நாம் வெறுப்படையவேண்டாதபடி, தேனும்பாலுங் கன்னலுமமுதுமான ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் பலவற்றிலும்புக்கு ரஸவஹமான அர்த்தவிசேஷங்களையெடுத்து விவரித்து உபஹரிப்பார்களா?

6. ஆழ்வார் அகன்று விடுவரோவென்று எம்பெருமான் அதிசங்கித்தது தவிர அகலவேணுமென்கிற நினைவு ஆழ்வாருடைய வுள்ளத்தில் ஒரு மூலையிலு முறைந்ததில்லை — என்னுமிதனை ஜயபேரி முழங்கச் சொல்லுவோம் நாம். இதனை யுள்ளபடி மறுக்கவேணுமாகில் ஆழ்வார் திருவுள்ளத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டவல்ல அவர்தம்முடைய திருவாக்கைக் காட்டியன்றோ மறுக்கவேணும். "வ்யாக்யாநவாசஸ்பதிகளான ஆசாரியர்கள் ஆழ்வார்கருத்தை உள்ளபடி யறிந்து தானே வியாக்கியானம் செய்தருளுகிறார்கள்; அவர்களது திருவாக்கிலே கண்டால் அது ஆழ்வார் திருவாக்கிலே கண்டபடியன்றோ?" என்று கேட்க இவர்கள் முன்வர வேணும். வம்மின் புலவீர்! ஆழ்வார் அகன்றதாகவோ அகல நினைத்ததாகவோ எந்த ஆசாரியர்கள் வியாக்கியானம் செய்தருளினார்களோ, அந்த ஆசாரியர்கள் தாமே மருமத்தை விளக்கிவைத்தார்களே. அது எங்கே எங்ஙனே யென்னில்; ஆழ்வார் அகல்வதென்பது அவனுடைய சில குணாநுஸந்தானத்தின் ப்ரகார பேதமிருந்தபடி யென்று நம்பிள்ளை காட்டியிருப்பதை முன்னைய நூல்களில் பரக்க வுபபாதித்தோம். பிஷ்ட பேஷணம் எவ்வளவு செய்வது? நாமொரு மஹாபாரதமன்றோ எழுதி யிருக்கிறோம். காகத்தின் மீது ப்ரஹ்மாஸ்த்ரம்விட்ட அபக்க்யாதி பெருமாளுக்கு மட்டுமா?

எம்பெருமான் பரிஹாரம் பண்ணாதிருந்தாலும் ஆழ்வார் மேற்பாட்டுத் தொடங்குவரென்று நாமெழுதியிருப்பதாக வைத்து வசைபாடுவது அநுக்தோபாலம்பம். எம்பெருமான் பரிஹாரம் பண்ணாமல் எங்ஙனே யிருந்திடுவன்? இருந்ததில்லையே. இவர்களையே கேட்போம், * வளவேழுலகு முதற்பாட்டில் நைச்யாநுஸந்தானம் பண்ணி அகன்றாரே ஆழ்வார்; அப்போது எம்பெருமான் அதற்கு என்ன பரிஹாரம் பண்ணினான்? ஒன்றும் பண்ணிற்றிலன்; பண்ணியிருந்தா லெடுத்துக் காட்டலாமே. ஒன்றும் பண்ணவில்லை யென்பது திண்ணம். அதனால் ஆழ்வார் இரண்டாவது பாட்டு அருளிச்செய்யாது வாளாவிருந்தாரோ? அவர் தாராளமாகப் பேசிக் கொண்டுதானே யிருந்தார். இரண்டு பாட்டுக்கள் பேசித் தலைக்கட்டின பின்பு பரிஹரிக்கப்பார்த்தவன் முதற்பாட்டுச் சொன்னவுடனே துணுக்கென்று பரிஹரித் திருக்க வேண்டாவா? குழந்தை நெருப்பினருகே போக முயலும்போதே தாய் விலக்கவேணும்; நெருப்பில் கையை வைத்தவுடனேயாவது விலக்கவேணும். ஒருகை யைவைத்து, மற்றொருகையையும் வைத்தபிறகு விலக்கினாளென்றால் இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டோ? இத்தகைய கேள்விகள் நாம் கேட்கத்தகாது; சில அவிவேகிகள் இங்ஙனே கேள்விகள் கேட்டால் விரைந்தெழுந்து விடையிறுக்கக் கடமைப் பட்டுளோம் நாம். ஆயிருந்தும் இங்கே இத்தகைய கேள்விகள்கேட்பது திகைத் தாரைத் தெளிவிக்கைக்காகவே. ஆழ்வான் அதிமாநுஷஸ்தவத்திலே — ஸ்ரீராமா!,

மநுஜத்வ ஸௌஹார்த்தத்தாலே மாயமான் பின்னே சென்று பிராட்டியைப் பிரிந்து அழுது புலம்பி அவள் போனவழி தெரியாமல் மரமே! நீ பார்த்தையா? மயிலே! நீ பார்த்தையா வென்று கேட்டுக்கொண்டு திரியா நிற்கையிலே பெரிய வுடையார்க்குப் பரமபதத்திற்கு வழிகாட்டினையே, இது எங்ஙனே பொருந்தும் பிரானே! என்று மடிபிடித்துக் கேள்விகேட்டிருக்கிறார். இது ஆழ்வான் கேட்கக் கூடிய கேள்வியா? கேள்வியின் கருத்தையறிவாரார்?

[illegible]. மேல் * கேசவன் தமரில் பத்தாம் பாட்டில் * மருடியேலும் விடேல் கண்டாய் * என்றவிடத்து ஈடு—

"உனக்கொரு பிச்சுண்டிறே அவன்வைலக்ஷண்யத்தைப் பாரா வருவது — நாம் இவ்விஷயத்தை தூஷிக்கையாவதென்! என்று அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகலப் பார்ப்பதொன்றுண்டு; அத்தைத் தவிரப்பார்கிடாய்"

என்பது.

மருடியேலு மென்பதற்கு இங்ஙனே பொருள் கொண்டது ஈட்டில் மட்டுமன்று; ஒன்பதினாயிரப்படி இருபத்து நாலாயிரப்படி பன்னீராயிரப்படி ஆக எல்லாப் படிகளிலுமிது காண்கிறது. இத்தனை வ்யாக்யாதாக்களுடைய திருவுள்ளத்தின்படி ஆழ்வார் அயோக்யதாநுஸந்தானத்தாலே அகலப்பார்ப்பதென்று ஒன்றுண்டு என்பதை வ்யாக்யாதாக்களைவிட அதிகமாகவே நாமறிந்திருக்கிறோம். மேலே காட்டிய (மருடியேலும்) விஷயம் இவர்களுடைய திருக்கண்களில் படமாட்டாதாயினும் நம்முடைய ஸித்தாந்தத்திலேயுள்ளது. * தளர்வுற்று நீங்க நினைமாறனை * என்கிற மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியில் இல்லாத விஷயமன்று அது. ஆழ்வார் அகல நினைத்தார், அகன்றார் என்று சொன்றாலொழிய மேற்பாசுரங்கள் ரஸிக்கமாட்டா. திருவாய்மொழியை ஆழ்வார் தொடங்கிவிட்டாலும் அதை எடுப்பும் சாய்ப்புமாக நடத்திக்கொண்டுபோகிறவன் எம்பெருமானுகையாலே ஸமயாநுகுணமாக அவன் தன் திருக்குணங்களை யநுபவிப்பிக்கிறான். சீலகுணத்தை யநுபவிப்பிக்கும்போது ஆழ்வாரிடத்திலே அகல்வதையோ அகலநினைப்பதையோ கண்டாலொழிய ரஸப்படாது. *என்னை நெகிழ்க்கிலு மென்னுடை நன்னெஞ்சந்தன்னை யகல்விக்கத் தானுங்கில்லான்* என்னுமாழ்வாரோ அகலவும்மாட்டார், அகல நினைக்கவும்மாட்டார். அர்ஜுநனை வ்யாஜீகரித்து கீதாசாஸ்த்ரத்தை வெளியிடநினைத்த கண்ணபிரான் 'நிர்வேதமில்லாதவனுக்கு இதை நாம் உபதேசித்தால் ரஸப்படாது' என்று நினைத்தே அவனை நிர்வேதத்துக்கு ஆளாக்கி அகலவடித்து அவனை இசைவிக்கிற வியாஜத்தாலே தனக்கு உத்தேச்யமான கீதாசாஸ்த்ரப்ரகாசநத்தை நடத்திக்கொண்டான். இங்கு ஆழ்வாரிடத்திலே தனது நிகரற்ற சீலகுணாநுபவத்தைச் செய்விக்க நினைத்த எம்பெருமான் இது ரஸப்படுவதற்காக ஒரு அதிஶங்கையைத்தானேறிட்டுக்கொண்டான். * உள்ளுவாருள்

ளிற்றெல்லாமுடனிருந்தறியவல்ல சக்தி எம்பெருமானுக்கிருப்பதுபோலே அவனெண்ணின எண்ணத்தையு மறியவல்லசக்தி நம் ஆசார்ய ஸார்வபௌமர்களுக் குண்டாகையாலே இவர்கள் அந்த அதிசங்கையை நன்கறிந்தவர்களாய், அவன் அதிஶங்கித்தானென்று சொல்வதிற்காட்டிலும் ஆழ்வாரையே அகன்றவராகவைத்துப்பேசினால் ரஸவத்தரமாகுமென்று திருவுள்ளம்பற்றி அதற்குச் சேர வியாக்கியானித்தருளினார்கள். இதுதானும் நாம் ஸ்வகபோலகல்பனையாக எழுதுமதன்று. * பரபரனாய்நின்ற வள் வேழ்வைப்பாமித்யாதி சூர்ணையானது முதற்பத்தின் ஸாரார்த்தங்களை ஸங்க்ரஹித்தருளிச்செய்வது. அதில் * வளவேழுலகின் ப்ரமேயத்தை "புரையறக் கலந்து" என்றிவ்வளவேயான ஸ்ரீஸூக்தியினால் காட்டினார். அங்கு வியாக்கியானம் செய்தருளாநின்ற மணவாளமாமுனிகள் ஆழ்வாரை அகன்றவராகவைத்துப் பேசாமல் "அயோக்யதாநுஸந்தானத்தாலே தாங்களே அகல்வாரையும் தன் குணத்தைக்காட்டி அணுகப்பண்ணி அவர்களோடே புரையறக்கலக்கும் சீலவாந்" என்று பொதுவிலேயிட்டு அருளிச்செய்தார். * தளர்வுற்று நீங்கநினைமாறனை * என்று தாமே யருளிச்செய்ததைத் தாமே விவரித்தருளினாராயிற்று.

7. * வைகுந்தா மணிவண்ணனில் நாலாம் பாட்டுக்கு ஈட்டினவதாரிகை—

"* நாம் மருவிநன்கேத்தியுள்ளிவணங்கி நாம் மகிழ்ந்தாட * என்று தம்முடைய நைச்சியத்தை யனுஸந்தித்தவாறே இவர் நம்மைவிடில் செய்வதென்? என்று அவன் அதிசங்கைபண்ண, நிர்ஹேதுகமாக உன்வடிவழகை நீயென்னையநுபவிப்பிக்க அநுபவித்து அத்தாலே சிதிலனான நான் உன்னைவிட ஸம்பாவனையுண்டோ வென்கிறார்"

என்றிருக்கையாலே இதையும் ஒரு தத்தாகக் கணக்கிட வேண்டாவோவென்பது ஒரு கேள்வி. இதற்கு மருள்தீரச் சொல்லுகிறோம். கடிநஜ்வராபிபூதனாயிருந்தவொருவனுக்கு ஜ்வரம் நிச்சேஷமாக நிவ்ருத்தமானபிறகும் ஸ்வல்ப குறிகளினால் மறுபடியும் இவனுக்கு ஜ்வரம் அநுவர்த்திக்கிறதோ' என்று பரம்பந்துக்கள் அதிசங்கிப்பது இயல்பு. இவ்வதிசங்கை எப்போதுமுண்டாகாது; ஜ்வரம்விட்ட புதுமையில் தானுண்டாகும். அதிசங்கித்தபடி உண்மையாகவே ஜ்வரம் அநுவர்த்தித்தாலும் அது பூர்வஜ்வரசேஷமாகக் கொள்ளப்படுமேயொழிய நூதந ஜ்வரமாக ஒருகாலும் கொள்ளப்படாது. இவ்வண்ணமாகவே இவ்விடத்தைப் பூருவர்கள் நிர்வஹித்துள்ளார்கள். எங்ஙனே யென்னில்; * வைகுந்தன் வந்து * என்ற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் பிள்ளை லோகஞ்சீயர் "இவர் * அல்லாவியென்று அகல நினைக்கிற நைச்சியாநுஸந்தானத்தைக் கண்டு இது என்னாய் விளையக்கடவது! என்று ஈச்வரன் விசாரித்து அவன் சிதிலனாகிற ப்ரகாரத்தை தர்சித்து இப்படி என் விச்லேஷத்தில் அதி பீருவாயிருக்கிற உன்னை நான்

விடேனென்று— * உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கனவே * உன்னை யெங்ஙனம் விடுகேன் * அந்தமிலடிமையடைந்தேன் விடுவேனோ * உன்னை நானடைந்தேன் விடுவேனோ * என்று ஈச்வரனைக் குறித்தருளிச்செய்ய '' என்று பணித்திருப்பதை உற்று நோக்கவேணும். இதனால் என்ன தேறுகிறது ? *வைகுந்தனில் * பிடித்தேன் * எங்ஙனம் விடுவேன் * விடுவேனோ * என வருமிடங்களையெல்லாம் ஒருசேரவெடுத்து ஏகவாக்யமாக்கி இவையித்தனையாலும் எம்பெருமானைத் தேற்றுவதாக நிர்வஹித்திருக்கையாலே இங்குத் தனித்தனி தத்து கிடையாதென்பது தேறிற்று. வைகுந்தாப்ரவேசத்தின் ஈட்டின் அடையவளைந்தானரும்பதவிளக்கத்திலும்—

* அல்லாவியுள்கலந்த * என்றும் * என் முடிவுகாணாதே யென்னுள் கலந்தானை * என்றும் ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ண அதனாலுண்டான அதிசங்கையைப் பரிஹரித்த பாசுரங்கள் (இவையிவை யென்று காட்டுகிறவர்)

'' ஸ்வாஸ்த்ரீ பூர்வகா: * உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கனவே *
*உன்னை யெங்ஙனம் விடுகேன் * உனதந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ *
*தாய்தந்தையுயிராகின்றாய் உன்னைநானடைந்தேன் விடுவேனோ * இதி.

என்றெழுதியுள்ளார். ஆக இவற்றால் மற்றொருதத்தின் பரிகணனைக்கு ப்ரஸக்திலேசமுமில்லை யென்று முடிந்தது. .... (*)

நிகமனம்.

தத்து என்று எங்கே கொள்ளலாம் ? அதற்கு என்ன லக்ஷணம் சொல்லலாமென்று ஆராய்ந்து ச்லோ॥ ஸங்கோசேநைரந்தர்ய நைகட்யாந்வய ஹேதவ: । யத்ர வையாகுல்யம் ஸஞ்ஜாதே தத்ர ஸ்யாத் தத்துவாஸ்திதா ॥ என்று காரிகையிட்டோம். ச்லோ॥ ஸங்கோசே நியதத்ர நைரந்தர்யே ஸாகாங்க்ஷா ஸம்பந்திதா: । ஸகாங்க்ஷதி தத்ரைவ விஜ்ஞேயா தத்துவாஸ்திதா ॥ என்று பிறர்கருத்தின்படி கொள்ளில் நூற்றந்தாதியருளிச்செயலின்படி அபஸரணமே கிடையாதாகையாலே *வளவேழுலகுபதிகத்திலும் தத்து கிடையாதென்று முடிந்து நிற்கும் என்றும் ஆபத்தி கொடுத்திருக்கிறோம். இப்போது பூர்வாசார்யர்கள் — ஸ்வதந்த்ரவாக்ய ஸம்பந்த ஸங்க்ஷேப: । ஏகேநாவாக்யஸ்யத்ராஸ்தி தத்ர ஸ்யாத் தத்துவாஸ்திதா ॥ என்கிறார்கள். நாம் மேலேகொடுத்த ஆபத்திக்கு என்ன பரிஹாரமாயிற்றென்று பார்க்கவேணும். வளவேழுலகு பாட்டும் அதன் மேற்பாட்டும் குளகமன்றே. இரண்டு பாட்டும் தனித்தனியே அந்வயித்து முடியுமவைதானே. முதற்பாட்டில் தத்து இல்லை யென்று சொல்ல முடியாதே. ஆழ்வாருடைய மனோவாக்குக்களுக்கு ஹரிஸம்பந்தவர்ஜநம் அங்கு நிரூபிக்கமுடியுமா ? மூன்றும் பாட்டிலுள்ள * திசைகரன் * என்பது இரண்டாம் பாட்டிலிருந்ததாகில்

.ம்பெருமானுடைய திருவுள்ளத்தில் அங்ஙனே அதிசங்கை தோன்றுகிறது;
அவ்வதிசங்கையினால் ஆழ்வாரை அகலவிடாதே அத்தாணிச் சேவகத்திலே யீடுபடுத்

அங்கு ஹரிஸம்பந்த வர்ஜநம் ஒருவாறு கல்பிக்கலாம். அப்படியில்லை. இதைப் பற்றித் தீர விமர்சித்து ஸூ—த்தரம் வெளியிட ப்ராப்தமானால் இன்னமும் பலபல தத்துவங்களை வெளியிட அவகாசமும் பெற்றோமாவோம். .... (*)

* கோழிவெண்முட்டைக்கென் செய்வதெந்தாய்! குறுந்தடி நெடுங்கடல் வண்ணா! * என்ற திருமங்கையாழ்வாரருளிச் செயலின்படி பிறருடைய அதிபல்பஜமான பேச்சுக்களுக்கு இத்தனைவிரிவு வேண்டாவாயிருந்தது. ஆனால் ஸ்வல்ப வ்யாஜத்தைக்கொண்டு ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக அநல்ப விஷயங்களை உபஹரிப்பது அடியேனுடைய இயல்பாதலால் ப்ரக்ருத விவாதத்தை ஒரு வியாஜமாகக்கொண்டு மூன்றுதத்தின் மூலஸ்தானமென்றும் * நைச்யாநுஸந்தானமென்றும் * ஆழ்வார் திகைப்பு என்று மிங்ஙனே மூன்று நூல்களையியற்றிப் பலபல மருமங்களை விவரிக்க ப்ராப்தமாயிற்று. ப்ரக்ருத விஷயத்தைப்பற்றி ஸாரமாகத் தெரிவிக்கவேண்டியதிவ்வளவே. * வளவேழுலகில் இரண்டுதத்தென்பது அஸங்கதம். முதலில் ஒன்றிரண்டு பாட்டுக்களிலே உண்டான அருவினைநோய் மூன்றாவது பாட்டிலே நிச்சேஷமாக சாந்தமாகவில்லை. மூன்றாவது பாட்டின் ஈட்டின் முடிவிலே "கடுநடையிட்டோடுகிறவர் இவன் சீலகுணத்தை யநுஸந்தித்துக் கால்தாழ்கிறார்" என்றுள்ள சமத்காராதிசயசாலியான ஸ்ரீஸூக்தியினாலே கடுநடையிட்டோடுகை தவிர்ந்து ஓட்டத்திலே தாமதம்கொள்ளப்பட்டதென்று காட்டப்பட்டது. கால்தாழ்கிறார் என்றதன் பொருள் இதுவே. அடுத்தபாட்டினவதாரிகையில் * அவன் தன்னுடைய ஸௌசீல்ய குணத்தாலே என்னைவிடானென்று ஸமாஹிதராகிறாரென்றிருக்கையாலே ஆபிமுக்ய்யத்திலே ஒருப்பாடு உண்டாகிறதென்று கொள்ளக்குறையில்லை. முறைக்காச்சல் மறுமுறையும் அநுவர்த்திக்குமாபோலே இவ்வருவினைநோய் ஏழாம் பாட்டிலே மீண்டு மநுவர்த்தித்தது. எட்டாம் பாட்டிலே நிச்சேஷபரிஹாரமடைந்தது. ஒன்பதாம் பாட்டிலே தம் திருவாக்காலே * தம்மானென்னம்மான் அம்மா மூர்த்தியைச் சார்ந்து—மாயோம் * என்று நோயின் நிச்சேஷ நிவ்ருத்தியைத் தாமே கூறினர். "இனி அகன்று மாயக்கடவோமல்லோமென்கிறார்" என்பது ஈடு. ஆக வளவேழுலகில் ஒரு தத்தேயென்று தீர்ந்தது.

இனி, * அந்தாமத்தன்பிலே தத்து கிடையாதென்றதும் அஸங்கதம் * வளவேழுலகு பொருமாநீள்படையிலுங்காட்டில் அந்தாமத்தன்பில் தத்துதான் மிகப்ரபலமானது. முன்பதிகங்களில் ஆழ்வார் எம்பெருமானைவிட்டு அகன்றாரென்பதோ அகல நினைத்தாரென்பதோ ஆழ்வார் திருவாக்கிலிருந்து தெரிந்துகொள்ள வழியில்லை. இங்கேதான் அது ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்ளலாயிராநின்றது. சில ஸமயம் சந்த்ரக்ரஹணத்தில் ஹு ஸூஸூமயமென்று சொல்லப்படுவதுபோல அந்தாமத்தன்பு அருவினை நோயோடு தலைக்கட்டிவிட்டது. அதனால்தான் எம்பெருமா

னுக்கு அபரிமிதமான துக்கமுண்டாயிற்று. இவர் அடுத்த பதிகம் ஆரம்பிக்க மாட்டார்போலிருக்கிறதே! யென்றெண்ணி மிகவும் அவஸந்நனானன். அந்த அவஸாதத்தைக்கண்ட வாழ்வார், கீழே தாம் ஸாதாரணமாகப் பண்ணின நைச்யாநுஸந்தானம் இவ்வளவு அனர்த்தத்திற்கு அடியாயிற்றேயென்று வருந்தி 'உன்னை நான் விடேன், உன்னை நான் விடேன்' என்று பலகாலுமுரைத்து அவனுடைய அவஸாதத்தையகற்றினர். இது பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் ஸுஸ்பஷ்டமாகவுள்ள விஷயம். அப்ரஸக்த ப்ரதிஷேதம் கூடாமையாலே விடுகை ப்ரஸக்த மாயிற்றென்று இசைந்துதீரவேணும். இது எம்பெருமானுடைய அதிசங்காநிபந்தநமாகவுமாம், மெய்யே ஆழ்வாரிடத்திலுள்ளதாகவுமாம். விடுகை யென்பதும் அகலுகை யென்பதும் பர்யாயமாகையாலே அது இங்கு உள்ளதென்று முடிந்திட்டது. இதில் பிறர் சொல்லுவது, அகல்வரோவென்கிற சங்கையேயொழிய அகன்றமையில்லை யென்று. கேளீர். வைகுந்தாமணி•யொன்பதாம் பாட்டில் * வானேறே யினியெங்குப் போகின்றதே * என்றுராழ்வார். அதற்குமேல் எம்பெருமானுடைய வார்த்தையாகப் பத்தாம் பாட்டினவதாரிகையிலுள்ளது—" நாம் போகாதொழிகிறோம்; நீர் நம்மை விடாதொழிய வேணுமே." என்று. இதனால் ஆழ்வார்விட்டகன்றாரென்கிற நிர்வேதம் எம்பெருமானுக்குள்ளதென்று பிறருடைய கருத்தின்படியும் தேறுகிறது. இவ்வளவு போதும். ... ... (*)

ஶ்லோ ‖ [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖
[illegible] ।
[illegible] ‖
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய
ஆசார்ய ஹ்ருதயபாட பரிஷ்காரத்தில் ஆழ்வார்திகைப்பு
முற்றிற்று.

*பெருமானுடைய திருவுள்ளத்தில் அங்ஙனே அதிசங்கை தோன்றுகிறது; அவ்வதிசங்கையினால் ஆழ்வாரை அகலவிடாதே அத்தாணிச் சேவகத்திலே யீடுபடுத்